# முதுவர் - பழங்குடிகள்

799/93

டாக்டர் கா. மஞ்சுளா

Y567
N92
195488

புத்தக நிலையம்

நாட்டுப்புறவியல்

# 'முதுவர்' – பழங்குடிகள்

டாக்டர் மஞ்சுளாகனகராஜ் எம்.ஏ.,எம்.பில்.,
பி.எச்.டி.,

ஆய்வு இணைவர்.
தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

**மீனாட்சி புத்தக நிலையம்**
60, மேலக்கோபுரத் தெரு,
மதுரை-625 001

முதற்பதிப்பு: டிசம்பர் 1992

உரிமை பதிவு.

விலை ரூ 15–00

Muthuvar Pazhangudigal
Folklore

By Manchula Kanagaraj
I Edition 1992
Price Rs: 15-00
10 Pt. Letters
18 × 12. 5 Cms
White Printing Paper

Pages 110
Box Board Binding
Printed at
Akaram Achagam
Sivagangai 623 560.
Published by The Authour

Selling Right

Meenakshi Puthaka Nilayam
60, West Tower St., Madurai -- 625001.

'தமிழண்ணல்' முனைவர்
இராம. பெரியகருப்பன்

'ஏரகம்'
4/585 சதாசிவநகர்
வண்டியூர்ச் சாலை
மதுரை-625 020

# அணிந்துரை

முனைவர் திருமதி மஞ்சுளா மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் எம்.பில் ஆய்வுப் பட்டத்திற்குப் பயின்றபோது 'முதுவர் பழங்குடிகள்' ஆய்வு அவருக்குத் தரப்பெற்றது. அவரது சொந்தவூர் போடிநாயக்கனூர் என்பதால், அப் பகுதிப் பழங்குடிமக்கள் பற்றிய இவ்வாய்வு அவருக்குப் பொருத்தமுடையதாயிற்று. ஆயினும் கள ஆய்வையே மையமிட்டதாகிய இதனை, மகளிர் மேற்கொள்வது கடினமென எண்ணினோம். ஆயினும் அவர் இதனை மனஉறுதியுடன் ஏற்றதுமட்டுமன்றி, தன் தமையனாருடன் பலமுறை அப் பழங்குடியினர் வாழும் பகுதிகட்குச் சென்று வேண்டிய அளவு தரவுகள் திரட்டிவந்து, இவ்வாய்வைத் திறம்பட எழுதி முடித்தார். அதனால் இவர் தமது திறமையிலும் உழைப்பிலும் ஈடுபாட்டிலும் பிறர் மதிப்புக்கொள்ளுமாறு செய்தார்.

பின்னர் இவர் பிஎச்.டி. ஆய்வுசெய்ய எளிதில் இடம் பெற்றார். சங்க இலக்கியத்தில் நோக்குக்கோட்பாடு பற்றி முதன்முதலாக ஆராய்ந்த பெருமை இவருக்குரியதாகும். நோக்குப் பற்றித் தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் விளக்கியுள்ளனர். இது, உலக இலக்கியங்கள் அனைத்திலும் ஏற்றிப்பார்க்கத்தக்க கோட்பாடாகும். இதனை ஒருவகைத் 'தமிழ்நெறித் திறனாய்வு' என்றே குறிப்பிடலாம். இந் நோக்குக் கோட்பாட்டை வரையறைப்படுத்திக் கொண்டு,

இலக்கியங்களில் ஏற்றிப் பார்க்கிற நடைமுறைத் திறனாய்வைச் செயற்படுத்தவேண்டும் என்பது என் விருப்பம். என் விருப்பத்தை ஏற்று, நோக்குக்கோட் பாட்டை நன்கு கற்று, வரையறைப்படுத்திக்கொண்டு அதைச் சங்கப்பாடல்களில் ஏற்றிப் பார்த்த திருமதி மஞ்சுளா கனகராசு நம் பாராட்டுக்குரியவராகிறார்.

இவ்வாய்வு பழங்குடிகள் பற்றிய நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வாகும். இதன்மூலம் சங்ககாலம் தொட்டுச் சில வாழ்க்கைமரபுகள் இன்றளவும் மாறாமல் நிலைபெற்றிருப்பது புலனாகிறது.

அவரையும் அவருக்குச்சிறந்த வாழ்க்கைத்துணையாய் விளங்கும் திரு **கனகராசு** அவர்களையும் வாழ்த்து கிறேன்.

**தமிழண்ணல்**

# நன்றியுரை

எனது ஆய்வு சிறந்த முறையில் அமைவதற்கு ஏற்ப என்னை நெறிப்படுத்திய எனது ஆய்வு நெறியாளரும் முன்னைய தமிழியல் துறைத் தலைவருமாகிய டாக்டர் **இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)** அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

களஆய்விற்காக மலைக்குச் செல்லும் போதெல்லாம், என்னுடன் வந்து மெய்வருத்தம் பாராது உதவிபுரிந்த எனது சகோதரர் **கா. சுகுமார்** அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும்.

எனக்கு யு.ஜி.சி,யின் ஆய்வு இணைவர் பணிசெய்ய இடம்தந்து ஊக்கப்படுத்திவரும் பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **சிற்பி பொ. பாலசுப்பிரமணியன்** அவர்கட்கும் என் ஆய்வுத் திட்டத் தின் நெறியாளர் இணைப் பேராசிரியர் முனைவர் **இரா. சந்திரசேகரன்** அவர்கட்கும் என் நன்றி உரிய தாகும். இந்நூலை அழகுற அச்சிட்டு வெளியிட உதவிய மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் **செ.செல்லப்பன்** அவர்கட்கும் அகரம் அச்சகத்தாருக் கும் என் நன்றி உரியது.

கோயம்புத்தூர் **மஞ்சுளா கனகராஜ்**

*20.12.92*

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 9 |
| 2. | பெயர்க்காரணமும் இடப்பெயர்ச்சியும் | 17 |
| 3. | வாழ்க்கை முறை | 25 |
| 4. | தொழில்கள் | 37 |
| 5. | சடங்குகள் | 48 |
| 6. | வழிபாடும் திருவிழாக்களும் | 61 |
| 7. | நாட்டுப் புறக்கூறுகள் | 76 |
| | புகைப்படங்கள் | 89 |
| | துணை நூற்பட்டியல் | 95 |
| | **பின்னிணைப்பு** | |
| 1. | தகவலாளர் அகரவரிசைப் பட்டியல் | 99 |
| 2. | பாட்டுகள் | 100 |
| 3. | கதைகள் | 104 |
| 4. | வழக்குச்சொற்கள் | 106 |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| உ.ஆ. | உரை ஆசிரியர் |
| ஒ.பா.இ.எண் | ஒப்பிட்டுப் பார்க்க இயல் எண் |
| ஒ.பா.பி. எண் | ஒப்பிட்டுப் பார்க்க பின்னிணைப்பு எண் |
| தொ.பொ. | தொல்காப்பியம்—பொருளதிகாரம் |
| தொ.பொ.அ | தொல்காப்பியம்—பொருளதிகாரம்—அகத்திணையியல் |
| தொ.பொ.க. | தொல்காப்பியம்—பொருளதிகாரம் களவியல் |
| ப. | பக்கம் |
| பக். | பக்கங்கள் |
| பா. | பாடல் |
| ப.ஆ. | பதிப்பு ஆசிரியர் |
| நூ. | நூற்பா |
| மொ.பெ.ஆ | மொழிபெயர்ப்பு ஆசிரியர் |
| lbid | lbidem-in the same work |
| p. | page |
| pp. | pages |
| Vol. | Volume |

‘முதுவர்’-பழங்குடிகள்

# 1. முன்னுரை

*1.1* தென்னிந்தியாவில் பல்வேறு இடங்களில் பழங்குடிகள் வாழ்கிறார்கள். இப்பழங்குடிகள் மலைகளில் வாழ்கிறார்கள். நாகரிகமற்ற நிலையில் வாழும் இம்மக்களின் வாழ்க்கைமுறை வித்தியாசமாக உள்ளது. இம்மக்களைப் பற்றிய செய்திகளை நேரிடையாக அறிந்துகொள்வது கடினம். நூல்களில் வெளிவரும் செய்திகள் மூலம்தான் இப்பழங்குடியினரைப்பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது. மக்களுடன் தொடர்பின்றி மலையில் வாழும் இம்மக்களிடம் செல்வது கடினம். அதிலும் அவர்களைப்பற்றிய செய்திகளை அவர்களிடமிருந்தே சேகரிப்பது அதைவிடக் கடினம். இப்பழங்குடிகளில் ஒரு பிரிவினரான ‘முதுவரின்’ சமூகத்தினை நேரடியாகவும் நூல்வழியாகவும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

### 1.2 உந்துதல்

பழங்குடி மக்களைப்பற்றிப் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. பொதுவாகத் தமிழ்மொழியில் பெண்கள் இம்முயற்சியில் ஈடுபடத் தயங்குவர். பெண்கள் இத்துறையை எடுத்துச் செய்வது சிறிது இடர்ப்

பாடான செயலாகும். ஆயினும் இவ்வெண்ணத்தைப் போக்கவும், புதுமையாக ஒன்றைப்பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைச் சிறக்கச் செய்யவும் வேண்டுமென்ற முயற்சியே இவ்வாய்விற்கு அடிப்படை உந்துதலாகும்.

## 1.3 ஆய்வுநோக்கம்

பழங்குடிகளுள் ஓர் இனத்தினரான 'முதுவரை'ப்பற்றி அறிதலே இவ்வாய்வின் தலையாய நோக்கமாகும். மலையில் வாழும் இவ்வினத்தவரின் இடப்பெயர்ச்சி, பெயர்க்காரணம் போன்றவற்றை அறிதல், வாழ்க்கையில் நடைபெறும் செய்திகளைக் காணல், நாகரிக மற்று மலையில் வாழும் இம்மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் காணல் இம்மக்களிடையே காணப்படும் நாட்டுக்கூறுகளில் சிலவற்றை அறிதல், இவர்களது மொழியினை அறிதல் ஆகியனவும் இங்கு நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன. 'முதுவரை'ப்பற்றிய சில கட்டுரைகள்தான் ஆய்வாளருக்குக்கிடைத்தன. அப்படிக் கிடைத்த கட்டுரைகளில் செய்திகள் விரிவாக இல்லை. அவர்களுடைய வாழ்க்கை முறையினை முழுமையாக ஆராய்ந்து, தெளிவாக வெளியிடுவதே இவ்வாய்வின் நோக்கமாக இருப்பினும் 'காலவரையறை'யை முன்னிட்டுச் சுருக்கமாக ஆய்வு நோக்கம் அமைந்துள்ளது. இவர்களைப்பற்றிய ஆய்வு தொடர்ந்து செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

## 1.4 கருதுகோள்

முதுவர் பழங்குடிகள், நகர்ப்புற மக்களின் வாழ்க்கையிலிருந்து வேறுபட்டவர்கள். நாகரிகமடைந்துவரும் முதுவர் பழமையிலிருந்து புதுமைக்கு மாறி வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைமுறைகள் நம்மிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அறிவதே இவ்வாய்வின் கருதுகோளாகும். தமிழகத் தொல் பழங்குடிகள் சங்ககாலம் முதல் இங்குப் பின்பற்றப்பட்டுவரும் சில அகப்புற நாகரிகங்களை உள்ளவாறே பிரதிபலிக்கின்றனர் என்பதை மனதுட் கொண்டு ஆராய்வதும் ஒரு கருத்தாகும்.

## 1,5 பயன்

முதுவர் பழங்குடியினரை ஆராயத்தொடங்கியபோது அவர்களுடைய பூர்வீகம், பெயர்க்காரணம், தற்பொழுது வாழும் இட அமைப்பு, பழக்கவழக்கங்கள், தொழில்கள், சடங்குமுறைகள், வழிபடும் தெய்வங்கள், பாடல்கள், நம்பிக்கைகள், செய்வினைகள் செய்தல், 'முதுவாப்பாசை' என்ற அவர்களுடைய மொழி ஆகியவை அறியக்கிடைத்தன. பழங்குடியினரைப்பற்றி அறிந்துகொள்ள ஒரு சிறந்த வாய்ப்பாக இருந்தது இவ்வாய்வு. 'முதுவர்' பற்றிய ஆய்வு அவர்களிடையே நிலவும் பல்வேறு செய்திகளை அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக இருந்ததோடு 'நாட்டுப்புற மக்கள்' என்று அவர்கள் குறிப்பிடும் நமது நகர்ப்புற மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து அவர்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் அறியமுடிந்தது. மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கு, மேற்கூறிய செய்திகளெல்லாம் முதற்படியாக இவ்வாய்வில் அமைந்துள்ளன.

## 1.6 ஆய்வுக்களம்–எல்லை

முதுவர் என்ற பழங்குடியினரைப்பற்றிய ஆய்வு விரிவான ஆய்வாகும். பல்வேறு இடங்களில் இவ்வினத்தினர் வாழ்கிறார்கள்.'போடி நாயக்கனூருக்கு அருகில் உள்ள 'குரங்கணி' என்ற ஊரிலுள்ள 'கீழ்முட்டம்', 'மேல்முட்டம்' என்ற மலைப்பகுதிகளில் வாழும் முதுவரைப்பற்றி ஆராய்வதுதான் ஆய்வுக்குரிய எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளது.போடிமெட்டுக்கு அருகில் உள்ள 'பியால்ரான்' என்ற பகுதியில் வாழும் மூன்று குடியிலும் கள ஆய்வு செய்யப்பட்டது. போடிமெட்டுக்கு மேலே உள்ள பகுதி கேரள அரசுடன் இணைந்துள்ள பகுதியாகும். தமிழக அரசின் கீழ் உள்ள பகுதியை மட்டும் ஆய்வின் எல்லையாகக் கொண்டதால்' 'குரங்கணி' பகுதியில் வாழும் 'முதுவர்' பழங்குடிகளைப்பற்றி மட்டும்தான் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. குரங்கணி மலையில் உள்ள மக்களின் வாழ்க்கை பழமையான முறையில் இருப்பதால் இம்மக்கள்மட்டும் ஆய்வுக் களமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆய்வின்

கால எல்லை குறுகியது. களஆய்விற்காக எல்லா இடங்களுக்கும் செல்ல வாய்ப்பில்லாததாலும், கேரள அரசில் இணைந்துள்ள அனைத்துக் குடிகளையும் ஆராய வாய்ப்பில்லாத காரணத்தாலும், 'தமிழக அரசின் கீழ் உள்ள முதுவரை மட்டும் ஆய்வதே இவ் வாய்வின் எல்லையாகும். மேலும் இங்குக் கிடைத்த செய்திகளே இச்சிறிய ஆய்வேட்டின் பக்க எல்லைக்குப் போதுமானவையாக இருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## 1.7 அணுகுமுறை

பெரும்பாலும் சமுதாயவியல் அணுகுமுறையே இங்கு மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குச் செய்திகள் எல்லாம் களஆய்வில் திரட்டப்பட்டவையே. களஆய்வின்போது தகவலாளிகளை அணுகி, வினாப் பட்டியலின் துணைக்கொண்டு பேட்டி காணும் முறையே பின்பற்றப்பட்டது. வினாநிரல் மூலம் செய்தி சேகரிப்பது நேரடி ஆய்வின் மூலம்தான் திரட்டப் பட்டது. இடப்பெயர்ச்சியைப்பற்றி ஆராய்வதால் வரலாற்றுமுறை ஆய்வும், பிற பழங்குடிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் ஒப்பீட்டுமுறை ஆய்வும் கையாளப்பட்டுள்ளன.

## 1.8 ஆய்வுமுன்னோடிகள்

*1.8.1* பழங்குடிகள் பற்றிய ஆய்வு சமூகவியல்துறை யில் தெளிவாகச் செய்யப்பட்டுள்ளது. பழங்குடிகள் பற்றிய பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இ. தர்ஸ்ட்டன் (E. Thurston) எழுதிய தென்னிந்தியச் சாதிகளும், பழங்குடிகளும் (Castes and Tribes of Southern India)[1] என்ற ஆங்கில 'நூலில்' முதுவர் பற்றிய கட்டுரை உள்ளது. இக்கட்டுரை தமிழ் நூல் களில் உள்ள கட்டுரைகளைவிட விரிவாக உள்ளது. இவர்களது இடப்பெயர்ச்சி, காலம்பற்றிய செய்தி, வாழும் இடங்கள் பற்றிய செய்தி, வாழ்க்கைமுறை யில் இடம்பெறும் சடங்குகள் தொழில்கள் போன்ற வைகளை விரிவாக எழுதியுள்ளார்.

1. Edgar Thurston, Mudusr, Castes and Triees of Southern India, Vol.V.

1.8.2 தமிழ் நூல்களில் 'முதுவர்' பற்றிய செய்தி களைக் கட்டுரை வடிவில்தான் தந்துள்ளார்கள். இவர்களைப்பற்றி மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார்கள். சு. சக்திவேல் எழுதிய ''பழங்குடிகள்''[2] என்ற நூலில் 'முதுவர்' பற்றிய கட்டுரை சிறிதளவு 'முதுவர்' பற்றிய செய்திகளைக் கூறுவதாக உள்ளது.

1.8.3 ந.சி. கந்தையாபிள்ளை, ''தென்னிந்திய குலங் களும் குடிகளும்''[3] என்ற நூலில் 'முதுவர்' பற்றிய கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக்கட்டுரையிலும் தெளிவான செய்திகள் இல்லை.

1.8.4 அடுத்ததாக சோமலெ, ''மதுரை மாவட்டம்''[4] என்ற நூலில் 'வாழும் மக்கள்' என்ற கட்டுரையில் 'முதுவர்' பற்றி எழுதியுள்ளார்.

1.8.5 மேற்கூறிய மூன்று கட்டுரைகள்தான் 'முதுவர்' பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள முன்னோடி யாக இருந்தன. 'முதுவர்' பற்றிய தனியான நூல் எதுவும் கிடைக்கவில்லை. பழங்குடிகளில் ஒரு பிரிவின ரான 'முதுவர்' பற்றிய செய்திகளை மிகக்குறை வாகவே இக்கட்டுரைகள் மூலம் பெறமுடிந்தது. 'முதுவர்' பற்றிய ஆய்வு மேலும் தொடர்ந்து செய் வதற்குரிய ஒன்றாகும்.

## 1.9 சான்று மூலங்கள்

களஆய்வில் திரட்டப்பட்ட தகவலாளிகளின் தகவல் களே அடிப்படைத்தரவுகளாகக்கொள்ளப்படுகின்றன. இத்தரவுகளை ஆய்வுசெய்து அவற்றின் மெய்ம்மைத் தன்மையை நிலைநாட்ட இவ்வினமக்கள் பற்றி வெளி வந்துள்ள நூல்கள், தகவலாளிகள் கூறிய கதைகள், இலக்கியச்செய்திகள்போன்றவை சான்றாதாரங்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

---

2. சு. சக்திவேல், முதுவர், பழங்குடிகள்,
3. ந.சி.கந்நையாபிள்ளை, முதுவர், தென்னந்தியக் குலங்களும் குடி களும்
4. சோமலெ, வாழும் மக்கள், மதுரை மாவட்டம்.

## 1.10 இயல் அமைப்பு

முதுவர்களின் வாழ்க்கை நிலையினை முழுவதும் ஆராய முடியவில்லையெனினும் ஆராயப்போகும் செய்திகள் முழுவதும் அவர்களின் வாழ்க்கை முறையினை ஒட்டியவை. அவர்களுடைய சமூகத்தினை அடிப்படையாகக்கொண்டே இவ்வாய்வேட்டின் இயல்கள் பகுக்கப்பட்டுள்ளன,

*1.10.1* 'பெயர்க் காரணமும் இடப்பெயர்ச்சியும்' என்ற இயலில் போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குரங்கணி மலையில் வாழும் பழங்குடியினரிடம்திரட்டப்பட்ட செய்திகள் மூலம் முதுவர்கள் எந்த இடத்திலிருந்து இடப்பெயர்ந்துள்ளார்கள்என்ற செய்தியும், 'முதுவர்' என்றபெயர்க்காரணம் பற்றிய செய்தியும் அடங்கியுள்ளன. முதுவர் என்ற பழங்குடியினரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிந்துகொள்வதற்குமுன், அவர்களின் பூர்வீகம் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள நுழைவாயில் போன்றுள்ளது, இவ்வியல்.

*1.10.2* 'வாழ்க்கைமுறை' என்ற இயலில் தற்பொழுது வாழுமிடத்தின் அமைப்பு முறையும், அவர்களின் பழக்கவழக்கங்கள், நிர்வாக அமைப்பு போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன.

*1.10.3* 'தொழில்கள்' என்ற இயலில் அவர்கள் இனத்துப் பெண்களும் ஆண்களும் செய்யும் கைத்தொழில்களையும், தோட்டவேலையாக அவர்கள் நிலத்தில் செய்யும் தொழிலையும், முதலாளிகளிடம் கூலிவேலை செய்யும் முறையையும் இவ்வியல் கூறுவதோடு அவர்களுடைய வியாபாரத்தையும் கூறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இவ்வியல்.

முன்னுரைக்கு அடுத்த இயலாக முதுவர் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்பதாலும், வாழ்க்கை முறையைப்பற்றி அறியும்போது வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழில்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதாலும் இம்மூன்று இயல்களும் தொடர்ச்சியாக வைக்கப்பட்டுள்ளன.

*1.10.4* 'தொழில்கள்' என்ற இயலில் அவர்களுடைய

வாழ்க்கைத் தரத்தை அறிந்துகொண்டவுடன், வாழ்க்கைத் தரத்துக்கேற்பச் சடங்கு முறைகள் எவ்வாறு உள்ளன என்பதைக் கூறும் 'சடங்குகள்' பற்றிய இயல் நான்காவது இயலாக உள்ளது. இவ்வியல், 'சடங்குகள்' என்ற முறையில் வாழ்வுச்சடங்குகள், இறப்புச் சடங்குகள் என்ற இருவகைச் சடங்குகளைப் பற்றிய செய்திகளைக் கொண்டதாக உள்ளது. சடங்கு முறையில் அவர்களுடைய பழமையான முறைகளையும் காணமுடிகிறது.

1.10.5 'வழிபாடும் திருவிழாக்களும்' என்ற இயலில் மலையில் வாழும் மக்கள் வழிபடும் தெய்வங்கள், வழிபடும்முறை, வழிபடும் நாள் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

1.10.6 'நாட்டுப்புறக் கூறுகள்' என்ற இயலில் நாட்டுப்புறக் கூறுகளாகத் திரட்டப்பட்ட சில செய்திகள் இடம்பெறுகின்றன. தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பாடல்களின் செய்திகளை மட்டும் கூறுவதோடு, அவர்களிடம் காணப்படும் கதைகள், மருத்துவம், செய்வினைகள் போன்ற செய்திகளையும் உள்ளடக்கியுள்ளது.

1.10.7 அடுத்து ஆய்விற்குத் துணை செய்த நூல்களின் பட்டியல் அமைந்துள்ளது. ஒவ்வோரியலின் இறுதியிலும் அவ்வியலிற்கண்ட செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பல கூறுகளில் முதுவர்கள் நம்மைப் போல் காணப்பட்டாலும் அவர்களிடையே காணப்படும் சிறப்புக் கூறுகள் மிகுதியாகும். அவற்றுள் பல நம் பழம்மரபுகளை நினைவூட்டுவனவாக இருப்பதே இவ்வாய்வின் பயனாகக் கிடைக்கும் செய்தி எனலாம்.

1.10.8. தகவலாளியின் பெயர்ப்பட்டியல், ஆய்வில் பயன்படுத்தப்பட்ட வினா நிரலின் மாதிரிப்படிவம், இவ்வாய்வு தொடர்பாக களஆய்வில் திரட்டிய பாடல்கள், கதைகள், 'முதுவாப்பாசையில்' சில சொற்கள், புகைப்படங்கள் ஆகியன பின்னிணைப்பாக இடம்பெற்றுள்ளன.

1.10.9 முதுவர்களிடம் உரையாடி நேரடியாகச் செய்திகளைத் திரட்டியபோது அவர்கள் குறிப்பிடும் சொற்களே இவ்வாய்வில் எடுத்தாளப்பட்டுள்ளன.

நகரத்தில் வாழும் மக்களை 'நாட்டுப்புறமக்கள்' என்று களஆய்வில் தகவலாளி கூறியதால், அவர்கள் கூறிய சொல்லே எடுத்தாளப்பட்டுள்ளது.

முதுவர்கள் தங்களுடைய மொழியினை 'முதுவாப் பாசை' என்று கூறுவதால் அவர்களது மொழி 'முது வாப்பாசை' என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

1.10.10 'முதுவாக்குடி' என்று இவர்கள் தங்களைக் கூறிக் கொள்கிறார்கள். 'முதுவார் என்ற சொல்லை அவர்களிடமிருந்து அறியமுடிந்தது. ஆனால் முன் னால் செய்த ஆய்வாளரின் நூல்களில் இவ்வினத் தவரை 'முதுவர்' பழங்குடிகள் என்றே குறிப்பிடுவ தால் இவ்வாய்விலும் 'முதுவர்' என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

# 2. பெயர்க்காரணமும் இடப்பெயர்ச்சியும்

## 2.1 முன்னுரை

தொன்மையான நாகரிகம் கொண்ட தமிழகத்தின் பல பகுதிகளில் பழங்குடி மக்கள் மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். பழங்குடி என்பதற்கு விளக்கமாக, ''தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்''[1] என்கிறார் பரிமேலழகர். இன்று இந்திய நாட்டில் மூன்று கோடிக்கும் அதிக மான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர் என்று க. கைலாசபதி கூறியுள்ளார்.[2] இப்பழங்குடியினருள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இருபத்திமூன்று பழங்குடியினர் வாழ்வதாக, 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பு கூறுகிறது[3]. இவ்விருபத்தி மூவருள் ஒருவரே முதுவர் பழங்குடியினர். இம்முதுவர் பழங்குடிகளின் பூர்வீகம், இடப்பெயர்ச்சி, பெயர்க் காரணம் ஆகியவற்றை ஆராய்வதாக இவ்வியல் உள்ளது.

## 2.2 முதுவர்-அறிமுகம்

*2.2.1 'முதுவர்' இனத்தார் தொல் தமிழரா அல்லது*

1. பரிமேலழகர் (உ.ஆ). திருக்குறள், பா.15.
2. க. கைலாசபதி, நரிக்குறவப் பழங்குடி மக்கள், அணிந்துரை.
3. ஆர். பெரியாழ்வார், இருளர் வாழ்வியல், ப.1.

தொல் திராவிடரா என்று யூகிக்க அவர்கள் பேசும் மொழி, உடல்அமைப்பு, பூர்வீகம் பற்றிய செய்திகள் போன்றவை உதவுகின்றன. முதுவர் இனமக்களின் மொழியான 'முதுவாப்பாசை' என்பது தமிழும், மலையாளமும் கலந்த மொழியாக உள்ளது. மேலும் முதுவர் தமிழ் நன்கு பேசுகின்றார்கள். "திராவிடர்கள் நீளமான மண்டையோடும், குறுகிய உருவமும் சற்றுச்சப்பையான மூக்கும், கறுப்பு மயிரும் கொண்டவர்கள்"[4] என்று கூறுகிறார் ந.க. மங்களமுருகேசன். போடி ஏலக்காய் மலை, காப்பி மலைகளில் குடியிருக்கும் முதுவர்களின் உடலமைப்பும் தமிழர்களின் உடலமைப்பினை ஒத்துக் காணப்படுகிறது. நிறத்துடன், சப்பையான மூக்கும்,கரிய கூந்தலும்கொண்ட ஆண், பெண் இருபாலரும் காண்பதற்குத் தமிழர்கள் போல்தான் இருக்கிறார்கள்.

2.2.2 'முதுவர்' என்பதற்குத் தமிழ் அகராதியில் 'ஒருசார் மலைச்சாதியினர் (A hill tribe)[5] என்ற குறிப்பு காணப்படுகிறது. 'முதுநீர் மலையாளர்' என்பதற்கு 'மலையில் வாழும் ஒருவகைச்சாதியார்' (A set of hill-men)[6] என்ற குறிப்பும் உள்ளது. 'முதுகுடிப்பிறந்தோன்'[7] என்ற பாடல்அடி சிலப்பதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளது. இலக்கியச் சான்றுகளைக்கொண்டு நோக்கும்போது 'முதுகுடி' என்பது தொன்மையான குடி என்றும், 'முது' என்ற சொல்லின் அடிப்படையில் பெயர்கொண்ட 'முதுவர்' என்ற பழங்குடிகள் மலையில் வாழும் தொன்மையான இனத்தினர் என்றும் கொள்ள இடம் இருக்கிறது.

## 2.3 முதுவர்-பெயர்க்காரணம்

2.3.1 முதுவர் என்ற பெயருக்கு மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன.

போரின் காரணமாகப் பாண்டிய நாட்டைவிட்டுப்

---

4, ந.க. மங்கள முருகேசன், இந்தியச் சமுதாய வரலாறு. ப.29.
5. Tamil Lexicon, Vol Vi Part I, P. 3267.
6. Ibid.
7. சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், ப.524.

புறப்படும் போது, முதுகில் மீனாட்சி சிலையைச் சுமந்துகொண்டு வந்தார்கள்.

பாண்டியனின் இறந்த உடலை முதுகில் சுமந்து வந்தார்கள்.

பாண்டியனுடன், மதுரையை விட்டுப் புறப்பட்ட போது தங்கள் குறந்தைகளை முதுகில் சுமந்து கொண்டு வந்தார்களா. மீனாட்சி சிலை,பாண்டியனின் இறந்த உடல், குழந்தை என்ற மூவரையும் சுமந்து வந்ததாக மூன்று கதைகளின் மூலம் அறியமுடிகிறது. இம்மூன்று காரணங்களில் மூன்றாவதாகக் கூறிய 'முதுகில் குழந்தையினைச் சுமந்து கொண்டுவந்தார் கள்' என்பது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஏனெனில் இன்றும் பெண்கள் முதுகில் குழந்தையுடன் தான் இருக்கிறார்கள்.

2.3.2 அன்று மரம்,செடிகளை வெட்டிப் பாதை யாக்கப் பயன்பட்ட கத்தியை ஆண்கள் முதுகில் உள்ள உறையில் வைத்துள்ளார்கள். முதுகில் கத்தியுடன் இருப்பதால் தங்களை 'வெட்டுங்குடி' என்றும் கூறு கிறார்கள். நடக்கும் வழியில் செடிகள் முளைத்திருந் தால், இந்தக் கத்தியைக்கொண்டே வெட்டிவிட்டுச் செல்கிறார்கள். ஆண்கள் முதுகில் கத்தியுடன் வேலைக்குச் செல்லும் இடங்களில் கிடைக்கும் தேன், கிழங்கு போன்றவற்றை முதுகில் உள்ள உறையில் தான் பேட்டுக்கொள்கிறார்கள். முதலில் முதுகில் சுமந்து வந்தாலும், இன்றும் முதுகில் பொருட்களைச் சுமந்து கொண்டு இருப்பதாலும், 'முதுவர்' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகிகின்றார்கள். 'முதுவர்' என்பதன் பழைய வடிவம் (prototype) 'முதுகர்' என்பதாக இருக்கலாம் என்று எண்ணத்தோன்று கிறது. முதுகர் என்ற பெயர் இருந்திருக்கலாம் என்பதைத் தகவலாளியின்[8] மூலம் அறியமுடிந்தது. முதுகில் சுமந்து வந்ததால் 'முதுகர்' என்ற காரணப் பெயர் தோன்றி, அப்பெயர் நாளடைவில் பேச்சு வழக்கில், ககரம் வகரமாகி முதுவர்(முதுகர் > முதுவர்) என்று மாறியிருக்க லாமோ என்று தோன்றுகிறது.

8. தேவன முதுவன்,வயது 60மேல்முட்டம்.,

### 2.3.3 முது – தொன்மையான குடி

'முது' என்றால் வயதான என்று பொருள் தரும். முது என்ற சொல்லுடன் 'வர்' இணைந்து முதுவர் என்று ஆகியிருக்கவேண்டும். 'முதுவர்' என்ற பெயர்க் காரணம் 'தொன்மையான குடி'யிலிருந்து வந்ததாக இருக்கவேண்டும் என்று முதுவர் பற்றிய ஆய்வில் ஈடுபட்டிருக்கின்ற ஆய்வாளர்[9] ஒருவர் நேர்முகப் பேட்டியின்போது கூறினார். மற்ற பழங்குடிகள் முதுவர் இனத்தவரை 'மூத்தோர்' என்று அழைப்ப தாக முதுவர்கள் கூறுவதால் மற்ற பழங்குடிகளைவிட இவர்கள் மூத்தகுடி என்பதை அறியமுடிகிறது. இலக்கியச் சான்றுகளும் முதுகுடி என்பது 'தொன்மை யான குடி' என்றுதான் கூறுகின்றன.

2.3.4 மேற்கூறிய பல சான்றுகளாலும், பாண்டியர் பரம்பரையில் வந்தவர்கள் தாங்கள் என்று கூறுவ தாலும் 'முதுவர்' என்ற பெயர் தொன்மையான குடி என்பதால் வந்திருக்கக்கூடும் என்பதை அறியமுடி கிறது, முதுவர் என்பதற்கு, முதுகில் சுமந்து வந்ததால் என்று கூறும் பெயர்க் காரணத்தைவிட, மேற்கூறிய பெயர்க் காரணம் பொருத்தமுடையதாக, ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

## 2.4 பூர்வீகம்

2.4.1 முதுவர்களின் பூர்வீகம் தமிழகம், அதுவும் மதுரை என்று அவர்கள் கூறுவது 'முதுவர்' தமிழர் களாக இருக்கலாமோ என்ற ஐயத்தைத் தோற்று விக்கிறது. மேலும் மற்ற பழங்குடிகளைவிட வாழ்க்கை முறையிலும் இவர்கள் மாறுபடுகின்றார்கள். பழங்குடி களாக இருப்பினும். திருமணம், வாழ்க்கைமுறை முதலியவற்றில் கட்டுப்பாடு உடையவர்களாக இருக் கிறார்கள். இவற்றையெல்லாம் நோக்கும் போது முதுவர் இனத்தினர் தமிழர் என்று கொள்ள வாய்ப்பி ருக்கிறது.

### 2.4.2 பூர்வீகம் பற்றிய கதை

முதுவர்களின் பூர்வீகத்தைப்பற்றிய கதை, அவர்களின்

9. வி, ஆர், பிரபோதச்சந்திரன் நாயர், பேட்டி, நாள் 21.3,1983.

நம்பிக்கையையும், அவர்கள் காடுகளில் வாழ்வதற்கான காரணத்தையும் வெளிப்படுத்துகிறது.

2.4.2.1 பாண்டியன் உடல் அடிமாலிக்கருகேயுள்ள 'சேரன் தோடு' என்னும் இடத்தில் (இதுதான் பாண்டிய நாட்டிற்கும் சேர நாட்டிற்குமான எல்லை) புதைக்கப்பட்டுள்ளது. பாண்டியன் மீண்டும் வந்து பிறப்பான். அவன் பிறக்கும் தினத்தில் கல்மாரி, பூமாரி மழை பெய்யும். அன்று நாங்கள் நாட்டோடு சேருவோம். அன்று காணிக்கை போட்டுவிட்டு சின்னக்கான் பரம்பரைக்குடிகளுடன் சேருவோம். அதுவரை காடுகளில்தான் வாழ்வோம் என்கின்றனர். அவர்கள் போடுவதாகக் கூறும் காணிக்கைப் பொருட்கள் எவை யெவை என்பதையும் கூற மறுத்துவிட்டனர்.

2.4.2.2 ''இந்தியா முழுவதும் பரந்து விளங்கிய தொல் ஆஸ்திரலாயிடு மனித இனத்தின் பிரதிநிதிகளாக நீலகிரியில் வாழும் பளியர்களையும் குறும்பர்களையும் ஊராளியர்களையும் இருளர்களையும் கேரளத்தில் உள்ள முதுவர்களையும் குறிப்பிடலாம் என்கிறார் எல்.ஏ. கிருஷ்ண ஐயர். இதே கருத்தை வரலாற்று மானிடவியல் வல்லுநர்களும் உறுதி செய்கின்றனர்''[10] என்கிறார், ஆர். பெரியாழ்வார்.

## 2.5 இடப்பெயர்ச்சி

2.5.1 மானிடவியல் அறிஞரான எட்கர் தர்ஸ்ட்டன் ''முதுவார் என்ற இப்பழங்குடியினர் மதுரையிலிருந்து குடி பெயர்ந்து வந்த காலத்தை, எந்தப் பழங்குடியினராலும் யூகிக்க முடியவில்லை. ஆனால் பாண்டிய மன்னர்கள் தெற்குப் பகுதியில் நுழைந்த பொழுது இக்குடிப் பெயர்ச்சி ஏற்பட்டிருக்கலாம் அல்லது கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் போடிநாயக்கனூரரை நாயக்கர்கள் பிடித்துக்கொண்டபொழுது இவ்விடப் பெயர்ச்சி நடை பெற்றிருக்க வாய்ப்புண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முகம்மதியர்கள் நுழைந்த பொழுது முதுவர்கள் மலைப்பகுதிக்கு

10. ஆர். பெரியாழ்வார், முந்நூல், ப.4.

விரட்டப்பட்டிருக்கலாம்''[11] என்று கூறுகிறார். ''முதுவர்கள் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் கேரளா மலைப்பகுதிகளுக்குச் சென்றிருக்கலாம், நாயக்கர் களின் படையெடுப்பால் பிற்காலப் பாண்டியர்களின் பேரரசு முடிவுக்கு வந்தபொழுது பாண்டியர்களுடன் திருவிதாங்கூர் மலைக்கு முதுவர்கள் வந்திருக்க வேண்டும்''[12] என்று கூறுகிறார், சு. சக்திவேல். கள ஆய்வின் போது, முதுவர்கள் போருக்குப் பயந்து ஓடி வந்தவர்கள் என்ற செய்தியினையும், தங்கள் இடப் பெயர்ச்சி (Migration)க்குக் காரணமாக வேறு சில கதைகளையும் கூறினார்கள். இவர்கள் கூறும் செய்தி கள் அனைத்திலும் தங்களைப் பாண்டியர்களுடன் இணைத்துத்தான் கூறுகிறார்கள்.

2.5.2 முன்பு, நாட்டில் அடிக்கடி போர் நடந்தது. படையெடுப்பினால் பல இன்னல்கள் ஏற்பட்டன. போரினாலும், இன்னல்களினாலும் நாட்டில் இருந்து வெளியேறி, மலைப்பகுதிகளில் சென்று இவர்கள் குடி யேறினார்கள்; நாட்டு மக்களைக் கண்டால் ஓடிவிடு வார்கள். முதுவர்களின் முன்னோர்கள், போரினால் ஏற்பட்ட கொடுமைகளினால் மலைகளில் குடியேறி னார்கள் என்பதைத் தகவலாளியின்[13] மூலம் அறிய முடிந்தது. இதனால் இவர்களது இடப்பெயர்ச்சிக்குப் போர்கள்தான் காரணம் என்பதை அறியமுடிகிறது.

### 2.5.3 இடப்பெயர்ச்சியும் கதைகளும்

தங்களது இடப்பெயர்ச்சிக்கு வேறு காரணங்களும்

---

11 The approximate time of the exedus from Madura cannot even be gussed by any of the tribe, but it was possibly at the time when the Pandyan Rajas entered the south or more probably when the Telugu Naickers took possees-ion of Bodinayakanur in the fourteenth century. It hae also been suggested that the Muduvars were driven to the hills by the Muhammadan invaders in the latter part of of the eighteenth century.

E. Thurston, Castes and Tribes of Southern India, VolV P'87.

12. சு. சக்திவேல், பழங்குடிகள், ப.29.

13. சுப்பையன், வயது 60, மேல்முட்டம்.

கூறுகிறார்கள். புராணங்களும் காப்பியங்களும் நம்ப முடியாத செய்திகளைக் கூறி, மக்களைநம்பவைப்பது போல், இவர்கள் கூறும் பூர்வீகக்கதைகளையும் செவிமடுக்கத்தான் வேண்டும்.

2.5.3.1 பாண்டியன் தவறுதலாக நீதி வழங்கியதாகக் கருதி உயிரை விட்டான். பிறகு கண்ணகி மதுரையை அழித்தாள். பாண்டியனுடன் பிறந்த இரண்டு சகோதிரிகள் இருந்தனர். சகோதரிகளின் குடும்பத்தார் பாண்டியனின் உடலை முதுகில் எடுத்துக்கொண்டு மேற்கு நோக்கி வந்தனர். பெரியகுளம் அருகில் வரும் பொழுது 'சின்னக்காள்' (சிறிய சகோதரி) வேறுவழியில் சென்றுவிட்டாள். மூத்தக்காள் இந்த மலைப்பகுதிக்கு வந்தாள். சின்னக்காள் வழிப் பரம்பரை ஆனைமலைப் பகுதியில் வாழ்பவர்கள். மூத்தக்காள் வழிப்பரம்பரை இந்தப் பகுதியில் வாழ்கிறோம்[14] என்கிறார்கள்.

2.5.3.2 தவறுதலாக நீதி வழங்கியதால், கண்ணகிக்குப் பயந்து பாண்டியன் மதுரையைவிட்டுப் புறப்பட்டுச் சென்றான். அவ்வாறு வரும்போது, பாண்டியனது உறவினர்கள் முதுகில் குழந்தைகளைச் சுமந்து கொண்டு பாண்டியனுடன் புறப்பட்டு வந்தார்கள். செல்லும் வழியில் போடி ஏலக்கபய் மலையில், 'மலையிலிருந்து ஜீவிக்கணும்' என்று கூறிவிட்டு பாண்டிய ராசா கேரளாவுக்குச் சென்று அடங்கிவிட்டார். 'மலையிலிருந்து ஜீவிக்கணும்' என்று விட்டுச்சென்ற இனத்தவரின் பரம்பரைதான் இந்தப் பகுதியில் வாழ்கின்றனர்[15] என்கிறார்கள். கதைகள் வேறுபட்டாலும், இவர்கள் மலைக்குப் பாண்டியர்களுடன் வந்தார்கள் என்பதைக் கதைகள் மூலம் அறியமுடிகிறது.

2.5.3.3 கண்ணகி மதுரையை எரிக்கவில்லை; பொய் புனைந்துரைத்த பொற்கொல்லனைக் கொன்று மாலையாகப் போட்டுக்கொண்டாள். கொட்டக்குடி இவர்கள் வசிக்கும் குடியிலிருந்து சற்றுத் தள்ளி உள்ளது. இவ்விடத்திற்குக் கண்ணகி மாலை போட்டு

14. மேலது.
15. மேலது.

வந்தாள், அங்கிருந்து சேரநாடு சென்றடைந்தாள் என்று கண்ணகியைப்பற்றிய கதையையும் முதுவர்கள் கூறுகிறார்கள்.[16] சிலப்பதிகாரம் தமிழ்க்காப்பியம். இது சிலம்பின் விளைவாக வந்த கதையைக் கூறுவதாக—சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களின் ஆட்சியைக் கூறுவதாக—உள்ளது. கற்புக்கரசி என்று போற்றப்படும் கண்ணகி, தன் கணவன் கொல்லப் பட்டதற்காக மதுரையை எரித்தாள். ஓர் உயிரை அழித்ததற்காக, ஒரு நாட்டையே அழித்தாள் என்று காப்பியம் கூறும் கதை, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகத்தான் உள்ளது. கண்ணகி மதுரையை எரிக்க வில்லை. பொற்கொல்லனை மட்டும்தான் கொலை செய்தாள் என்று முதுவன் கூறும் காரணம், கண்ணகி யின் பெருமையை உயர்த்திக் காட்டுவது போல் உள்ளது.

2.5.3.4 காப்பியம் கூறும் கதையைத் தங்கள் இடப் பெயர்ச்சிக்குக் காரணமாகக் கூறுவதால் இடப் பெயர்ச்சிக்குரிய காலகட்டம் ஆய்வுக்குரியதாகும்.

## 2.6 முடிவுரை

தொன்மையான குடி என்ற பொருளில் 'முதுவர்' என்ற பெயர் தோன்றியிருக்கலாம் என்று கருத முடி கிறது.

இடப்பெயர்ச்சிக்கான காலகட்டம் வேறுபட்டாலும், இவர்கள் இடம்பெயர்ந்து சென்றது பாண்டிய நாட்டி லிருந்துதான் என்பதைக் கதைகளின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

16. நாராயணசாமி, வயது 42, மேல்முட்டம்.

# 3. வாழ்க்கைமுறை

## 3.1 முன்னுரை

''தமிழ் அல்லது தமிழுடன் தொடர்புள்ள திராவிட மொழியினைப் பேசுபவர்கள் தமிழகப்பழங்குடி மக்களாவர்''[1] என்கிறார் கோ. சீனிவாசவர்மா. தமிழும் மலையாளமும் கலந்த மொழி பேசும் முதுவர் இனத்தவர் தமிழகப் பழங்குடிகள்தான் என்பதை அவர்கள் பூர்வீகம் பற்றிய கதை உணர்த்துகிறது. மலையில் சென்று குடியேறி வாழ்வினைத் தொடங்கிய முதுவர் பழங்குடியினரின் வாழுமிடங்களையும் அவர்களிடம் நிலவும் சில பழக்கவழக்கங்களையும், சமுதாயப் பொதுக்கடமைகளையும் கூறுவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

## 3.2 வாழுமிடம்

முதுவர், காப்பிமலை அல்லது ஏலக்காய் மலைகளின் மேலே தங்கள் வாழுமிடத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். நாட்டு மக்களின் தொடர்பின்றி, மற்றவர்கள் இவர்களது இருப்பிடத்தை அறிந்துகொள்ளமுடியாத வண்ணம் தங்கள் குடியேற்றத்தை நிறுவி உள்ளார்கள். இவர்கள் வாழும் பகுதி புதிதாகச் செல்பவ

---

1. கோ. சீனிவாசவர்மா, நரிக்குறவப் பழங்குடி மக்கள், முன்னுரை

ருக்கு கண்டுபிடிக்க முடியாத வண்ணம் உள்ளது. இவர்கள் வசிக்கும் பகுதிகள் அனைத்தும், பேருந்து நிற்குமிடத்திலிருந்து நான்குகல் தூரமும், அதற்கு மேலான தூரமும் உடையதாகத்தான் இருக்கின்றது. இவர்களை யாராவது தாக்கினால் தப்பித்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் மலையின் மீது சென்று வசிக்கிறார்கள். கீழே யாராவது ஒற்றையடிப் பாதையில் வந்தால், மேலே இவர்களது இருப்பிடத்திலிருந்து பார்த்தால் நன்றாகத்தெரிகிறது. இவ்வாறு காண்பது, போர்க்காலங்களில் கோட்டை யின் மீதேறி எதிரிகளின் படையெடுப்பைக் காண்பது போல் உள்ளது. போரின் காரணமாக நாட்டை விட்டுத் தப்பித்து வந்ததால், பயத்துடன் வாழ்ந்திருக் கிறார்கள். நாட்டு மக்களைக் கண்டால் 'பாண்டியன் வருகிறான்' என்று பயந்து ஓடிவிடுவார்களாம். பாண்டியன் என்று இவர்கள் குறிப்பிடுவது நாட்டு மக்களை என்று தகவலாளியின்[2] மூலம் அறிய முடிந்தது. இன்று இவர்களிடம் நாட்டு மக்களைக் கண்டால் பயந்து ஓடும் நிலையில்லை.

## 3.3. குடில் அமைத்தல்

மனிதரின் இன்றியமையாத தேவைகளுள் ஒன்று இருப் பிடம். மலைகளில் வாழும் முதுவர் பழங்குடிகளும் தங்களுக்கென்று ஓர் இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றனர். இருப்பிடம் என்பதைக் 'குடி' என்ற சொல்லால் இவர்கள் அழைக்கின்றனர். குடிகளில் உள்ள குடில்களின் எண்ணிக்கை ஒவ்வொரு இடங் களிலும், மக்கட்தொகைக்கு ஏற்றவகையில் வேறு படுகிறது. ''தரையமைப்பு, கூரை ஆகியவற்றின் இயற்கையையொட்டிக் கிராமிய இந்தியாவில் மக்கள் வசிக்கும் வீடுகளைப் பொதுவாக மூன்று வகை களாகப் பிரிக்கலாம் என்கிறார்கள்.

1. நீண்ட சதுரத் தரைஅமைப்பும் மட்டமான கூரையும் உள்ளவை.

2. நீண்ட சதுரத் தரைஅமைப்பும் சாய்வான கூரை யும் உள்ளவை.

---

2. ப.வீ. காந்தி, வயது 63, போடி.

3. வட்டமான தரை அமைப்பும் கூம்புவடிவக் கூரையும் உள்ளவை''[3]

இவற்றுள் இரண்டாவது வகையினை முதுவர்களது குடிலின் அமைப்பு ஒத்துள்ளது.(ஓ.பா.பி.இ.எண் 6.2)

## 3.3.1 அமைப்பு

*3.3.1.1* குடில் அமைப்புப் பெரியதாக இல்லை. இருவர் மட்டுமே வசிக்கும்படி மிகவும் சிறிய அமைப்புடையதாக உள்ளது தனித்தனி அறைகள் கிடையாது. பெரிய குடில், சிறிய குடில் என்ற வேறுபாடுகூட இல்லை. குடில்கள் எல்லாம் வெளிப்பார்வைக்கு ஒரே அளவு உடையனவாகக் காணப்படுகின்றன. குடில்களைப் போதைப்புல் அல்லது ஈத்தை நாரைக் கொண்டு—தான் அமைத்துள்ளார்கள். மேற்கூரை, நான்கு பக்கங்களிலும் உள்ள சுவர்கள் ஆகிய அனைத்தையும் போதைப்புல் அல்லது ஈத்தை நாரைக் கொண்டுதான் அமைத்துள்ளார்கள்.

*3.3.1.2* இன்று வசதியுள்ள முதுவர் ஒரு சிலர்மட்டும் பக்கங்களில் சுவர் எழுப்பியுள்ளார்கள். தீட்டுவீடு சிறியதாக உள்ளது. இளந்தாரிகள் மடமும், பெண்கள் தங்கும் மடமும் மற்ற குடில்களைவிடப் பெரியதாக உள்ளன. பலவிதப் பெயர்களில் குடில்கள் காணப்பட்டாலும், எல்லாக் குடில்களும் ஒரே அமைப்பு உடையவனாகப் போதைப்புல் அல்லது ஈத்தைநாரில் வேயப்பட்டவையாகத்தான் உள்ளன. வாசலுக்குக் கதவு கிடையாது.இவர்களிடம் பணமாகவோ, நகையாகவோ செல்வம் கிடையாது. எனவே பெருள்களை யாராவது கவர்ந்து சென்றுவிடுவார்கள் என்ற பயம் இல்லை. எனவே குடிலுக்குக் கதவு இருக்கவேண்டும் என்ற நிலை இல்லை. இவ்வினத்தினர் தமக்குள் ஒற்றுமையுடன் எப்பொழுதும் இருப்பதால், குடிலுக்குக் கதவின்றித் திறந்த வாயிலுடன் வாழ்கிறார்கள் என்று காரணம் கூறுகின்றனர்.[4]

---

3. சுகாஸ், கெ. பிஸ்வாஸ் & என்.கே. பெஹீரா, குடில்களின் வகைகள்,ப. 20.

4. கிருட்டிணன், வயது 38, மேல்முட்டம்.

3.3.1.3 ஈத்தை நார், போதைப்புல் கொண்டு வேயப் படும் குடில் மழைக்கும் வெயிலுக்கும் எளிதில் பாதிப்புக்குள்ளாகிறது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை தங்கள் குடில்களை மாற்றி அமைத்துக்கொள் கிறார்கள்.

3.3.1.4. குடில்கள் அடுத்தடுத்து நெருக்கமாக இல்லை; குடில்கள் தள்ளித்தள்ளி உள்ளன. ஒரு குடிலுக்கும் அடுத்த குடிலுக்கும் இடையில் இடை வெளி அதிகம். வரிசையாகக் கிழக்குப் பக்கம், மேற்குப் பக்கம் பார்த்துத் தான் குடில் இருக்கவேண்டும் என்றெல்லாம் கருதி இவர்கள் குடில் அமைப்பு இல்லை. இக்குடில்களுள் சில குடில்கள் பள்ளத்திலும், சில குடில்கள் மேட்டிலும் உள்ளன. தீட்டுவீடு, இளந் தாரிகள் மடம், பெண்கள் மடம் போன்றவை மற்ற குடில்களைவிடத் தள்ளி உள்ளன. அங்கமி என்ற இடத்தில் வசிக்கும் நாகர்களின் இருப்பிடத்தைப் பற்றிக் கூறும்போது, ''அங்கமி கிராமத்தில் வீடுகள் ஒழுங்கற்றமுறையில் அமைந்துள்ளன. 'லோடா' கிராமங்களைப் போன்றில்லை. 'சீமா' கிராமங்களைப் போல், இங்கு வீடுகள், இங்குமங்குமாக, பல கோணங் களில் வேறுபட்ட திசைகளை நோக்கி அமைந் துள்ளன. நிலத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப பல தளங்களிலும், கட்டுபவரின் விருப்பத்திற்கு ஏற்பவும் அமைந்துள்ளன''[5] என்று ஹட்டன் கூறும் முறையை முதுவர் இனத்தவர்களிடம் காணமுடிகிறது. முதுவர் களின் குடில் அமைப்பும் ஒழுங்கற்றமுறையில்தான் உள்ளது. அவரவர் விருப்பத்துக்கேற்றவகையில் குடிலினை அமைத்துள்ளார்கள். ஒரு குடிலிலிருந்து மற்றொரு குடிலுக்குச் செல்ல வேண்டியிருப்பின் ஒரு பள்ளத்திலிருந்து, மற்றொரு மேட்டுக்கு ஏற வேண்டி யுள்ள இவர்களது குடில் அமைப்பு நாம் அடிக்கடி பார்க்கும் நாட்டுப்புறங்களைப்போல் அல்லாமல் வித்தியாசமாக உள்ளது.

---

5. The arrangement of the houses in an Angami Village is irregular. Often as in the Sema and differing from the Lhota Village. the houses are built here and there, facing this way and that, at every angle and at all levels to suit the lite of the ground or the taste of the builders. J.H, Hutton The Angami Nagas P 46

3.3.2 வாழும் குடில்கள், அவரவர்களுக்குச் சொந்த மானவை. இடம்விட்டு இடம் மாறிச் சென்றாலும், போகும் இடங்களில் தங்களுக்கு வேண்டிய குடில் களைத் தாங்களாகவே அமைத்துக் கொள்கிறார்கள்.

## 3.4 வாழ்வின் நிலைகள்

3.4.1 முதுவர்கள், வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள நிலங்களில் பயிர் செய்கிறார்கள். தொழில் அடிப்படை யில் முதல்நிலையில் இயற்கையில் கிடைத்த தேன், கிழங்கு போன்றவற்றைத் தேடி அலைந்து எடுத்து வாழ்க்கை நடத்தினார்கள். இரண்டாவது நிலையில் உணவு கிடைக்காத நாட்களில் அருகில் உள்ள நிலங் களைப் பண்படுத்தி விவசாயம் செய்து வாழ்வை நடத்தினார்கள். மூன்றாவது நிலையில், அரசும் முதலாளிகளும் இவர்களது வாழ்க்கையில் குறுக்கிடுவ தால் தோட்டத்தொழிலாளியாக வேலைசெய்து, கூலி பெற்று அதைக்கொண்டு வாழ்க்கைநடத்துகிறார்கள். இம்மூன்று நிலைகள் இன்று இணைந்து உள்ளன. கிழங்கு, தேன் எடுப்பது, சொந்த நிலங்களில் விவசாயம் செய்வது, முதலாளிகளிடம் கூலி வேலை செய்வது ஆகிய மூன்றினையும் இன்றைய இவர்களது வாழ்க்கை முறையில் காணமுடிகிறது.

3.4.2 மலையில் நடந்து செல்லும் பாதையின் பக்கங் களில் உள்ள சில தோட்டங்கள், முன்பு முதுவர்க்குச் சொந்தமானவைதான். இவர்களிடமிருந்து முதலாளி கள், பணத்தைக் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள் என்கிறார்கள்.[6] இயற்கையில் கிடைத்த பொருளை உண்டு சோம்பேறியாக வாழ்ந்தவன், உழைத்து உண்ணும் நிலை வரும்போது, அவனால் அத் தொழிலைச் செய்ய முடியவில்லை. இப்படிச் சிலர் உழைத்துப் பயன்படுத்தாமை, வெளியுலக அறிவற்ற நிலை, அவர்களது பற்றாக்குறை எனும் இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் சிறிதுசிறிதாகப் பணத்தைக் கொடுத்துத் தங்கள் உடைமையாக ஆக்கிக்கொண்டார்கள். சில முதுவர்கள் சொந்த நிலங் களில் பயிர் செய்கிறார்கள். அந்நிலங்களின் பேரிலே

6. ஜெயராஜ், வயது 30மேல்முட்டம்.

யும் முதலாளிகள் பணம் கொடுத்திருக்கிறார்கள். நிலத்தில் விளையும் பொருட்களைக் குடிலுக்கு எடுத்துக் கொண்டு மீதியை முதலாளிகளுக்குக் கொடுத்துவிடுகிறார்கள்.

3.4.3 ''நாகரிக வாழ்க்கையில் நிலவும் உரிமை கொண்டாடும் பழக்கமும், பொறாமையும் நிறைந்த நட்பு பழங்குடி மக்களிடையே கிடையாது. எல்லோருக்கும் பொதுவான சமுதாய ரீதியிலான நட்புறவே அங்கு அதிகமாக நிலவிற்று''[7] என்று பழங்குடிகளின் வாழ்க்கை நிலையினை எல்வின் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் பொதுவுடைமைச் சமுதாயம்தான் முதுவரிடையிலும் நிலவுகிறது. எல்லாவிதச் செயல்களிலும் குடும்பங்கள் எல்லாம் இணைந்துதான் செயல்படுகின்றன. ஒருவர் பணக்காரர், மற்றவர் ஏழை என்ற வேறுபாடில்லை. இவ்வினத்தினர் மட்டும் தனியாக இணைந்து வாழ்வதால், சாதிப்பிரச்சனைகள் இல்லை. பிற சாதிக் குறுக்கீடுகள் என்று எதுவும் இல்லை. கிடைப்பதைப் பகிர்ந்து உண்டு வாழ்கிறார்கள்.

3.4.4 ''தூய்மை வாதம், என்னை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. பழங்குடி மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அது ஒரு பயனற்ற கொடுமையான நடவடிக்கையாகும். சமூகத்தில் செல்வாக்குப் படைத்த பலர் பழங்குடி மக்களுக்கு ஆடைகள் அணிவிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். அவர்கள் இறைச்சி உண்ணக்கூடாது; மது அருந்தக்கூடாது என்று எடுத்துக் கூறுகிறார்கள். மாற்றுஉணவு வசதி செய்து கொடுப்பது கிடையாது; அவர் களுடைய ஆடைமுறை ஆபாசமானது என்று சொல்லி, அவர்களுடைய இயற்கை வனப்பைக் கெடுத்து, அவர்களுக்குப் புதியதொரு பொருளாதாரச் சுமை ஏற்படும்படி செய்துவிடுகிறார்கள். ஏழை மக்களிடமிருந்து அவர்களுடைய சுதந்திரம், எழில், வண்ணம் முதலியவைகளை அகற்றுவது அவர்களை மற்ற வழிகளில் சுரண்டி வாழ்வது போன்றதுதான்''[8]

---

7. எல்வின், எல்வின் கண்ட பழங்குடி மக்கள், ப.103.

8. மேலது, ப, 255.

என்று அறியாநிலையில் சுதந்திரமாக இருந்த பழங்குடி மக்களை, அவர்களது வாழ்க்கை நிலையினை மாற்றுவதாகக் கூறி அவர்களுக்கு அளிக்கப்படும் இன்னல்களை எல்வின் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

களப்பணியின் மூலமும் இதே கருத்தை அறிய முடிந்தது. ''நாங்களாக இருக்கும்போது, கிடைப்பதைக்கொண்டு, பகிர்ந்து உண்டு, சந்தோசமாக வாழ்க்கை நடத்தினோம். நாட்டு மக்களின் தொடர்பால் எங்களிடையே போட்டி, பொறாமைக் குணம் ஏற்படுகிறது. வசதியுடைய முதுவன் மற்றவர்களை விட்டு ஒதுங்கிச் சென்று, தனது வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தி வாழ நினைக்கிறான். அவனுடைய குடும்பம், அவனது வாரிசுகள் என்று தனியாகக் குடில் அமைத்து குடி ஏற்படுத்தி வாழ நினைக்கிறான்''[9] இவ்வாறு நாட்டு மக்களின் தொடர்பால் 'பொதுவுடைமை' என்ற நிலைமாறி 'தனியுடைமை' என்ற தன்மை ஏற்படுவதை அவர்களுடைய கூற்றின் மூலமே அறிந்து கொள்ளமுடிகிறது.

3.4.5 மரங்களிலும், பாறைகளிலும் வாழ்வைத் தொடங்கிய மக்கள், இன்று குடில்களை அமைத்துக் கொண்டு, தாங்கள் வசிக்கும் பகுதியைப் பட்டயம் எழுதி வைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

## 3.5 பழக்கவழக்கங்கள்

ஒரு சமூகத்தின் நாகரிகம் அவர்களுடைய பழக்க வழக்கங்களில்தான் அடங்கியுள்ளது. வாழ்வில் இடம் பெறும் முக்கிய நிகழ்ச்சிகளை மற்ற இயல்களில் கூறி இருப்பதால், மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, விருந்தினரை உபசரிக்கும் முறை என்ற சில வற்றை மட்டும் பழக்கவழக்கங்களாகக் காணலாம்.

### 3.5.1 உணவு

3.5.1.1 தொடக்கநிலையில் தொழில் அடிப்படை

9. செவந்தப்பன். வயது41. கீழ்முட்டம்.

யிலும் நிலஅமைப்பின் அடிப்படையிலும் இயற்கை யில் கிடைக்கும் கிழங்குகளையும், தேனையும்தான் உணவாக உண்டார்கள். மரக்கட்டையில் தீமூட்டி, கிழங்கினைச் சுட்டு உணவாகக் கொண்டனர்.

''தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்லது உடற்றுநர்இல்லை''

(மலைபடுகடாம் 425–426)

மலைபடுகடாம் வரிகள் மூலம், மலைநாட்டைக் காவல் புரிந்த மக்கள் இறைச்சியையும், கிழங்கையும் உணவாக உண்டனர் என்ற குறிப்பு உள்ளது[10] என்கிறார், சே. நமசிவாயம். இதுபோல்தான் முதுவர் இனத்தவர்களும் கிழங்குகளையும்வேட்டை யாடிக் கிடைக்கும் மிருகங்களையும் தீமூட்டிச் சுட்டுச் சாப்பிட்டார்கள்.

3.5.1.2 உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது நிலத்தைப் பண்படுத்தி, பயிர்த்தொழில் செய்ய ஆரம்பித்தார்கள். அம்முறையில் கிடைத்த நெல், காய்கறிகள் முதலியன அவர்களது உணவாக இருந்தன.

''மணிப்பூவரைக் குரூஉத்தளிர் மேயு
மாமாக் கடியுங் கானவர் பூசல்''

(மதுரைக் காஞ்சி 292-293)

என்ற மதுரைக்காஞ்சி வரிகள்[11] அவரையும் குறிஞ்சி நில மக்களின் உனவாக இருந்தது என்று குறிப்பிடு கின்றன, அவரைக்காய், துவரைக்காய், காட்டு மொச்சை போன்ற பயிர்வகைகளை வேகவைத்து உணவாக உண்கிறார்கள்முதுவர்'. சங்க இலக்கியங் களில் குறிஞ்சிநில மக்களின் உணவாகக் குறிப்பிடப் படுபவை இவ்வின மக்களின் உணவாக இன்றும் இருப்பதைக் காணமுடிகிறது.

3.5.1.3 கேழ்வரகு, கம்பு, தினை, சோளம் போன்ற தானியங்களை அவர்களிடம் உள்ள திருகுக் கல்லில்

10. சே. நமசிவாயம், தமிழர் உணவு, ப.8.

11. எஸ்.வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் பகுதி 2,ப-1207.

திரித்து கூழாகக்காய்ச்சி உண்கிறார்கள். இவர்களுக்குரிய பங்கீட்டுக் கடையில் அரிசி போடும்போது வாங்கிக்கொண்டு வந்து சமைத்துச் சாப்பிடுகிறார்கள் பாலில்லாமல் காப்பியும் தேநீரும் குடிக்கிறார்கள். பாலைத் தனியாகக் காயவைத்தும் குடிக்கிறார்கள். அசைவ உணவாகக் கோழி, கேழை ஆடு, வரையாடு போன்றவற்றையும், வேட்டையாடும் மான், முயல், முள்ளம்பன்றி போன்றவற்றையும் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். காலையிலும், மாலையிலும் ஒரு நாளுக்கு இரண்டு வேளைதான் உணவு உண்கிறார்கள். காலையில் வேலைக்குச் செல்லுவதற்கு முன்னால் உணவு உண்டால், மாலையில் திரும்பிவந்து உணவு உண்கிறார்கள்.

*3.5.1.4* முதுவர், மற்ற பழங்குடிகள் வீட்டில் உணவு உண்பதில்லை. உணவு சமைத்து உண்பதற்குத் தெரியாதிருந்த இவ்வின மக்கள். இன்று பல்வேறு உணவுகளைச் சமைத்து உண்கிறார்கள்.

## 3.5.2 உடை

*3.5.2.1* மரங்களிலும், பாறைகளிலும் வசித்தபோது இலைகளைத்தான் உடையாக உடுத்தினார்கள். இடைக்காலத்தில் பெண்கள் சட்டையில்லாமல் சேலை மட்டும் உடுத்தினார்கள். இன்றும் பல பெண்கள் சட்டையில்லாமல் சேலை உடுத்தியிருக்கிறார்கள். நாட்டு மக்களைப் போல் சேலை உடுத்தியிருந்தாலும், அவர்கள் சேலைகட்டும் முறை வேறுபடுகிறது. பின் கொசுவச் சேலை கட்டுவது போல் கட்டி, மேல் முந்தானையை முதுகில் பைபோல் (குழந்தையைத் தூக்குவதற்கு ஏற்றவகையில்) சுற்றி வலப்பக்கக் கையின் உட்பக்கமாகக் கொண்டு வந்து, இடப்பக்கத் தோளில் உள்ள சேலையில் முடிந்துகொள்கிறார்கள். பின்னால் பை போல் இருக்கும் சேலையில்தான் குழந்தையை வைத்துக் கொள்கிறார்கள். சிறு வயதுப் பெண்களும் துணியைப் பை போல் தோளில் கட்டிக் கொண்டு அதில் குழந்தையை வைத்துக்கொள்கிறார்கள். இப்பெண்கள் சட்டையும் அணிந்துகொள்கிறார்கள். ஆடை அமைப்பில் நாட்டுப்புற மக்களைப் பின்

பற்றினாலும் கட்டும் விதத்தில் வேறுபடுகிறார்கள் (ஒ.பா.பி.இ.எண் 6.3,)

3.5.2.2 ஆண்கள் இடையில் தார்ப்பாச்சும், மேலே சட்டையும், தலையில் உருமாலும், காதில் கடுக்கனும் அணிந்திருக்கிறார்கள். தார்ப்பாச்சு முழங்கால் அளவுக்குஉடுத்தியிருக்கிறார்கள் வேலைக்குச்செல்லும் போது, ஆண்களும் பெண்களைப்போல் முதுகில் ஒரு துணியைக் கட்டிக்கொள்கிறார்கள். நாகரிகத்தில் மாறிவரும் முதுவர்கள் ஒரு துணிப்பையைத் தோளில் போட்டுக கொள்கிறார்கள். இளைஞர்கள் நாட்டுப்புற மக்களைப்போல் வேட்டி கட்டிக் கொள்கிறார்கள். சில இளைஞர்கள் கால்சட்டையும் அணிந்திருக்கிறார்கள். தார்ப்பாச்சு, காதில் கடுக்கன், தலையில் உருமால் கட்டியிருந்தால்தான் 'சாதிமுதுவான்' என்கிறார்கள். ஆண்கள் முதுகில் உள்ள துணியில் அல்லது பையில் கத்தியில்லாமல் வெளியில் செல்லமாட்டார்கள். மன்னர் பரம்பரை என்று கூறிக் கொள்வதால் ஆண்கள் தார்ப்பாச்சு கட்டுகிறார்களோ என்பது ஐயத்திற்குரியதாக உள்ளது. இவ்வாறு கட்டியிருப்பது வேலை செய்வதற்கு ஏற்றவாறு கட்டியுள்ளார்கள் என்றும் அறியமுடிகிறது.

### 3.5 3 விருந்தினர் உபசரிப்பு

முதுவரின் உறவினர்கள் பெரும்பாலும் தைமாதத்தில் தான் மற்ற குடிலுக்கு விருந்தினராகச் செல்கின்றார் கள். ஒரு குடியிலிருந்து மற்றொரு குடியில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண்கள், ஆண்கள் போன்ற வர்களைத்தான் விருந்தினர்கள் என்கிறார்கள். நாட்டு மக்கள் விருந்தினராகச் சென்றால் அவர்களை உபசரித்து, பாலில் வெல்லம் போட்டுத் தருகிறார்கள். வெளி இடங்களிலிருந்து வருபவர்களைத் தங்கள் குடிலுக்குள் அனுமதிப்பதில்லை. இரவில் சத்திரத்தில் படுக்கவைக்கிறார்கள்.

### 3,5.4 சமுதாயப் பொதுக்கடமைகள்

3,5.4.1 ஒவ்வொரு குடிக்கும், குடியில் வாழும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஒருவர் இருக்கிறார். தலைவர் வெளிஉலக அனுபவம்

உடையவராகவும், குடியில் சிறிதளவு வசதி உடையவராகவும் இருக்கிறார். தலைவரை வைத்துக் கொண்டுதான் களப்பணிச் செய்திகளைக் கூறினார்கள். மக்கள் குறைகளை மற்றவர்களிடம் முறையிடும்போது தலைவரின் வாயிலாகத்தான் முறையிடுகிறார்கள். பொதுவில் நடைபெறும் பொங்கல் விழாவினைத் தலைவர்தான் உரிமைஎடுத்து நடத்துகிறார். .குடியின் பொதுவில் அனைத்துச் செயல்களையும் தலைவர்தான் கவனித்துக்கொள்கிறார்.

3.5.4.2 திருட்டு, தவறான காரியங்கள் எதுவும் குடிலினுள் நடைபெறுவதில்லை. ஏதாவது தவறு நடைபெற்றால் நாலணா அபராதம் வாங்கி, கோயிலுக்குச் சேர்த்துவிடுகிறார்கள். கடுமையான தண்டனை எதுவும் இவர்களிடமில்லை. குடில்களில் வசிக்கும்முதுவர்கள் இணைந்து எல்லாச் செயல்களையும் செய்வதால் அவர்களிடம் தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் பணப்புழக்கம் குறைவாக உள்ளது என்பதை, இவர்கள் விதிக்கும் அபராதத் தொகையைக் கொண்டு அறிந்து கொள்ளமுடிகிறது. ஊர்ப்பொதுவில் பூசாரி இருக்கிறார் (ஒ.பா.பி. எண்.6.8). இவர் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். தலைவர் போல் இவருக்கு உரிமை கிடையாது.

3.5.4.3 முதுவ இன மக்களுக்கு ஓட்டுரிமை உண்டு. இவர்கள் வசிக்கும் பகுதி தமிழக அரசைச் சேர்ந்ததால், குரங்கணிக்கு வந்து ஓட்டுப்போடுகிறார்கள். ஓட்டுரிமை இருப்பதால் பங்கீடும் உண்டு 'பங்கீடு' பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, குரங்கணியில் போடுகிறார்கள். சீனி-1கிலோ. மண்ணெண்ணெய்-1 லிட்டர். அரிசி-5கிலோ என்ற அளவில் இவர்களுக்குப் பங்கீட்டுப்பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. பல வருடங்களாக இவ்வினத்தவருடன் பழகி, அவர்களுடன் வாழ்ந்து, இன்று குரங்கணியில் மளிகைக் கடை வைத்திருக்கும் நாட்டார் ஒருவர் இம்மக்களுக்கு எல்லா உதவியும் செய்துவருகிறார்.

## 3.6 கல்வி

களப்பணிக்கு எடுத்துக்கொண்ட குடியில் படித்தவர்

கள் இல்லை. இவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து வெகு தூரம் நடந்துவந்து கல்வி கற்கவேண்டும். ஆனால் வெகுதூரம் தனியாக நடந்துவந்து கல்வி கற்கமுடியாது என்ற காரணத்தால் பெரும்பான்மையினர் கல்விச்சாலை வசதி இருப்பினும் கல்வி கற்காமல் இருக்கிறார்கள். இவர்களிடையே பேசப்படும் மொழி 'முதுவாப்பாசை'. இது மலையாளமும், தமிழும் கலந்து காணப்படுகிறது. பேசும்போது தமிழ் பேசுகிறார்கள். இம்மக்களுக்கென்று கல்விச்சாலை கிடையாது. புதியதாகக் கல்விச்சாலை ஏற்படுத்தி, பாடத்திட்டம் வகுத்தால் அவர்களுக்கேயுரியமொழியையும், அவர்கள் சார்ந்துள்ள இடத்தின் மொழியையும் பாடமாக வைக்கவேண்டியிருக்கும். எம்மொழியைப் பாடமாக வைப்பது என்பதை அம்மக்களுடன் கலந்து ஆலோசித்துச் செய்யவேண்டும். எங்ஙனமாயினும் அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு உதவுவது இன்றியமையாததாகத் தோன்றுகிறது.

## 3·7. முடிவுரை

நாட்டு மக்களுக்குப் பயந்து மலையில் வாழும் மக்கள் குடிலில் மட்டுமின்றி, குடிக்குள்ளும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். இந்நிலை நாட்டாரின் தொடர்பால் அவர்களிடையே மாறுபட்டு வர ஆரம்பித்துள்ளது.

உணவு உடையைப் பொறுத்தமட்டிலும் தங்களுடைய பழக்கத்திலிருந்து மாறி, நாட்டாரின் முறையைப் பின்பற்றுகிறார்கள்.

விருந்தினர்களை உபசரித்துத் தனியாகத் தங்க வைக்கும் பழைய பண்பாடு இன்றும் அவர்களிடையே நின்று நிலவுகிறது. தலைவர் என்பவர் அதிகாரம் செலுத்துபவராக இல்லாமல், மக்களுக்கு உதவும் வகையில் இருக்கிறார்.

கேரள அரசின் கீழ் இருக்கும் முதுவர்களிடையே கல்வி கற்றவர்கள் உள்ளார்கள். தமிழக அரசின் கீழிருக்கும் முதுவருக்கும் கல்விச்சாலை அருகில் இருந்தால் கல்வி கற்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இவர்களது 'வாழ்க்கைமுறை பழமையும் புதுமையும் விரவி' பண்பாட்டினையும் காத்துவருவதாக இருக்கிறது.

# 4. தொழில்கள்

4.1 சமூகத்தில் மனிதனுக்கு மதிப்பையும் வருவாயையும் தேடித் தருவது தொழில். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற சாதிப் பிரிவுகளைத் தொழில் அடிப்படையில்தான் பிரித்துள்ளனர். வணிகர், வேளாளர் என்ற இருபிரிவினரும் செய்யும் தொழில்களை முதுவர் பழங்குடியினரிடம் காண முடிகிறது. இவர்களுடைய தொழில் முறைகளைப் பின்வரும் நான்கு கூறுகளாகப் பிரிக்கலாம்:

கைத்தொழில்
தோட்ட வேலை
தேன் எடுத்தல்
வியாபாரம்

இத்தொழில் முறைகளை விளக்கும் வண்ணம் இவ்வியல் உள்ளது.

## 4.2 கைத்தொழில்களும் பயன்படும் பொருள்களும்

இயற்கையுடன் ஒன்றி வாழும் முதுவர்கள், இயற்கையில் கிடைக்கும் பொருளைக் கொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே செய்து கொள்கிறார்கள்.

4.2.1 கைத்தொழில்கள் வளர்ந்து, மதிப்புப் பெற்று

வரும் இன்றைய நாளில் முதுவர் பழங்குடியினரிடம் அவர்களுக்கேயுரிய கைத்தொழில்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. தொழிற்சாலைகள் தோன்றி இயந்திரங்கள் மூலம் பல பொருள்களைத் தயாரிக்கலாம். சில பொருள்களைக் கைகளால்தான் தயாரிக்க முடியும். கூடை, முறம், பாய் போன்ற அன்றாடத் தேவைக்குப் பயன்படும் இப்பொருள்களைக் கைகளால்தான் தயாரிக்க முடியும். முதுவர், தங்களுக்குத் தேவையான கூடை, முறம், பாய், (ஒ பா.பி.இ.எண் 6.6) போன்றவற்றைத் தாங்களே பின்னிக்கொள்கின்றனர். பெரியதாகவும், சிறியதாகவும் தங்களுக்கு வேண்டிய அளவில் பின்னிக்கொள்கின்றனர்; இத்தொழிலை ஆண், பெண் இருபாலருமே செய்கின்றார்கள்.

4.2.2 நாட்டுப்புறங்களில் கிடைக்கும் கூடை, முறம், பாய் போன்றவற்றிலிருந்து இவை வித்தியாசமாக உள்ளன. பெரிய பின்னல்களையுடையனவாக இவை அமைந்திருக்கின்றன. நாட்டுப்புறத்தில் முறம் மேலே அகன்று கீழே போகப் போகக் குறுகியிருக்கும்; பின்னல்களில் வேறுபாடு இருக்கும், முதுவர் முடையும் முறத்தின் அமைப்பில் வெளிப்புற விளிம்பு சதுரமாகவும், உள்ளே வட்டமாகவும் இருக்கும். முதுவர் அனைவரும் ஒரே விதமான பின்னலைத்தான் பின்னுகின்றார்கள். பாய்கள் அகன்று நீளமாக உள்ளன. சிறிய சிறிய பாய்களை இவர்கள் பின்னுவதில்லை. மீன் பிடிப்பதற்கு வேண்டிய மீன் வலையினையும் இவர்களே பின்னிக்கொள்கிறார்கள்.

### 4.2.3 பயன்படும் பொருள்கள்

மீன்வலை மூங்கில் நாரால் பின்னப்படுகிறது. கூடை, முறம், பாய் பின்னுவதற்கு மலையில் கிடைக்கும் ஈத்தை நாரைப் பயன்படுத்துகிறார்கள். இந்நார் மூங்கில் இனத்தில் ஒருவகை. தங்களுடைய தேவைகளுக்காக மட்டுமே பின்னிக்கொள்வதால், பின்னும் பொருள்களில் வண்ணம் தீட்டுவதில்லை. விற்பனைக் கண்ணோட்டம் இல்லாததால், பின்னும் பொருள்களுக்கு அழகூட்டுவதும் இல்லை. பயன்பாடு கருதியே பின்னப்படும் இப்பொருள்கள் முதுவரின் இல்லங்கள் அனைத்திலும் காணப்படுகின்றன.

4.2.4 முதுவர், தாங்களாகவே தயாரிக்கும் இப்பொருள்களைத் தங்களுடைய முதலாகக் கருதுகின்றார்கள். அதை வியாபாரப் பொருளாகக் கருதுவதில்லை; விற்பனை செய்யும் விருப்பமுமில்லை. சிறந்த பொருள்களை அரசு கண்காட்சி வைத்துப் பெருமை தேடிக் கொள்வது போல், அங்குச் செல்கின்றவர்களிடம் முதுவர், தங்கள் பொருள்களைக் காட்சிப் பொருள்களாகக் காட்டுகிறார்கள். 'செய்யும் தொழிலே தெய்வம்'. என்பது போல் தங்கள் தொழிலைப் பெரிதும் போற்றுகின்றனர்; பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

## 4.2.5 இசைக்கருவிகள் செய்தல்

இசைக்கருவிகளுள் மிகவும் முக்கியமானது உறுமிக் கட்டை என்ற இசைக்கருவி. இறப்புச்சடங்குகள், வாழ்வுச்சடங்குகள், திருவிழாக்கள் போன்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்த இசைக்கருவி பயன்படுத்தப்படுகிறது. மரத்தை வெட்டி இசைக் கருவியாகச் செய்து, இருபக்கமும் ஆட்டுத்தோல் அல்லது மந்தித்தோல் வைத்துக் கட்டி இசையை எழுப்புகிறார்கள். (ஒ.பா.பி.இ. எண் 6.5) குழல் என்ற இசைக் கருவியையும் முன்பு இவர்களாகவே தயாரித்தார்கள். குழல் என்ற இசைக்கருவியை இருளர்கள் 'கொகாலு'[1] என்று அழைப்பதாக, செங்கோ தனது நூலில் கூறியுள்ளார். பழங்குடிகளிடம் இது முக்கிய இசைக்கருவியாக உள்ளது. இப்பொழுது முதுவர் கடையில் விற்பதை விலைக்கு வாங்கி, அதை இசைக் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

## 4.2.6 குடில் அமைத்தல்

முதுவர்கள் தங்களுடைய குடில்களையும் தாங்களாகவே அமைத்துக் கொள்கிறார்கள். (ஒ.பா.இ. எண் 3.3.1)

கைத்தொழில்கள் என்ற முறையில் கூடை, முறம், பாய், மீன்வலை, வாத்தியக் கருவிகள் போன்ற

1. செங்கோ. வனாந்தரப் பூக்கள், ப.45.

வற்றையும், தங்கள் இருப்பிடத்தையும் தாங்களாகவே, மலையில் கிடைக்கும் இயற்கைப் பொருள்களின் மூலம் தங்களுக்குவேண்டியவாறு தயாரித்துக் கொள்கின்றனர்.

## 4.3 தோட்டவேலை

### 4.3.1 விவசாயம்

முதுவர் மலையில் வசித்தாலும், அவர்கள் வாழும் இடம் நாட்டினைப் போல் புழுதி மண் உடைய பகுதியாகத்தான் இருக்கிறது. முதுவர் தாங்கள் வாழும் பகுதியை மண் நிறைந்த இடமாகத் தேர்ந்தெடுத்துத் தான் குடியேறுகின்றனர். இடம்விட்டு இடம்பெயர்ந்து செல்கின்ற இவ்வினத்தார், அங்ஙனம் இடம் பெயர்ந்து செல்கின்றபோது இவர்கள் பயிர்த்தொழில் செய்வதற்கு ஏற்ற இடமாகத்தான் தேர்ந்தெடுத்துக் குடியேறுகிறார்கள். இவ்வகையில், உத்திரப்பிரதேசத்தில் வாழும் பழங்குடிகளைப் பற்றி பகதூர் கூறும் பின்வரும் கருத்து ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. ''இவர்கள் காட்டுப்பன்றி இறைச்சியை மிகவும் விரும்பி உண்கின்றனர். காட்டுப்பன்றிகளுக்காகவே இவர்கள் தங்கள் குடியின் இருப்பிடத்தை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்கொருமுறை மாற்றிக் கொள்கின்றனர்''[2] என்கிறார்.

4.3.2 தக்காளி, கத்தரிக்காய், தட்டப்பயறு, மொச்சைப்பயறு, காணப்பயறு, பீன்சு, வெள்ளைப் பூண்டு, இஞ்சி போன்றவற்றைப் பயிர் செய்வார்கள் என்பது தகவலாளியின் மூலம் கிடைத்த செய்தியாகும்[3]. ஆய்வாளர் இப்பகுதிகளில் களஆய்வு செய்தபோது அவரைக்காய், புடலங்காய் போன்ற காய்கள் பயிர் செய்யப்பட்டிருந்தமையையும் காண நேர்ந்தது. வசதியுடைய சில முதுவர்கள், அவர்கள் இருக்கும்

---

2. They are particularly fond of wild pig and this may be one of the reasons why they change the side of their villages every two or three years. K.P. Bahadur, Caste, Tribes and Culture of India Vol V Uttar Pradesh P21

3. நாராயணசாமி, வயது 42, மேல்முட்டம்.

இடத்துக்கு அருகில் நெல் பயிரிடுகிறார்கள். பாத்திகள் அமைத்து நெல் பயிர் செய்துள்ளார்கள். நிலத்தை, குடியில் வாழும் அனைவரும் இணைந்து, மண்வெட்டியால் வெட்டிச் செம்மைப்படுத்துகிறார்கள். (ஒ.பா.பி.இ.எண் 6.11). அவர்களாகவே பயிர் செய்து அறுவடை செய்து கொள்கிறார்கள். நெல் அறுவடைக்குப்பின், அதே நிலத்தில் மீண்டும் பயிரிடப் படும் என்பதைத் தகவலாளிகள் மூலம் அறிய முடிந்தது.[4] நெல் பயிரிடப் ...டிருந்த இடத்துக்கு அருகே மலையிலிருந்து விழும் ...ரை வாய்க்கால் வழியாக வயலுக்குப் பாய்ச்சுகிறார்கள். வயலுக்குச் சொந்தக்கார முதுவர்கள் நீர் வசதிஉடைய இடத்தில் இருக்கிறார்கள்; பக்கத்திலேயே வயலும் இருக்கிறது.

4.3.3 தோட்டவேலை என்ற முறையில் சொந்த நிலம் இருப்பின் அவர்களாகவே நெல் பயிர் செய்து கொள்கின்றனர். நெல் பயிரிடப்பட முடியாத நிலம் உடையவர்கள் வேறு ஏதாவது காய்கறி, பயறுவகைகள் போன்றவற்றைப் பயிர் செய்துகொள்கின்றனர். ''மலைகளிலும் மலைச்சாரல்களிலும் ஐவன நெல்லையும் தினை என்னும் அரிசியையும் பயிர் செய்தார்கள். மரம்செடி கொடிகளை வெட்டி அப்புறப்படுத்தி வேர்களைக் கிளறிக் கொத்தி நிலத்தைப் பண்படுத்தினார்கள். பண்படுத்திய நிலத்தை ஏரினால் உழாமல் மண்வெட்டியால் கொத்திக்கிளறி ஐவன நெல்லையும், தினையையும் பயிர் செய்தார்கள் குறிஞ்சிநில மக்கள்''[5] என்று மயிலை சீனி,வேங்கடசாமி கூறியுள்ள கருத்து ஈண்டு குறிப்பிடத்தக்கது. குறிஞ்சிநில மக்களான முதுவரும் நெல்லுடன், தினை, வரகு, சாமை, சோளம் போன்ற தானியங்களையும் பயிர் செய்கிறார்கள். இவர்களிடையே ஏலக்காய்த் தோட்டம், காப்பித் தோட்டம் உடையவர்களும் சிலர் உள்ளார்கள்.

### 4.3.4 கிழங்கு எடுத்தல்

ஒரு சாண் வயிற்றுக்குத்தான் மனிதன் அன்றாடம் தொழில் செய்கின்றான். கல்வி கற்றுத் தொழில்

4. செவந்தப்பன், வயது 41, கீழ்முட்டம்.

5. மயிலை, சீனி. வேங்கடசாமி, பழங்காலத்தமிழர் வாணிகம் ப. 7.

செய்வதும் பொருளுக்காகத்தான். மேன்மேலும் வசதியாக வாழவும் ஒருவன் தொழிலைச் செய்கின்றான். எல்லாவற்றிற்கும் அடிப்படையாகப் பொருள் தேடுவதன் நோக்கம் உணவுதான்: அடுத்துஉடையும் உறையுளும்ஆகும் மலையில்வாழும் முதுவர்களுக்குஇவ்விதத் தொல்லைகள் எதுவும் கிடையா. இயற்கையாகப் பூமியினடியில் கிடைக்கும் முள்ளுவள்ளிக் கிழங்கு, வெத்தல வள்ளிக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளைத் தோண்டியெடுத்து அவற்றை உணவாகப் பயன்படுத்துகிறார்கள். ஆண்டில் பெரும்பகுதிக் காலத்தில் கிழங்கு தோண்டுவதுதான் இவர்களது வேலை. ஆறுமாத காலம் இவர்கள் இக்கிழங்கு வகைகளைத்தான் உணவாகச் சாப்பிடுகிறார்கள். கிழங்கு உணவாக இருப்பதால், இவர்களிடையே கிழங்கு தோண்டி எடுப்பதே முக்கிய தொழிலாக உள்ளது எனலாம்

### 4.3.5 விறகு எடுத்தல்

விறகு எடுப்பதற்குப் பெண்கள்தான் செல்கிறார்கள். ஆண்கள் விறகு எடுக்கச் செல்வதில்லை. எடுத்துவரும் விறகைக் குடிலுக்கே வைத்துக் கொள்கிறார்கள்: விற்பனை செய்வதில்லை.

### 4.3.6 கூலி வேலை

4.3.6.1 ஆறு மாதத்திற்குப் பெரும்பாலும் கிழங்கு தோண்டுவதையே தொழிலாகக் கொண்ட இம்மக்கள், மீதி ஆறு மாதத்தில் காப்பி, ஏலக்காய் தோட்ட முதலாளிகளிடம் கூலிவேலைக்குச் செல்கிறார்கள். ''சென்ற நூற்றாண்டின் இறுதியில் காடுகள் ரிசர்வ் செய்யப்பட்டது. குடிமாற்றச் சட்டங்கள் (Settlement Transaction Acts) இயற்றப்பட்டது. மற்றும் மலைத்தோட்டப் (plantation) பயிர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. முதலான காரியங்களால், மலைஜாதியினர் ஒருபுறம் உணவு சேகரிப்புக்கான தங்களது காட்டுப்பகுதிகளை இழந்தார்கள்; மறுபுறம், இவர்கள் தோட்டத் தொழிலாளர்களாகவோ, பண்ணை அடிமைகளாகவோ, மாறவேண்டிவந்தது''[6]

---

6. செங்கோ, வனாந்தரப் பூக்கள்,ப.12.

என்று செங்கோ கூறுவது போல் முதுவர் இனத்தினரும், தங்கள் சொந்த நிலங்களை இழந்து காப்பித்தோட்டம், ஏலக்காய்தோட்டம் உள்ள முதலாளிகளின் கீழ் நாட்கூலிக்கு வேலைசெய்கிறார்கள்.

4.3.6.2 முதுவர்கள் தாங்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து இரண்டுகல் அல்லது மூன்றுகல் நடந்து கூலி வேலைக்குச் செல்கிறார்கள். ஆண், பெண் இருபாலரும் இணைந்துதான் வேலைக்குச் செல்கிறார்கள். சிறுவர் வேலைக்குச் செல்வதில்லை. ஏலக்காய் எடுப்பது, காப்பித் தோட்டத்தில் பழம் எடுப்பது, களையெடுப்பது, கவாத்து வெட்டுவது (செடியை நுனியில் கிள்ளிவிடுவது) போன்ற பல தொழில்களைச் செய்கிறார்கள். காலையில் ஏழு மணிக்கு குடிலை விட்டுக் கிளம்பி வேலைக்குச் சென்று மாலை நான்கு மணிக்குக் குடிலை அடைகிறார்கள். நாட்கூலியாக ஆண்களுக்கு ஐந்து ரூபாய் ஐம்பது பைசாவும், பெண்களுக்கு நான்கு ரூபாய் ஐம்பது பைசாவும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்கு வேலைக்குச் சென்று சம்பளம் வாங்கிக் குடும்பம் நடத்தும் இம்மக்களுக்கு 'போனஸ்' போன்ற சலுகைகள் எதுவும் கிடைப்பதில்லை.

## 4.4 தேன் எடுத்தல்

முதுவர் பழங்குடிகளிடையே கிழங்கு எடுப்பது எவ்வளவு முக்கியமான தொழிலோ, அதுபோல் தேன் எடுப்பதும் இவர்களிடம் காணப்படும் இன்றியமையாத தொழிலாகும். ''காட்டுமிராண்டிக் காலத்தில் இயற்கைப் பொருளைச் சேகரித்தல் வாயிலாக மனிதன் தன் உணவுத் தேவையை நிறைவு செய்துகொண்டான். இயற்கைப் பொருட்கள் தொடர்ந்து கிடைக்காதபோது மீன்பிடித்தல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல் முதலியவற்றின் வாயிலாகவும் பின்னால் விவசாயத்தின் வாயிலாகவும் மனிதன் தன் உணவுத் தேவையை நிறைவு செய்துகொண்டான்''[7] என்கிறார், ஆறு. இராமநாதன். இயற்கையில் கிடைக்

---

7. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.47.

கும் உணவுப் பொருளான கிழங்கு கிடைக்காதபோது வேறு தொழிலில் ஈடுபடுகின்றான். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களில் தேன் எடுப்பது முக்கியமான தொழிலாக உள்ளது. முதுவர் பாறைகளிலும், மரங்களிலும் இருக்கும் தேனை எடுக்கின்றனர்.

### 4.4.1 பாறையில் தேன் எடுக்கும் முறை

பாறையில் இருக்கும் தேன் அடையில் புகைபோட்டு, தேனீக்கள் பறந்து போனபின் தேன் எடுப்பார்கள். பிரம்புக்கொடியை மரத்தில் கட்டி மேலே ஏறிப் புகை போடுவார்கள், ராடு (தேன் மீது கட்டியிருக்கும் ஒடு) வெட்டிவிட்டுத் தேன்கூட்டை அறுத்துஅறுத்துத் தேன் எடுப்பார்கள். இதைக் 'கொம்புத்தேன் எடுப்பது' என்று கூறுகிறார்கள்.

### 4.4.2 மரத்தில் தேன் எடுக்கும் முறை

மரத்தில் இருக்கும் தேன்கூட்டிலிருந்து தேன் எடுப் பதைத் தேன் எடுத்தல்' என்கிறார்கள். மரத்தில் பிரம்பு கட்டி மேலே ஏறி, சிறிய கோடாலியினால் தேன் கூட்டில் கை நுழைவதற்கு மட்டும் ஓட்டை போட்டு வெட்டியெடுப்பார்கள். தேன் எடுத்துத் தங்களது சொந்த உபயோகத்திற்கு மிகுதியாக வைத்துக்கொள்கிறார்கள். மீதியைப் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்கிறார்கள். மலைத்தேன் என்ற சுத்தமான தேனை இவர்கள் வியாபாரப் பொருளாக விற்பனை செய்கிறார்கள்.

### 4.5 வியாபாரம்

சொந்தமாகத் தயாரிக்கும் பொருள்களை விற்பனை செய்து முதலீட்டவேண்டும் என்ற எந்தவிதமான எண்ணமும் இவர்களிடம் இல்லை. இவர்களாகவே தயாரிக்கும் கூடை, முறம், பாய் போன்ற பொருள் களையும் சொந்தத் தேவைக்குத்தான் பின்னுகிறார் கள். தேன் முதலான பிறபொருட்களைத்தான் விற்பனை செய்வதுண்டு.

### 4.5.1 தேன் வியாபாரம்

இன்று இவர்களுடைய முக்கிய வியாபாரமாக இருப்பது தேன் விற்பனையாகும். தேனைப் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்கின்றார்கள். இலாபம் கிடைக்க வேண்டுமென்று விற்பதில்லை. இவர்கள் நாட்டு மக்களுக்குக் குறைந்த விலையில் தேனை விற்பனை செய்கிறார்கள்.

### 4.5.2 பிற வியாபாரங்கள்

கேரளாவில் வாழும் முதுவர்களிடையே பூண்டு வியாபாரம், இஞ்சி வியாபாரம் முக்கியத் தொழிலாக உள்ளது. போடி, மூணாறு போன்ற ஊர்களில் உள்ள கடைகளில், முதுவர் பூண்டு வியாபாரம் செய்துவருகிறார்கள். ஏலக்காய், காப்பித்தோட்டம் உடைய முதுவர்கள் ஏலக்காய், காப்பிக் கொட்டை போன்றவற்றை வியாபாரம் செய்கிறார்கள்.

### 4.6 வேட்டையாடுதல்

ஆண்மக்களின் வீரநிலைகளில் ஒன்றாக வேட்டையாடுதலைக் கருதலாம். மலைகளில் வாழும் முதுவர் தங்களைத் துன்புறுத்தும் விலங்குகளை வேட்டையாடுவதன் மூலம் விலங்குகளின் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர். வேட்டையாடுதல் என்னும் தொழில் முன்பு இவர்களிடம் அதிகமாக இருந்தது; இப்போது இல்லை என்பதைத் தகவலாளி கூறிய செய்தியின் மூலம் அறியமுடிந்தது.[8] முன்பு யானை, புலி போன்ற விலங்குகளின் தொந்தரவு அதிகம். இவர்களிடம் எப்பொழுதும் வேட்டை நாயும் இருந்திருக்கிறது. துப்பாக்கி கொண்டும் முன்பு வேட்டையாடியுள்ளார்கள். இரவில் மரத்தின் மேலே பரண் கட்டி, வேட்டையாடும் பழக்கம் இருந்தது. தோட்ட முதலாளிகளும் மிருகங்களை வேட்டையாடுவதற்கு இவர்களின் உதவியைத்தான் நாடியிருக்கிறார்கள்.

---

8, நாராயணசாமி, வயது 42 மேல்முட்டம்

### 4.6.1. கண்ணிபோட்டு பிடித்தல்

மிருகங்களின் தொந்தரவு கிடையாது என்பதால் துப்பாக்கி, வேட்டைநாய் கொண்டு வேட்டையாடும் தொழில் இன்று முதுவர்களிடம் இல்லை. மான், முள்ளம்பன்றி, சருகுமான், கேளையாடு போன்ற சிறிய விலங்குகளைக் கண்ணி வேட்டையாடுகிறார் கள். கம்பியினால் கண்ணி பின்னி அக் கண்ணியைக் குச்சியில் கட்டி மிருகங்களின் கழுத்தில் கண்ணியை மாட்டி, கழுத்தை இறுக்கும் வண்ணம் சுருக்குப் போட்டு வேட்டை யாடுகிறார்கள்.

4.6.2 அரசு அனுமதியில்லாமல் வேட்டையாடக் கூடாது என்ற உத்தரவினை அரசு பிறப்பித்துள்ளது. முதுவர் அரசாங்கத்துக்குப் பயந்து இன்று வேட்டை யாடுவதில்லை. மிருகங்களின் தொந்தரவு இருந்தாலும் நாட்டு வெடி மருந்துகளை வாங்கி வெடித்து, இடம் விட்டு இடம்பெயர வைத்துவிடுகிறார்கள். மிருகங்கள் பூச்சிகள் போன்றவை இவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது என்ற நம்பிக்கை இவர்களிடம் நிலவுவ தால், மிருகங்களைப் பற்றிய கவலையின்றி வாழ் கிறார்கள்.

### 4.7 முடிவுரை

கைத்தொழில் செய்வதில் பயிற்சியுள்ள முதுவர்கள் தங்கள் தொழில் திறமையை வளர்த்துக் கொள்ள முடியவில்லை; அவர்களிடம் முதலீடும் இல்லை. ஒரு பாய் அல்லது கூடை பின்னுவதற்குப் பத்துப் பதினைந்து நாட்கள் ஆகின்றன. வேலைக்குச் செல்ல வேண்டியது இருப்பதால், அவர்கள் இதை ஒரு தொழிலாகக் கருதிப் பின்னுவதில்லை. ஒவ்வொரு வருடமும் இவர்களிடம் சென்று களஆய்வு செய்பவர்கள், இவர்களுடைய கூடை, முறம், பாய் போன்றவற்றை வாங்கிக்கொண்டு வந்து, ஊரில் கொண்டுபோய்க் காட்டி, இவர்கள் வியாபாரம் செய் வதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி வந்திருக்கின்றனர். ஆனால் ஒருவரும் முதுவருக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. விற்பனை செய்வதை அவர்கள் விரும்பவில்லையென்றாலும், அவர்களிடம் உள்ள

திறமையை வெளிக் கொணருவது அவசியமான ஒன்றாகும்.

விவசாயம் செய்யும் தொழில் இவர்களிடையே இன்றும் நின்று நிலவி வருகிறது. அரசாங்கம் (காட்டு இலாகா) மலைப்பகுதிகளைத் தன் கீழ் எடுத்துக் கொண்டதால், முதுவர் தங்களது விருப்பப்படி எந்த இடத்தில் வேண்டுமானாலும் பயிர் செய்யமுடியாது; காட்டு இலாகா தடுத்துவிடும். பட்டா எழுதிய சொந்த நிலம் உடைய முதுவர் மட்டும், தங்கள் நிலத்தில் பயிர் செய்துகொள்கிறார்கள்.

தமிழக அரசு மேற்பார்வையில் இருக்கும் இப்பகுதியில் அரசு எவ்வித உதவியும் செய்வதில்லை என்று கள ஆய்வின் போது அங்குள்ள மக்கள் முறையிட்டனர். இவர்களுக்கு அரசு தண்ணீர் வசதி, மின்வசதி போன்றவைகளைச் செய்து கொடுத்தால் தாங்கள் வாழும் பகுதியில் நன்கு விவசாயம் செய்து கொள்வார்கள்.

முன்பு மரத்தின் மேலே பரண்கட்டி, மிருகங்களை வேட்டையாடிய இம்மக்கள் இன்று தோட்டங்களில் மரத்தின் மேல் பரண்கட்டி இரவில் தங்கித் தோட்டங்களைக் காவல் காக்கிறார்கள் (ஒ.பா.பி.இ.எண் 6.4). அரசு இவர்களுக்கு உதவி செய்தால், முதுவர் இனம் தொழில் துறையில் வளர்ச்சி அடையும்; தயாரிக்கும் கைவினைப் பொருள்களும் விற்பனைச் சந்தைக்கு வர முடியும் என்று தோன்றுகிறது. தாங்களும் மற்றவர் போல் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் முதுவர்களிடம் இருக்கிறது.

# 5 சடங்குகள்.

5.1 பழங்குடிகளில் ஒரு பிரிவினரான முதுவரின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை நடை பெறும் சடங்குகளைப் பற்றிக் கூறுவதாக இவ்வியல் அமைந்துள்ளது. குழந்தை பிறத்தல், பூப்படைதல், திருமணம், இறப்பு என்று வாழ்வில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகளில் முதுவர் சடங்குமுறைகள் எவ்வாறுள்ளது என்பதைக் கூறுதலே இவ்வியலின் நோக்கம்.

நாட்டுப்புறத்திலிருந்து ஆறுகல் தூரத்தில் ஒதுங்கி வாழ்கிறார்கள். வாழும் பகுதியில் எந்தவித வசதியும் கிடையாது. இவர்களது வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வகையில் நடைபெறும் சடங்குமுறைகள் எல்லாம் எளிமையாக உள்ளன.

## 5.2 குழந்தை பிறத்தல்

5.2.1 பெண்களுக்கு மகப்பேற்றிற்கென்று தனியாக ஒரு குடில் உண்டு. அங்குதான் பெண்களுக்கு மகப் பேறு நடைபெறுகிறது. குழந்தை, குடியில் உள்ள மற்ற பெண்களின் உதவியினால் பிறக்கிறது. குழந்தை பிறந்து, தாயும் குழந்தையும் 'முப்பது நாட்களுக்கு' அக்குடிலில் தனியாக இருக்கவேண்டும். குழந்தை பிறந்தவுடன் சுடுநீரில் குளிப்பாட்டுவதில்லை.

தண்ணீரில்தான் குளிப்பாட்டுகிறார்கள். தாயும் தண்ணீரில்தான் குளிக்கிறாள். சுடுநீரை வாழ்க்கையில் எப்போதும் பயன்படுத்துவதே இல்லை. மகப்பேற்றிற்குப் பின் 'எட்டு நாட்களுக்கு' அப்பெண்ணுக்குக் கேப்பைக் கூழ்தான் உணவாகக் கொடுக்கிறார்கள். இப்பொழுது கடையில் விற்கும் பேறுகால மருந்தும்வாங்கித் தருகிறார்கள்.

5.2.2 முப்பது நாட்கள் கழித்து குடிலுக்குள் நுழையும் போது தாய்மாமன் அரிசி, காய்கறி வாங்கி அனைவருக்கும் விருந்து வைத்து, சாமி கும்பிட்டுத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். குழந்தை பிறந்து எட்டு நாட்களில் தாய் வேலைக்குச் செல்கிறாள்: அங்ஙனம் செல்லும் போதே குழந்தையை முதுகில் சுமந்து கொண்டுதான் செல்கிறாள். வீட்டிலிருக்கும் போதும், தண்ணீர் எடுக்க, விறகு சுமக்க என்று பெண்கள் எங்கே சென்றாலும் முதுகில் குழந்தையுடன்தான் இருக்கிறார்கள். குழந்தைகளை ஆண்கள் தூக்குவதில்லை. தொட்டில் கட்டி, குழந்தையைப் போடுவது கிடையாது. தொட்டிலில் குழந்தையைப் போட்டால் தங்காது என்ற நம்பிக்கை அவர்களிடம் நிலவுவதே இதற்குக் காரணம்.

5.2.3 பெண் குழந்தைகள் அதிகமாக உள்ளன. வரதட்சணைக் கொடுமை இல்லாததால் பெண் பிறப்பதைப்பற்றி முதுவர் கவலைப்படுவதில்லை. குடும்பக் கட்டுப்பாடு இல்லாததாலும் குழந்தைகள் அதிகமாக உள்ளன.

## 5.3 காது குத்தல்—பெயரிடுதல்

5.3.1 நாட்டு மக்களைப் போல் காதணிவிழா, முடி இறக்குவது போன்ற சடங்குகளைக் குழந்தைகளுக்குச் செய்வதில்லை. காது குத்துதல், முடி இறக்குவது என்று தனியாக எதுவும் நிகழ்த்துவதில்லை. நான்கு அல்லது ஐந்து வயதில், பெரியவர்கள் எலுமிச்சமுள் அல்லது கிடாரங்காய் முள் எடுத்துத் தெய்வத்தை வணங்கிக் குத்திவிட்டு, புண்ணுக்குச் சுண்ணாம்பைத் தடவிவிடுகிறார்கள். தங்கத்தால் செய்யப்பட்ட 'கடுக்கனை' ஆண் குழந்தைகளுக்கும், வெள்ளிக்

கம்பியால் செய்யப்பட்ட 'காதுமணி'யைப் பெண் குழந்தைகளுக்கும் அணிவிக்கிறார்கள்.

5.3.2 இப்பொழுது சில குழந்தைகள் காதில் நட்சத்திரத்தோடுகளை அணிந்திருக்கின்றன. சில குழந்தைகள் காது குத்தாமலும் உள்ளன. ஆண்கள், பெரியவர்கள் ஆனாலும் கடுக்கனைக் கழற்றாமல் இருக்கிறார்கள். ஆனால் இன்றைய வாலிபர்கள் கடுக்கனைக் கழற்றிவிடுகிறார்கள்.

## 5.4 பெயரிடுதல்

ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் இவர்களின் பெயர்களை சாமிப் பெயர்களாகவும், நாகரிகப் பெயர்களாகவும் வைத்திருக்கிறார்கள். சான்றாகப் பின்வரும் பெயர்களைக் காணலாம்:

ஆண் குழந்தைகளின் பெயர்கள்:

பாண்டி
மணிகண்டன்
ஐயப்பன்
மயிலமுத்து
சின்னத்தம்பி
சந்தன்

பெண் குழந்தைகளின் பெயர்கள்:

கமலம்
அமரவல்லி
லட்சுமி
அம்மணி
ராஜலட்சுமி
பாலம்மா
பஞ்சவர்ணம்
கூந்தம்மை

இரட்டைக் குழந்தைகளின் பெயர்கள்

ஆண் – இராமர், இலட்சுமணர்
பெண் – சீதை, இலட்சுமி
ஆண், பெண் – சீதை, இராமர்
இராமப்பன், இலட்சுமி

இரட்டைக் குழந்தைகளுக்கு இவ்வாறு பெயர் வைக்கும் முறையை ந.சி. கந்தையா பிள்ளை தனது நூலில் கூறியுள்ளார்.[1] தர்ஸ்ட்டன்[2] சு. சக்திவேல்[3] போன்ற ஆரிசியர்கள் குறிப்பிடும் கருப்பன், கஞ்சன், கருப்பாயி, கூப்பி போன்ற பெயர்கள் இன்று பெரும்பாலும் மறுக்கப்படுவதில்லை நாகரிகப் பெயர்களும் உள்ளன என்று முதுவர் கூறினாலும், பெயர்களை நோக்கும் போது பெரும்பாலும் தெய்வங்களின் பெயர்களாகவே உள்ளன.

## 5.5 பூப்பு விழா

5.5.1 பூப்பு நீராட்டைச் சிறப்பாகக் கொண்டாடுவது இல்லை. வயதுக்கு வந்துவிட்டால், வயதுக்கு வந்த பெண்ணை 'ஐந்து நாட்களுக்கு' ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். இதற்கெனத் தனியாக ஒரு குடில் உண்டு. இக்குடிலுக்குத் 'தீட்டுவீடு' என்று பெயர் வழங்குகின்றது. மற்ற குடில்களை விட்டு சற்றுத் தள்ளி உள்ளது. மாதம் ஒருமுறை வீட்டு விலக்காகும் பெண்களும் நான்கு நாட்களுக்கு இக்குடிலில்தான் இருக்க வேண்டும். இச்சமயத்தில் இவர்கள் ஆண்கள் முகத்தைப் பார்ப்பதில்லை. முன்பு வயதுக்கு வந்தவுடன் பதினைந்து நாட்களுக்கு ஒதுக்கி வைக்கும் முறை இருந்தது.

5.5.2 ஐந்து நாட்கள் கழித்து வீட்டுக்கு அழைக்கும் போது காலையில் ஆற்றில் சென்று குளிப்பாட்டி, குடிலுக்கு அழைத்து வருகிறார்கள், பெண்கள். அதன் பின் அக்குடிலில் வாழும் அனைவருக்கும் பெண்ணின் வீட்டில்விருந்து நடைபெறும். தாய்மாமன் வசதி உடையவராக இருந்தால், பெண்ணுக்குச் சேலை எடுத்துக் கொடுத்து, குடியினர் அனைவருக்கும் விருந்து வைப்பார்.

5.5.3 'தீட்டு வீடு' என்றழைக்கப்படும் இக்குடிலுக்குச் சுவர் கிடையாது. நான்கு புறமும் ஈத்தை நாரைக் கம்புகளுக்கிடையே கட்டி, மேலேயும் ஈத்தை நாரை

---

1. ந.சி. கந்தையா பிள்ளை, தென்னிந்திய குலங்களும் குடிகளும். ப. 106.
2. E.Thurston, Castes and Tribes of Southern India Vol.V. P.85.
3. சு. சக்திவேல். பழங்குடிகள். பக்.29-30.

வேய்ந்துள்ளார்கள். அக்குடிலினுள் இருக்கும் பெண்ணைப் பார்க்க யாரையும் அனுமதிப்பதில்லை. 'தீட்டு வீட்'டில் தனியாக இருக்கும் பெண்களுக்குக் குடிலில் இருக்கும் மற்றப் பெண்கள் உணவு சமைத்துக் கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள். இச்சமயத்தில் பெண்கள் வேலைக்குச் செல்வதில்லை. பெண்கள் வயதுக்கு வந்துவிட்டால் வெளியே செல்லக் கூடாது என்பது போன்ற கட்டுப்பாடு கிடையாது. தண்ணீர் எடுக்கவும், விறகு எடுக்கவும் வயதுப் பெண்கள் வெளியில் செல்கிறார்கள்.

முதுவர் நாகரிகமாக மாறிவரினும் தனியாக ஒதுக்கி வைக்கும் முறை மட்டும் இன்னும் மாறாமல் உள்ளது.

## 5.6 திருமணம்

பாண்டியர் பரம்பரையில் வந்தவர்கள் என்று முதுவர் தங்களைக் கூறிக்கொள்கிறார்கள்.

முதுவர் இன உட்பிரிவுகளாகக் கணைக்கூட்டம், கனியத்துக் கூட்டம், எல்லிக்கூட்டம், துசனாக்கூட்டம் போதணிக்கூட்டம், மேலக்கூட்டம் என்ற ஆறு குலங்களைக் கூறுகிறார் சக்திவேல்.[4] ஆய்வுக்குட்பட்ட முதுவரிடையே துசனாக்கூட்டம், கணையாட்டுக் கூட்டம், எல்லிக்கூட்டம் என்ற மூன்று உட்பிரிவுகளை மட்டுமே களஆய்வின் மூலமாக அறிய முடிந்தது இக்கூட்டத்தினுள் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடு இல்லை.

### 5.6.1 திருமண முறை

திருமணம் செய்துகொள்வதில் முதுவரிடையே சில வரன் முறைகள் பின்பற்றப்படுகின்றன. குறிப்பிட்ட உட்குழுவினர் இன்ன உட்குழுவினருடன் தான் மண உறவுகள் வைத்துக் கொள்கின்றனர். பின்வரும் முறையில் முதுவர் மணஉறவு கொள்கின்றனர்;

எல்லிக்கூட்டம் கணையாட்டுக்கூட்டத்துடன்சம்பந்தம் செய்து கொள்ளலாம்.

துசனாக்கூட்டம் எல்லிக்கூட்டத்துடனும், கணை

4. மேலது.

யாட்டுக்கூட்டத்துடனும், சம்பந்தம் செய்து கொள்ள லாம். ஒரே கூட்டத்திலும், பொருந்தாக்கூட்டத்திலும் சம்பந்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் குடிலைவீட்டு ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள்.

### 5.6.2 பெண் தேர்ந்தெடுத்தல்

5.6.2.1. தாய், தந்தையர் பெண்கேட்டுத் திருமணம் செய்து வைக்கும் முறை முதுவர் இனத்தவரிடம் இல்லை. திருமணம். செய்து கொள்ளப் போகும் ஆணுக்கு, அவன் வாழும் குடியில் ஒரு பெண்ணைப் பிடித்திருந்தால் அவளுடன் சேர்ந்து வாழ்வதுதான் இவர்களது திருமணம் திருமணம், நண்பர்கள் மூலம் தான் நடைபெறுகிறது (நண்பர்கள் என்று கூறுவது பையனுடைய ஒன்றுவிட்ட தம்பி, அண்ணன் போன்ற வர்கள்). தனக்குப் பிடித்த பெண்ணுக்கு, தன் நண்பனின் மூலம் வளையலும், பாசியும் கொடுத் தனுப்புவான். பெண்ணிடம் கொடுக்கமுடியாவிட்டால் பெண்ணின் தோழியிடம் நண்பன் கொடுத்துவிடு கிறான். மறுநாள் அப்பெண் அந்தப் பாசி, வளையலை அணிந்துகொண்டால், சம்மதித்துவிட்டாள் என்பதை அறிந்து கொண்டு அவ்விருவரும் சேர்ந்து வாழ்கிறார் கள்.

5.6.2.2 பெண் சம்மதிக்கவில்லையென்றால் பைய னின் தாய் மாமன் பெண்ணின் குடிலுக்குச் சென்று, பெண் கேட்டு இருவரையும் சேர்த்து வைப்பார். அத்தை மகளைத் தாய்மாமன் வழியில் திருமணம் செய்யலாம். அக்கா மகளைத் திருமணம் செய்யும் முறை இவர்களிடம் இல்லை. அப்படித் திருமணம் செய்தால் குடியைவிட்டு ஒதுக்கி வைத்துவிடுகிறார் கள். அவ்வாறு திருமணம் செய்தவர்களின் உறவினர் கள் சில நாட்களுக்குப் பேசாமல் இருந்துவிட்டு, பின்பு ஒன்று சேர்ந்துகொள்கிறார்கள்.

5.6.2.3 வேறுகுடியில் இருக்கும் பெண் பிடித் திருந்து, தர மறுத்துவிட்டால் கடத்திக் கொண்டு வந்து திருமணம் செய்து கொள்ளும் முறையையும் காணமுடிகிறது.

### 5.6.3 திருமணத்துக்கு முன் பெண்ணைச் சந்திப்பது

5.6.3.1 முதுவரில் ஆணும், பெண்ணும் எட்டு

வயதுக்கு மேல் தனியாகப் படுத்துக்கொள்ள வேண்டும். பெண்களுக்கென்று ஒரு மடமும், ஆண்களுக்கென்று ஒரு மடமும் உள்ளன. ஆண்களின் மடம் 'இளந்தாரிகள் மடம்' என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு பெண்களும், ஆண்களும் தனியாகத் தங்கியிருக்கும்போது ஒருவருக்கொருவர் சந்தித்துப் பேச வாய்ப்பு ஏற்படுகிறது. பெண்களுடன் சேர்ந்து தூங்கும் மற்ற பெண்கள் தான் தோழிகள். இம்மடத்தில் இருக்கும்போது விரும்பிய பெண்ணைத் தேர்ந்தெடுத்து நண்பனின் மூலம் சொல்லி அனுப்புகிறான்; நண்பன், பெண்ணின் உடனிருக்கும் தோழிகளிடம் சொல்லுகிறான். பெண்ணுக்கு விருப்பம் இருந்தால், விரும்பிய ஆணுடன் சேர்ந்துகொள்கிறாள்.

### 5.6.3.2 இளந்தாரிகள் மடம்

இளந்தாரிகள் மடத்தில் தூங்குபவர்களுக்கு எல்லாம் தலைவன் ஒருவன் உண்டு. தலைவன் வயது அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறான். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனுக்கு உருமால் கட்டுகிறார்கள். முன்னால் இருந்த தலைவன் மோதிரத்தை மாற்றிப் போடுகிறான். தலைவன், தன் கீழ் உள்ள மற்ற இளந்தாரி வாலிபர்களை மேற்பார்வை செய்கிறான். இளந்தாரிகளைப் பிரித்து, ஒவ்வொரு கூட்டத்திற்கும், ஒவ்வொரு வேலையைப் பகிர்ந்தளிக்கிறான். மடத்துக்கு இரவில் நெருப்புப் பற்ற வைப்பதற்கு வீடு வீடாகச் சென்று விறகு வாங்குவது, மடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வது, மடத்துக்குத் தண்ணீர் எடுத்து வருவது, மடத்துக்கு வேயும் போதைப்புல் எடுப்பது என்று ஒவ்வொருவருக்கும் வேலையைப் பிரித்துக் கொடுக்கிறான். மடத்தில் படுக்க வருபவர்கள் எல்லாம் இரவில் ஏழுமணிக்கெல்லாம் படுக்க வர வேண்டும். வருவதற்கு நேரமானால், நேரம் கழித்து வந்தவனை மடத்துக்கு வெளியில் நிறுத்தி விசாரித்து, கம்பினால் அடித்துத் தண்டனை வழங்குகிறான். இளந்தாரிகள் சிகரெட், பீடி, வெற்றிலை பாக்கு போன்றவற்றை உபயோகப்படுத்தக் கூடாது. இளந்தாரித் தலைவனுக்குத் திருமணம் முடிந்துவிட்டால் அடுத்த இளந்தாரித் தலைவன் தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

### 5.6.3.3 பெண்கள்மடம்

பெண்கள் மடத்தில் தூங்கும் பெண்களுக்கெல்லாம் தலைவி ஒருத்தி உண்டு. ஆண்களின் தலைவனைப் போல், இவளும் பெண்கள் மடத்தில் உள்ளவர்களை யெல்லாம் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு வேலையை வழங்குகிறாள்.

5.6.3.4 இரண்டு மடங்களில் தங்கும் ஆண்களும், பெண்களும் இணைந்து ஒவ்வொரு குடிலுக்கும் சென்று இரவில் உணவு உண்கிறார்கள். ஆண்கள் எல் லாம் இணைந்து ஒரு குழுவாக வட்டமாக அமர்ந்து ஒரே தட்டில் உணவு உண்ணுவார்கள். பெண்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து ஒரே தட்டில் உணவு உண்ணுவார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடிலுக்குச் சென்று இவ்வாறு சேர்ந்து உணவு உண் கிறார்கள். உணவு உண்ணச் செல்லும் போது ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசிப் பழக வாய்ப்பு ஏற்படுகிறது. இணைந்து உண்ணும் பழக்கம் ஒற்றுமையை வளர்க் கிறது.

### 5.6,4 திருமணச்சடங்கு

திருமணச்சடங்கு என்று சிறப்பாக எதுவும் இவர் களிடம் நடைபெறுவதில்லை. தாலி அணியும் பழக்கமும் இல்லை. பெண்கள் கால்களில் மிஞ்சி அணி கிறார்கள். மாப்பிள்ளை வீட்டிலிருந்து இன்று வளையல், சேலை, பாசி வாங்கி வந்து பெண்ணுக்குக் கொடுக்கிறார்கள்.

### 5.6.5. திருமணச்சீப்பு (மூங்கில் புகாரி)

மணமான பெண்கள் என்பதற்கு அடையாளமாகத் திருமணச் சீப்பை மணமான பெண்கள் தலையில் செருகி இருக்கவேண்டும். இத்திருமணச் சீப்பை மாப்பிள்ளையே செய்து, பெண்ணின் தலையில் செருகவேண்டும். ஆண்கள் தலைப்பாகை கட்டியிருக்க வேண்டும். திருமணம் ஆன பெண்கள் தலையில் திருமணச்சீப்பு செருகி இருப்பது, ஆண்கள் தலைப் பாகை கட்டியிருக்கும் முறை என்பன முன்பு இருந்தன இப்பொழுது இம்முறை வழக்கத்தில் இல்லை.

### 5.6.6 அயல்குடிகளில்சம்பந்தம்

போடி அருகே உள்ள குரங்கணியிலுள்ள கீழ்முட்டத்தில் வாழும் முதுவர், உடுமலைப்பேட்டையிலும், கேரளாவில் ஈத்தையாறு, அடிமானி, குரங்காடி, நாவல் பாறை, கம்பெனிப்பாறை போன்ற இடங்களில் இருக்கும் முதுவாக்குடிகளிலிருந்து பெண் எடுத்துள்ளார்கள். இக்குடியிலிருந்து அங்குள்ளவர்களும் பெண் எடுத்துள்ளார்கள்.

ஆடி, சித்திரை மாதங்களில் ஆணும், பெண்ணும் சேர்ந்து கொள்வதில்லை.

### 5.6.7 மறுமணம்

5.6.7.1 ஆண், பெண் இருபாலாருக்கும் மறுதார மணமுண்டு.

ஆண்–மனைவி இறந்த பின்பு ஒரு வருடம் கழித்துத் திருமணம் செய்து கொள்ளலாம்.

பெண்–கணவன் இறந்து ஒரு வருடம் கழித்துத் திருமணம் செய்து கொள்ளலாம்.

ஒரு மனைவிஇருக்கும் போது,மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்யக் கூடாது. முதல் மனைவியைத் 'தீர்த்துக்கட்டி'விட்டுத் திருமணம் செய்து கொள்கிறார்கள். பலதாரத் திருமணமுறை (Polygamy) இவ்வினத்தவர்களிடம் கிடையாது,கணவன் இறந்தவுடன் கணவனின் தம்பியைத் திருமணம் செய்துகொள்ளும் முறையும் இவர்களிடம் இல்லை.

5.6.7.2 பிற பழங்குடிகளைப் போல விரும்பிய பெண்ணுடன் சேர்ந்து வாழும் முறை இருந்தாலும், பல பெண்களைச் சேர்த்துக்கொண்டு வாழும் முறையில்லை. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற முறை இல்லாவிடினும், ஒரு மனைவி இருக்கும் போது மற்றொரு பெண்ணைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற உயர் கொள்கையைக் காணமுடிகிறது. ''இவ்வினத்தவரின் பெரும்பான்மையோர் மேற்கு மலைச்சரிவில் உள்ள ஏலத் தோட்டங்களில் வசிக்கின்றனர். இவர்

கள் ஒருதார முறையைப் பின்பற்றுகின்றவர். பலதார மணத்தை வெறுக்கின்றனர். இருப்பினும் உயரமான பகுதிகளில் வசிக்கும் சிலர் பலதார முறையை அனுசரிப்பதை இவர்கள் கசப்புடன் ஒத்துக் கொள்கின்றனர்''[5] என்று தர்ஸ்ட்டன் கூறும் கருத்து, இவர்களுடைய திருமண முறையில் ஒப்புநோக்குதற்குரியதாகும். பிற பழங்குடிகளைவிட வித்தியாசமாக இருப்பதால் இவர்களுடைய 'முதுவாக்குடி' உயர்ந்த குடி என்று கூறிக் கொள்கிறார்கள்.

### 5.6.8 விதவையர் மறுமணம், பெண் உரிமை

5.6.8.1 ஆண்கள் மட்டும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலையில்லாமல் பெண்ணும் மறுமணம் செய்து கொள்ளலாம். திருமணமுறையில் ஆண்தான் பெண்ணை விரும்பித் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆண் ஆதிக்க நிலையில்லை. பெண், விரும்பிய ஆண்மகனைத் திருமணம் செய்து கொள்ளலாம்.

5.6.8.2 திருமணம் ஆன பெண்களும், மற்ற பெண்களும் வெளி ஆடவர்களுடன் பேசுவதில்லை. ஆண்களைக் கண்டவுடன் குடிலுக்குள் சென்று விடுகிறார்கள். கூலி வேலைக்குச் சென்று பழகிய பெண்கள் சிலர் வெளியேவருகிறார்கள். குடிலைவிட்டு வெளியில் சென்றால் ஆண்களுடன் சேர்ந்துதான் செல்கிறார்கள். பெண்கள் மட்டும் தனியாகச் செல்வதில்லை. பெண் இடம்விட்டு இடம் சென்று வந்தால், குடிலுக்குள் சேர்த்துக் கொள்வதில்லை. திருமணம் செய்து கொண்டு, மனைவி உயிருடன் இருக்கும் போது, அப்பெண்ணைத் தீர்த்துக் கட்டுதல் என்பது பெரும்

---

5 "...On the Cardamom Hills on the Western slopes where the majority of the tribes live they are monogamous and express abhorence of the both the polygamus and poly androus condition though they admit with and offectation of amused disgused that both are practised by their brethren on the high lands

E. Thurston, Castes and Tribes of Southern India Vol V. P92.

பாலும் நடைபெறுவதில்லை. விரும்பிய ஒரு பெண்ணுடன் இருந்துவிட்டு, திருமணம் என்ற உறவு ஏற்பட்டு இல்வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னால் அப்பெண் வேண்டாம் என்றால், அவ்வாணும் வேறு திருமணம் செய்துகொள்ளலாம். பெண்ணும் வேறு திருமணம் செய்துகொள்ளலாம்.

## 5.7 இறப்புச் சடங்கு

5.7.1 இறந்தவுடன் இறந்தவர்களின் உடல் புதைக்கப்படுகிறது. பிணங்களை எரிக்கும் முறை இவர் களிடம் இல்லை. இயற்கையான மரணமின்றி தற் கொலை செய்து கொண்டாலும் பிணத்தைப் புதைக் கத்தான் செய்கிறார்கள். இறந்த அன்றே பிணத்தைப் புதைத்துவிடுகிறார்கள். வெளியூரிலிருந்து உறவினர் கள் வரவேண்டுமென்றால், பிணத்தை வைத்திருந்து மறுநாள் புதைக்கிறார்கள். குடியில் வாழும் அனை வரும் இணைந்துதான் இறப்பு நிகழ்ச்சிகளை நடத்து கிறார்கள்.

5.7.2 வாய்க்கரிசி நெல் வைத்துக் கும்பிடுகிறார்கள். காட்டு மரங்களில் பாடை கட்டி அதில் இலைகளைப் போட்டு, பிணத்தைத் தூக்கிச் செல்கிறார்கள். வசதி யிருப்பவர்கள் அவர்களாகவே சப்பரம் செய்து தூக்கிச் செல்கிறார்கள். குடியிலிருந்து சிறிது தொலை வில் சென்று பிணத்தைப் புதைத்து விட்டு, ஆற்றில் குளித்துவிட்டுக் குடிலுக்கு திரும்புகிறார்கள்.

5.7.3 இறந்தவுடன் அவர்களாகத் தயாரித்த 'குழல்' (ஒ.பர்.பி.இ.எண் 6.7) 'உறுமிக் கட்டை', 'கொட்டு மேளம்' போன்ற இசைக் கருவிகள் மூலம் இசை எழுப்பிப் பிணத்தைத் தூக்கிச் செல்கிறார்கள்.

## 5.7 4 பிணத்தைப் புதைத்தல்

பிணத்தைப் புதைக்கும்போது மல்லாக்கப்படுக்க வைத்து, மண்ணைப் போட்டு மூடி, பிணத்துக்கு மேல் நான்கு பக்கமும் குச்சியை நட்டு, ஈத்தை நாரால் மேலே கூரை வேய்ந்து, குடில் போல் அமைத்துவிடு

கிறார்கள். இறந்தவர்கள் வீட்டினுள் இருப்பதுபோல் இருக்கவேண்டும் என்பதால் இப்பழக்கத்தைப் பின் பற்றுகிறார்கள்.

## 5.7.5 கருமாந்திரம்

5.7.5.1 இறந்த இரண்டாம்நாள் ஒரு கருமாந்திரம் நடைபெறும். அன்று இறந்தவர்களின் வீட்டில் உணவு சமைத்து, ஊருக்கு விருந்து வைக்கிறார்கள். மீண்டும் முப்பது நாள் கழித்து மற்றொரு கருமாந்திரம் நடை பெறும். இதில் குடியில் பொதுவாக அனைவரும் சேர்ந்து உணவு சமைத்து விருந்துண்கிறார்கள்.

5.7.5.2 நடைபெறும் இறப்பு நிகழ்ச்சியிலும், இரண்டு கருமாந்திரங்களிலும் குடியில் உள்ள பூசாரி கலந்து கொள்கிறார். பூசாரிக்கென்று தனியான நிகழ்ச்சி எதுவுமில்லை.

5.7.5.3 இறப்பு நிகழ்ச்சியில் இவர்கள் புதைகுழிக்கு மேல் தாங்கள் வாழும் குடிலைப் போல் அமைக்கும் முறை சிறப்பான நிகழ்ச்சியாக உள்ளது.

## 5.8 முடிவுரை

செய்திகளை நோக்கும் போது வாழ்வில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளையும், எளிமையாகத்தான் கருதுகிறார்கள். நாட்டு மக்களின் பழக்கத்தால் சில முறைகள் மாறி வருகின்றன.

பெயர்கள் சாமிப் பெயர்களாக இருப்பினும், பழமை யான பெயர்களாக வைக்காமல் நாகரிகமாக வைக் கின்றனர்.

இப்பொழுது நாட்டுக்கு வந்து காது குத்திக் காதணி அணிகின்றனர்.

வீட்டுக்கு விலக்கான பெண்ணை முதலில் பதினைந்து நாட்களுக்கு ஒதுக்கி வைக்கும் பழைய முறை மாறி இப்பொழுது நான்கு நாட்கள் மட்டும் ஒதுக்கி வைக் கின்றார்கள்.

திருமணப் பெண்ணுக்கு மலையில் கிடைக்கும் தேன், கிழங்கு முதலியவற்றைக் கொடுத்துத் திருமணம்

பேசும் முறை மாறி, கடையில் விற்கும் பாசி, வளையல், சேலை, பொட்டு ஆகியவற்றை வாங்கிக் கொடுக்கிறார்கள்.

வேறு ஊரில் இருக்கும் குடியுடன் சம்பந்தம் செய்கின்றார்கள். ஆண்களுக்கு மட்டுமின்றி, பெண்களுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை உள்ளது. பெண்கள், கணவன் இறந்தால்தான் மறுமணம் செய்துகொள்கிறார்கள். சொத்துரிமை முதலில் இவ்வினத்தவர்களிடையே பெண்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இம்முறை மாறி, மகனுக்குக் கொடுக்கிறார்கள்.

இறப்பு நிகழ்ச்சியில் சிறப்பு நிகழ்ச்சியாக இருப்பது, இவர்கள் இறந்தவர்களின் புதைகுழிக்கு மேல் குடில் அமைக்கும் முறையாகும்.

# 6. வழிபாடும் திருவிழாக்களும்

## 6.1 முன்னுரை

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் நற்செயல்கள் செய்யும் போதும், தீய செயல்கள் செய்யும் போதும் இறைவனிடம் முறையிட்டுத்தான் செய்கிறான். இறைவன் இல்லை என்று கூறும் நம்நாட்டு நாத்திகர் களும், நமக்கு மேலே ஒரு சக்தியுண்டு; அதுதான் நம்மை இயக்கி வைக்கிறது; அதற்கு உருவம் கிடை யாது என்று ஒருவாறு நம்புகின்றனர். மனிதன் தன் வாழ்வின் துணையாகக் கருதும் இறைவனைக் கொண்டாட நினைக்கிறான். அவ்விறைவனைப் பற்றிப் பற்பல கதைகள் கூறுகிறான். கதைகளுக் கேற்றபடி திருவிழாக்கள் கொண்டாடுகிறான். மக்கள் தங்கள் துன்பங்களை மறந்து மகிழ்வுடன் இருப்ப தற்கும் இத்திருவிழாக்கள் பயன்படுகின்றன.

இறைவனிடம் மனிதன் நம்பிக்கை வைப்பதற்கு, ''இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலைமையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழி பாட்டிற்கு அடிப்படைக் காரணம்'' என்று சிக்மண்ட் பிராய்டு கூறுவதை ஆறு. இராமநாதன் தன் நூலில் காட்டியுள்ளார்.[1] இறைவனை வழிபடும் பழக்கம்

1. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்' ப. 206.

அனைவரிடமும் உள்ளது; பழங்குடிகளான முதுவரிடமும் தெய்வ நம்பிக்கையும், விழாக் கொண்டாடும் பழக்கமும் உள்ளன.

## 6.2 வழிபடும் தெய்வங்கள்

6.2.1 இந்தியாவில் தெய்வ வழிபாடு, கடவுள் வழிபாடு, சிறுதெய்வவழிபாடு என்ற இருநெறிகளாக உள்ளது. வழிபாட்டு முறைகளுக்கேற்ப கடவுள், சிறு தெய்வம் என்று பிரிக்கின்றனர். சிறுதெய்வங்களுக்குச் செய்யப்படும் பூசை முறைகளும் இன்று பெருந்தெய்வ வழிபாட்டு நெறியாக மாறி வருகின்றன.

6.2.2 முதுவர், தாங்கள் வழிபடும் தெய்வங்களாகப் பலவற்றைக் கூறுகின்றார்கள். இவர்கள் கூறும் தெய்வங்களின் பெயர்களில் கடவுட் பெயர்களும், சிறு தெய்வப் பெயர்களும் ஆகிய இரண்டுமே அடங்கியுள்ளன.

ஆண் தெய்வங்கள்:

கடவுள்:

1. பழனியாண்டவர்
2. பகவான்
3. வீர சங்கர ராயரு
4. முப் பொருளு
5. மலையாள பகவதி
6. தாரான் தம்பிரான்
7. மலையாள ஐயப்பன்
8. சொக்கர்

சிறுதெய்வம்:

9. முனீசுவரர்
10. கருப்பசாமி

பெண் தெய்வங்கள்:

கடவுள்:

1. மீனாட்சியம்மன்
2. காமாட்சியம்மன்
3. பார்வதி

சிறுதெய்வம்:

4. பத்திரகாளி
5. மாரியம்மா

இவ்வாறு பல தெய்வங்களை வழிபடுகின்றனர். இதில் எந்தத் தெய்வத்திற்கும் உருவச்சிலை கிடையாது. 'வீரசங்கர ராயரு', 'முப்பொருளு', 'தாரான் தம்பிரான்' என்ற தெய்வங்களைப் பழமையான தெய்வங்களாகக் கருதுகின்றார்கள். முப்பொருளு என்பது, முருகன், விநாயகன், மலையாள ஐயப்பன் ஆகிய மூவரும் இணைந்த கடவுள் என்கிறார்கள். மலையாளத்தார், தமிழர் எனும் இரு இனத்தார் களின் தாக்கம் இவர்களிடம் இருப்பதால், இவ்விரு இனத்தினர் வழிபடும் தெய்வங்கள் முதுவர் வணங்கும் தெய்வங்களாக உள்ளன. இவர்கள் பல தெய்வங் களை வழிபட்டாலும் 'முருகன்'தான் முக்கியக் கடவுளாகக் கருதப்படுகிறான்.

''மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனலு லகமும்
வருணன் மேய பெருமணலு லகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''[2]

(தொ.பொ., சூ.5).

நிலங்களைப் பிரித்து, ஒவ்வொரு நிலத்திற்கும் கடவுளைக் குறிப்பிடும் தொல்காப்பியர், குறிஞ்சி நிலக் கடவுளாக முருகனைக் கூறுகிறார்.

குறிஞ்சி நிலம் என்று தொல்காப்பியர் கூறுவது மலையும் மலையைச் சார்ந்த இடமும். மலையில் வாழும் முதுவரும், முருகனை முதற்கடவுளாக வைத்து வழிபடுவது இலக்கியக் கூற்றுடன் ஒத்துக் காணப்படுகிறது. முருகன் என்று கூறாமல் பழனி யாண்டவர், சுப்பிரமணி என்று கூறுகிறார்கள். மலை மீது இருக்கும் இம்மக்கள் முருகனுக்குக் கோயில்

---

2. தொ. பொ. அகத்திணையியல், நூ. 5

எடுத்து வழிபடுவது, நாம் மலையில் இருக்கும் முருகனை வழிபடுவது போல் உள்ளது.

## 6.3 கோயில் அமைப்பு

*6.3.1* குடில்கள் அனைத்தும் கோயிலுக்குக் கீழ்தான் உள்ளன. மதுரையில் மீனாட்சி அம்மன் கோயில் கோபுரத்தின் உயரத்திற்கு மேலே வீடு கட்டக்கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. அது போலவே இவர்களிடமும், குடில் அமைப்பு கோயிலுக்குக் கீழ்தான் உள்ளது. இவர்கள் குடியிருக்கும் இடத்தில் எல்லாம் கோயில், குடிலைவிட்டுத் தள்ளி உயரத்தில் உள்ளது. குறைவான குடில்கள் இருக்கும் பகுதியில் கோயில் கிடையாது. கோயில் மண்ணால் கட்டப்பட்டு, வெளியில் சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளது கோயிலுக்கு மேலே தகரம் போடப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றி வெற்றிடமும் அதற்கு அருகில் மலர்ச் செடிகள் சிலவும் இருக்கின்றன. (ஒ. பா'பி.இ.எண் 6.9). திருவிழாநாட்களில் முதுவர் அனைவரும் இணைந்து கொண்டாடுவதற்கு ஏற்றவகையில் கோயிலை இடவசதியுடன் கட்டி உள்ளார்கள்.

*6.3.2* கோயிலினுள்ளே அதிக இடம் கிடையாது. கட்டிடத்தினுள் குறுக்கே ஒரு மரப்பலகையைப் போட்டு அதன் மீது குறிப்பிட்ட தெய்வங்களின் படங்கள் அனைத்தையும் வைத்துள்ளார்கள். பூசைக்கென்று ஒரு விபூதித்தட்டு மட்டும்தான் உள்ளது. சாம்பிராணிப் பிரம்பு, உறுமிக்கட்டை போன்றவற்றையும் கோயிலினுள்ளே வைத்திருக்கிறார்கள். கோயில் திருவிழாக்கள், ஊர்ப் பொது நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பூசாரி பங்கு கொள்கிறார்.

*6.3.3* கோயில் இல்லாத குடிகள் திருவிழாவின் போது, நாணலால் சிறிய பீடம் போல் செய்து, அதில் முருகன் படத்தை மட்டும் வைத்து வழிபடுவது இவர்களது பழைய வழிபாட்டு நிலையைக் காண்பது போல் உள்ளது. வீடுகளில் தெய்வப் படங்களை வைத்து வழிபாடு செய்யும் பழக்கம் இவர்களிடம் காணப்படவில்லை; அனைவரும் கோயிலில் தான் வழிபாடு செய்கின்றனர்.

## 6.4 திருவிழாக் கொண்டாடும் நாள்

ஒரு வருடத்தில் வருகின்ற அனைத்துப் பண்டிகைகளையும் கொண்டாடுவதில்லை. தைப்பொங்கல், கார்த்திகை தீபம், சித்திரை வருடப்பிறப்பு இம்மூன்று நிகழ்ச்சிகளை மட்டும் முதுவர் இனமக்கள் கொண்டாடுகிறார்கள். தைப்பொங்கல் தமிழர் திருநாளாக, இன்று தமிழக மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருவிழாவைத் தான் முதுவர் பழங்குடியினரும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். மற்ற இடங்களில் உள்ள முதுவர் குடிகளும் தைமாதம் பொங்கல் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

### 6.4.1 தைப்பொங்கல்

தை மாதம் முதல் தேதியன்றே கொண்டாடுவது இல்லை. தை முதல் தேதியிலிருந்து பதினைந்தாம் தேதி வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் ஏதாவது இரண்டு நாட்களில் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடுகிறார்கள். அனைத்து இடங்களில் இருக்கும் குடிகளும் ஒரே நாளில் கொண்டாடுவதில்லை. ஒவ்வொரு குடியும் வேறு வேறு நாட்களில்தான் கொண்டாடுகின்றனர். ஒரு குடியிலிருந்து, மற்றொரு குடிக்குத் தைத் திருவிழாவுக்குச் செல்கின்றார்கள். ஒரு குடிக்கு விருந்தினராகச் செல்வது தை மாதத்தில்தான் அதிகமாக நிகழ்கிறது. மேலும் வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுத்த பெண்ணைத் தை மாதத்தில்தான் பிறந்த வீட்டுக்கு அழைத்து வருகிறார்கள். ஒரு குடியில் கொண்டாடும் நாளை, மற்ற ஊர்களில் வாழும் குடியினருக்குச் சொல்லி அனுப்புகிறார்கள்.

6.4.2 ''பாரத நாடெங்கும் பண்டிகைகள் கொண்டாடப்படுவதால் நாட்டின் ஒருமைப்பாடு அக்காலத்திலேயே உருவாக நம் முன்னோர்கள் வழி செய்துள்ளனர். இத்தகைய வழிபாடு காரணமாக ஒரு தனிக்குணம், தனிப்பண்பாடு ஏற்பட்டு, சில்லரை வேற்றுமைகள் இருந்தும் பொதுவான ஐக்கிய பாவம்

ஏற்பட வழி ஏற்பட்டுள்ளது''[3] என்று ப. சங்கர நாராயண அய்யர் கூறுவது போல், திருவிழாக் கொண்டாடும் தினத்தன்று மற்ற குடிகளிலிருந்தும் மக்கள் வந்து இணைந்து ஒற்றுமையாகக் கொண்டாடு கிறார்கள்.

6.4.3 முன்பு இயற்கையில் கிடைக்கும் கிழங்கு, தேன் போன்ற பொருள்களை வைத்து மட்டுமதான் வழி பட்டார்கள். இன்று வழிபாட்டுமுறை மாறியுள்ளது. தைத்திருவிழா என்று கொண்டாடினாலும், வழிபடும் தெய்வமாக முருகன் படத்தைத்தான் வைத்துக் கும்பிடுகிறார்கள். நாட்டு மக்களின் வழிபாட்டு முறையைப் பின்பற்றித் திருவிழாக் கொண்டாடு கிறார்கள். எளிமையாகக் கொண்டாடிய மக்கள் இன்று சிறப்பாகக் கொண்டாடுவதால் பொருளாதார வசதி தேவையாக உள்ளது.

6.4.4 வருடத்தில் ஆறு மாதத்துக்குக் கூலி வேலைக் குச் செல்லும் இவ்வினத்தாருக்கு, ஒரு நாள் வேலைக்குச் செல்லாவிட்டால் கூலி கிடைக்காது. கிடைக்கும் வருமானத்தில் மிச்சப்படுத்திச் சேர்த்து வைத்துக் கொண்டு, வேலை செய்யும் முதலாளியிடம் இரண்டு நாள் லீவு பெற்றுக் கொண்டு, திருவிழாவைக் கொண்டாடுகிறார்கள். வசதியில்லாத முதுவாக்குடிகள் தை மாதத்தில் முதல் பதினைந்து நாட்களில் வசதியைப் பொறுத்து இடையில் இரண்டு நாட்கள் கொண்டாடுகிறார்கள். வசதியுடைய குடிகள் தை மாதத் தொடக்கத்திலேயே கொண்டாடுகிறார்கள்.

## 6.5 கொண்டாடும் முறை

6.5.1 குடிக்குள் இருக்கும் அனைத்துக் குடில்களும் இணைந்துதான் கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு குடில்களிலிருந்தும் பொதுவாகப் பணம் வசூலித்து, ஊருக்குள் வந்து அரிசி, காய்கறிகள், பூசைக்கு வேண்டிய பழம், பூ, வெற்றிலை, பாக்கு, கற்பூரம் போன்ற பொருள்களைப் பொங்கலுக்கு முதல் நாள் வாங்கி வருகிறார்கள். குடிக்குப் பொதுவாக ஒன்று அல்லது இரண்டு ஆடுகள் வாங்குகிறார்கள்.

---

3. ப. சங்கரநாராயண அய்யர், தமிழர் பண்டிகைகளும் பண்பாடும், முகவுரை.

6.5.2 முதல் நாளில் கோயிலின் முன்புள்ள திறந்த வெளி இடத்தில் பெரிய பந்தல் போடுகிறார்கள். மரங்களையும், மூங்கில்களையும் நட்டு அதன் மேலே கொடிகளையும், இலைகளையும் கூரையாக வேய்கிறார்கள். கூரையின் மேல் உள்ள இலைகள் நல்ல மணம் வீசக்கூடிய இலைகளாக உள்ளன. கோயில் இல்லாத குடிகள், முன்பு கூறியது போல் தற்காலிகமாக நாணலால் ஒரு கோயில் அமைத்து, அதில் முருகன் படத்தை வைத்து, முழுவதுமாகப் பந்தல் போடுகிறார்கள் (ஒ.பா.பி.இ எண் 6.20). பந்தலுக் கடியில் கருங்கல்லால் அடுப்புக் கட்டி வைக்கிறார்கள். களஆய்வில் பார்த்த போது வனதேவதைக்கு இரண்டு அடுப்பும், பொங்கலுக்கு ஐந்து அடுப்பும் வைத்திருந்தார்கள். எல்லாக் குடிகளிலும் வனதேவதைக்கு இரண்டு அடுப்பு வைப்பார்கள். பொங்கல் வைக்கும் அடுப்பின் எண்ணிக்கை, குடிலின் மக்கட்தொகைக்கு ஏற்ப மாறுபடும். குடிலுக்குள் இருக்கும் குடில்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் பொங்கல் வைக்கும் அடுப்புகளின் எண்ணிக்கையும் கூடும்.

6.5.3 ஒவ்வொரு குடிலிலிருந்தும் பெண்கள் விறகு எடுத்துக் கொண்டு வந்து, ஒவ்வொரு கட்டாகப் பந்தலின் கீழ் வைத்துவிடுகிறார்கள். பொங்கல் வைப்பதற்கென்றே சில அடுப்புகளும், தனியாகப் பல அடுப்புகளும் உள்ளன. பொங்கலுக்கு முதல் நாள் இரவில் குடிக்குள் ஒருவரும் உறங்கக் கூடாது. அனைவரும் கோயிலின் முன் உள்ள பந்தலின் கீழ்தான் இருக்கவேண்டும். இரவில் தனியாக உள்ள அடுப்புகளில், விறகுகளை வைத்து எரித்து வெளிச்சத்தை உண்டாக்குகிறார்கள். அடுப்பைச் சுற்றி ஒவ்வொரு குழுவாக உட்கார்ந்து கொள்வார்கள். முதல் நாள் இரவில்தான் இவர்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள். பொங்கலுக்குப் புத்தாடை எடுத்து உடுத்துகிறார்கள்.

### 6.5.4 இளந்தாரிகள் விழா

பொங்கல் வைப்பதற்கு முதல் நாள் 'இளந்தாரிகள் விழா' என்ற ஒரு விழாக் கொண்டாடுகிறார்கள். இளந்தாரிகள் அனைவரும் இணைந்து அருகில் உள்ள காட்டினை வெட்டவேண்டும். காட்டினை வெட்டும்

போது, இணைந்து வெட்டுகிறார்கள். குறிபிட்ட நாளில் குறிப்பிட்ட எல்லையுள்ள காட்டினை வெட்ட வேண்டும் என்கிறார்கள். குடியில் உள்ள பெரியவர்கள் கூறியபடி நிலத்தை வெட்டினால் அவ்விளந்தாரி வாலிபர்களுக்கு அரிசி, ரூபாய், கோழி போன்றவை பரிசுப்பொருளாக கொடுக்கிறார்கள். பொங்கல் வைக்கும்போது இப்பொருள்களைச் செலவழிக்கிறார்கள்.

## 6.5.5 ஆட்டம்

ஆண்கள் கோமாளி ஆட்டம் ஆடுகிறார்கள். உறுமிக் கட்டை, குழல், கொட்டிமேளம் என்ற இசைக்கருவிகள் வாசித்து, அதற்கு ஏற்ற முறையில் ஆடுகிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த பாடல்களைப் பாடி ஆடுகிறார்கள். கோமாளி ஆட்டத்திற்கு வேசம் போட்டுக் கொண்டு, தலையில் குல்லா அணிந்து கொண்டு ஆடுகிறார்கள். குல்லாவையும் ஈத்தை நாரிலேயே பின்னி வைத்துக் கொள்கிறார்கள். 'வேசம் கட்டுவது' என்பது தலையில் குல்லாவை வைத்துக்கொண்டு முகத்தில் பவுடர் அதிகம் பூசிக்கொள்வதுதான். முதல் நாள் இரவு முழுவதும் ஆடலும், பாடலும் கோயிலின் முன்பு நடைபெறும்.

6.5.6 மறுநாள் மாலை நான்கு மணியளவில் பொங்கல் வைத்தல் நடைபெறும். பொங்கலுக்கென்று வைத்திருக்கும் அடுப்பில் மொத்தமாக அரிசியைப் போட்டுப் பொங்கல் வைப்பார்கள். அங்கு விளைந்திருக்கும் காய்கறிகளையும், கடையில் வாங்கி வைத்திருக்கும் காய்கறிகளையும் ஒன்றாகப் போட்டுக் குழம்பு வைப்பார்கள். கடவுளுக்கென்று வாங்கி வைத்திருக்கும் ஆட்டை, கோயிலின் முன்பு வெட்டி, அதை உணவுக்குச் சமைத்துவிடுகிறார்கள். பொங்கல் வைத்துப் பிற சமையல் எல்லாம் முடித்த பிறகு, கோயிலில் உள்ள படங்களுக்குப் கற்பூர ஆராதனை செய்து, அனைவரும் இறைவனை வழிபட்ட பின்பு கோயிலின் முன்பாக ஒன்றாக இணைந்து உணவு உண்கிறார்கள். தண்டனைக் காசுகள், கோயிலில் கிடைக்கும் காசுகள் போன்ற பொதுப்பணத்தை இப் பொங்கல் திருவிழாவுக்குச் செலவழிக்கிறார்கள்.

6.5.7 இப்பொங்கல் திருவிழா மாலையில் நான்கு மணிக்கு மேல் கொண்டாடப்படுகிறது. இரவில்தான் நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக இருக்கும். பொங்கல் வைப்பதற்கு முதல்நாள் சென்று, அவர்களது கோயிலின் அமைப்பு முறையையும், பந்தல் போட்டிருக்கும் முறையையும், பந்தலின் கீழ் உள்ள அடுப்பு, விறகுக்கட்டு போன்றவற்றையும் நேரில் பார்க்க முடிந்தது. அவர்கள் இரவில் கொண்டாடும் நிகழ்ச்சிகளைத் தகவலாளியின் மூலம்தான் கேட்டு அறிய முடிந்தது. களஆய்விற்குச் சென்ற முதுவாக்குடிகளின் இருப்பிடத்தில் இரவில் தங்குவதற்கு வழி இல்லாததால், அங்கு இரவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரில் காணமுடியவில்லை. ஆடலைத் தனியாக ஆடிக் காட்ட மறுத்துவிட்டார்கள். இரவில் இசைக் கருவிகள் வாசித்து, அனைவரும் ஒன்றாக இணைந்துதான் ஆடமுடியும் என்று கூறிவிட்டார்கள்.[4]

6.5.8 ''பழந்திராவிடரின் மற்றொரு தெய்வம் முருகன் அல்லது வேலன். வேலன் அல்லது முருகன் பிற்காலத்திலே கந்தன், சுப்பிரமணியன், ஆறுமுகன் என்றெல்லாம் பெயர் பெறுகின்றான்''[5] என்று க. கைலாசபதி கூறியுள்ளார். இப்போக்கை முதுவரிடமும் காணமுடிகிறது. முருகனைப் பழனியாண்டவர், சுப்பிரமணி என்று தான் அழைக்கிறார்கள்.

6.5.9 ''கொற்றவைக்கு அடுத்தபடியாக நாம்சுற்றும் முற்றும் பார்க்கும் போது முருகன் வடிவம் தென்படுகிறது. கூட்டாக மனிதன் வாழ்ந்த பூர்வீக (Primitive) நிலையில் வேட்டையாடுதல், மிருகங்களைக் கொல்லுதல் முதலிய செயல்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாயிருந்தன. அது உண்மை; அதே செயல்களைச் சில வேளைகளில் செய்து பார்த்த போது கூத்து அல்லது ஆட்டப் பிறந்தது. உண்மை வாழ்க்கையில் செய்யும் ஒன்றை அவிநயத்துச் செய்து பார்க்கும்போது மனதிலே எழுச்சியும் துணிவும் களிப்பும் ஏற்படு

---

4. இராசேந்திரன், வயது 19, மேல்முட்டம்.
5. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப 20.

கின்றன. அவ்வாறு ஒருவன் செய்யும்போது அவனிடம் மந்திர சக்தி இருப்பதாகப் புராதன மனிதன் நம்பினான். அதற்கு அஞ்சினான். இந்த அடிப்படையிலேயே புராதனத் தமிழகத்திலே வேலன் என்னும் ஒருவன் தோன்றினான் என நாம் ஊகிக்கலாம்''[6] என்கிறார் க. கைலாசபதி.

6.5.10 வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டு மலையில் வாழ்ந்த இம்மக்கள் மிருகங்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, கையில் வேலை உடைய வேலனையே வழிபடும் தெய்வமாகப்பூர்வீகத்திலிருந்தே வணங்கி வருகிறார்கள். கைலாசபதியின் கூற்றுப்படி அச்சத்தின் காரணமாக வழிபடும் தெய்வமான முருகனையே காவல்வைத்து வழிபடுகிறார்கள்.

6.5.11 மனிதன் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு விழாக்களை நடத்துகிறான். பொருளாதார வசதி அதிகம் இருந்தால், விழாவினையும் சிறப்பான முறையில் நடத்துவர். ஒருபுறம் சிறப்பாக நடைபெற்றாலும், மறுபுறம் எளிமையான முறையிலும் சிலர் விழாக் கொண்டாடுவார்கள். ஆனால் இவ்வினத்தாரிடம் வருடம் ஒருமுறை கொண்டாடப்படும் இப்பொங்கல் விழாவில் பொதுவுடைமை நிலை காணப்படுகிறது. ''மக்களிடையே ஒற்றுமைக்கும் பக்தியின் பெருக்கத்துக்கும் மன அமைதிக்கும் திருவிழாக்களின் பங்கு முக்கியமானது,,[7] என்று ச.கு. கணபதி ஐயர் குறிப்பிடுகிறார். இவருடைய கூற்றுப்படி திருவிழாவின் போது ஒற்றுமையாக வசதியுடையவனும் வசதி இல்லாதவனும் ஒன்றாக இணைந்து பொதுவில்தான் பொங்கல் வைக்கிறார்கள். பொங்கல் விழா எளிமையாக, மன மகிழ்வுடன் கொண்டாடப்படுகிறது.

## 6.6 கார்த்திகை

கார்த்திகை மாதம், கார்த்திகைத் தீபத்தன்று சித்திர புத்திர நாயனாருக்கு வழிபாடு செய்கிறார்கள். மாலையில் குடில்களில் கார்த்திகைத்தீபம் ஏற்றி,

---

6. மேலது, ப 24.
7. ச. கு. கணபதி ஐயர், விழவும் பூசையும், ப. 5.

ஒவ்வொரு குடிலிலிருந்தும், மாவிளக்குஎடுத்து’ அதன் மேல் விளக்குப் போட்டு கோயிலில் சென்று வழிபடு கிறார்கள்.கடலைப்பொரி,வெற்றிலை,பாக்கு,வாழைப் பழம், தேங்காய் போன்ற பொருள்களைவைத்து வழி படுகிறார்கள். கார்த்திகை மாதம் வழிபடுவது,சித்திர புத்திர நாயனாருக்கு என்று கூறும் இம்மக்களால்’ வழிபடுவதற்குரிய காரணத்தைக் கூற முடியவில்லை இவ்விழாவினையும் இரண்டு நாட்கள் கொண்டாடு கிறார்கள்.

## 6.7 வீட்டார் வழிபாடு

ஒவ்வொரு விழாவுக்கும் முதல்நாள் வழிபடுவது வீட்டார் வழிபாடு என்கிறார்கள். தை மாதம் மட்டும் இறந்தவர்களுக்கு வேட்டி, சட்டை, சேலை எடுத்து வைத்து வழிபடுகிறார்கள். கார்த்திகை மாதம் ஆடை வைத்துக் கும்பிடுவதில்லை.இறைவனுக்கு மாவிளக்கு எடுத்து வழிபடுகிறார்கள்.

## 6.8 சித்திரை விழா

தமிழ் வருடப்பிறப்பு அன்று புத்தாடை உடுத்திக் கொண்டாடுகிறார்கள். அனைவரும் ஒன்றாக இணைந்து வழிபடுவதில்லை. அவருடைய குடில்களில் புத்தாடை அணிந்து’ உணவு சமைத்துக் கொண்டாடு கிறார்கள். சித்திரை மாதம் முதல் தேதியன்று வழி படுவதனை‘வீட்டார்’வழிபாடு என்றே கூறுகிறார்கள். இவர்கள் தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை போன்ற வேறு எவ்விதத் திருவிழாவையும் கொண்டாடுவதில்லை.

## 6.9 குலதெய்வம்

தெய்வமாக வழிபடும் தெய்வங்களின் பெயர்களையே குல தெய்வப் பெயராகவும் கூறுகிறார்கள். முருகன், மீனாட்சி, சொக்கர் என்று ஒவ்வொருவரும் குல தெய்வப் பெயர்களாகக் கூறுகிறார்கள். குலதெய்வ வழிபாடு என்று தனியாக வழிபடுவதில்லை. பெயரள வில் குலதெய்வம் என்று கூறிக் கொள்கிறார்கள்.

## 6.10 மழையை வேண்டி வழிபடல்

மிருகங்களுடன் இணைந்து மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்த மனிதன் இயற்கையினையே தெய்வமாக வழிபட்டான். சூரியன், சந்திரன், மழை போன்ற இயற்கையே கடவுள் மழை, வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது. அதனால்தான் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக 'வான்சிறப்பு'க்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

மழை, உலகில் வாழும் உயிர்களுக்கு அமிர்தமாக விளங்குகிறது; உண்பவர்களுக்குத்தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையேயாகும்.

''கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை''[8]

(குறள்)

பெய்யாமல் வாழ்வைக் கெடுக்கவல்லதும் மழை; மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்களுக்குத் துணையாய்க்காக்கவல்லதும் மழையாகும் என்று வள்ளுவர் மழைக்குத் தரும் முக்கியத்துவத்தை மணிமேகலை ஆசிரியரும் வலியுறுத்தியுள்ளார்.[9]

'' கோனிலை திரிந்திடின், கோணிலை திரியும்:
கோணிலைதி ரிந்திடில், மாரி வறங்கூரும்;
மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மன்னாள் வேந்தன்–
தன்னுயிர்............,,

(மணிமேகலை 7: 8-12)

அனைவருக்கும் வாழ்வளிக்கும் மழையை முதுவர், வழிபடும் தெய்வமாக வணங்குகிறார்கள். மலையில் மரங்கள் அதிகமாக இருப்பதால் மழைபெய்யும். மழை

8. பரிமேலழகர் (உ.ஆ.), திருக்குறள்' பா 955.
9. பொ.வே. சோமசுந்தரனார், மணிமேகலை, ப. 157.

பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாமல் பொய்த்து விட்டால், மழை வேண்டி வழிபடுகிறார்கள். இவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து இரண்டுகல் மேலேசென்றால் பாறைகளுக்கு இடையே தம்புரான் கோயில் உள்ளது. உருவச்சிலை கிடையாது. மழை வேண்டி அங்குச் சென்றுதான் வழிபாடு செய்கிறார்கள். முன்னோடித் தெய்வமான தம்பிரானுக்குக் கோழிக்குஞ்சு பலி கொடுத்து, பொங்கல் வைத்து வழிபாடு செய்கிறார் கள். மழையை வேண்டி வழிபாடு செய்யும் இவ் வினத்தினர் உருவமற்ற ஒன்றையே வழிபாடு செய் கிறார்கள். காலையில் வேலைக்குச் செல்லுவதற்கு முன்னால் சூரியனைச் 'சூரிய பகவானே' என்று கூறி வழிபட்ட பின்னர்தான் வேலைக்குச் செல்வார்கள்.

மழையையும், சூரியனையும் வழிபடும்பழைய வழக்கம் இன்றும் இவர்களிடம் நிலவி வருகிறது.

## 6.11 மற்ற விழாக்களில் பங்குகொள்ளல்

*6.11.1* முதுவர் இனத்தவர்கள் முன்பு தாங்கள் கொண்டாடிய பொங்கல் விழாக்களை மட்டும் கண்டு களித்தார்கள். இன்று போடியில் நடைபெறும் பரமசிவன் கோயில் திருவிழா, வீரபாண்டியில் நடை பெறும் மாரியம்மன் திருவிழா போன்ற விழாக்களில் குடும்பங்களுடன் வந்து கலந்து கொள்கிறார்கள். குடியில் வாழும் அனைவரும் விழாவிற்குச் செல்வார் கள்.பெண்கள் நாட்டுக்குள் வருவது இத்திருவிழாவின் போது மட்டும்தான். நாம் விடுமுறை நாளில் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்வது போலவும், கிராமப்புற மக்கள் நகரில் நடைபெறும் திருவிழா வுக்குக் குடும்பத்துடன் வந்து கலந்து கொள்வதைப் போலவும்,இருதிருவிழாக்களின் போது,முதுவப் பெண் கள், ஆண்கள், குழந்தைகள் ஆகியோர் நாட்டுப் புறங் களுக்கு வந்து கலந்து கொள்கிறார்கள்.

*6.11.2* திருவிழாவின் போது போட்டிருக்கும் கடை களில் பாசி, வளையல், அலுமினிய பாத்திரங்கள் போன்றவற்றை வாங்கிச் செல்கிறார்கள்; திரைப்

படங்கள் பார்க்கிறார்கள். இவ்விரு திருவிழாக்களின் மூலம் நாட்டுப்புற மக்களுடன் முதுவ இனத்தினருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. மலையிலே வாழும் மக்களின் இடமாற்றத்திற்கும் மனமாற்றத்திற்கும் இவ்விழாக்கள் ஒரு வாய்ப்பாக அமைகின்றன.

## 6.12 முடிவுரை

முதுவரிடம் மூன்று திருவிழாக்கள் காணப்பட்டாலும் சிறப்பாகக் கொண்டாடப்படுவது தைப்பொங்கல் மட்டும்தான். ஒவ்வொரு திருவிழாவுக்கும் பொங்கல் வைப்பது, இவர்களிடம் காணப்படும் சிறப்பான கூறாகும்.

பல தெய்வங்களின் பெயர்களைக் கூறியபோது அதில் கடவுள், சிறு தெய்வப் பெயர்கள் ஒன்றாகக் கலந்துள்ளன. கடவுள் வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என்ற வேறுபாடில்லை.

முருகன் கடவுளாகக் கருதப்படுகிறான். சிறு தெய்வங்களுக்குத்தான் பலி கொடுக்கும் பழக்கம் உள்ளது. ஆனால் இவ்வினத்தவர், கடவுளான முருகனுக்குப் பலியிட்டு வழிபடுகிறார்கள். இவர்களுடைய நெறியில் கடவுள் வழிபாட்டு நெறியும், சிறு தெய்வ வழிபாட்டு நெறியும் இணைந்து காணப்படுகிறது.

இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் முருகக் கடவுளே இவர்களுக்கு முழுமுதற் கடவுள். காக்கும் தெய்வம்.

நம்மிடையே விழாக்களின் போது சிறப்புக் கூறாக இரவில் நாடகம், பாட்டுக்கச்சேரி நடைபெறுவது போல் முதுவாக் குடிகளும் பாடியும் ஆடியும் மகிழ்கின்றனர்.

கார்த்திகை விழாவிற்குத் தீபம் ஏற்றுவதுடன் மாவிளக்கு எடுக்கும் முறை புதுமையாக உள்ளது. நாட்டு மக்கள் இறைவனுக்கு வேண்டிக் கொண்டு மாவிளக்கு எடுத்து, அதில் விளக்குப் போட்டு வழிபாடு

செய்வார்கள். அம்முறையில் இவர்கள் கார்த்திகைத் தீபத்தை, மாவிளக்கு எடுத்து அதில் விளக்குப் போட்டுக் கும்பிடுகிறார்கள்.

கார்த்திகைத் தீபமும் முருகனுக்கு உரிய ஒன்றுதான். ஆனால் கார்த்திகை தினத்தன்று சித்திரபுத்திர நாயனாரை வழிபடுவதாகக் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு திருவிழாவும் இரண்டு நாட்கள் கொண்டாடப்படுகிறது. நாம் முன்னோர்களைத் தனியாக வழிபடுகிறோம். ஒவ்வொரு திருவிழாவிற்கும் முதல் நாள் வழிபடுவதனை முன்னோர் வழிபாடு (வீட்டார் வழிபாடு) என்கிறார்கள்.

குல தெய்வத்திற்கு என்று தனியாக விழாக் கொண்டாடுவது கிடையாது.

மழை வேண்டி வழிபடும்போது அவர்களுடைய முன்னோடித் தெய்வமான தம்புரான் கடவுளை வழிபடுகிறார்கள்.

நகர்ப்புறத் திருவிழாக்களில் கலந்து கொள்வதால், தங்கள் விழாவினையும் சிறப்பான முறையில் கொண்டாட நினைக்கிறார்கள். முதுவாப் பெண்கள், நாட்டுப்புறப் பெண்களைக் காண்பதற்கு விழா ஒரு வாய்ப்பாக உள்ளது.

# 7 நாட்டுப்புறக் கூறுகள்

## 7.1 முன்னுரை

7.1.1. மலைவாழ் மக்களான முதுவர் பழங்குடியினரிடம், தைமாதத் திருவிழாவின் போது ஆடப்படும் கோமாளி ஆட்டம் மட்டுமின்றி பாடல் பாடும் பழக்கமும் உள்ளது. பாடல்களில் தாலாட்டுப் பாட்டு, சடங்குப்பாட்டு, ஆசைப் பாட்டு, ஒப்பாரி போன்ற பாடல்களைப் பாடுகின்றார்கள். நாட்டுப்புற இயலின் வகைகளாகப்பாடல்கள், கதைகள் ஆடல்கள், கூத்துகள், பழமொழிகள், விடுகதைகள், கதைப் பாடல்கள், விளையாட்டுகள் தேவதைகள்—நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள், சடங்குகள், புராண இதிகாசங்கள் என்று குறிப்பிடுகிறார்[1], சு.சண்முகசுந்தரம். இவ்வகைகளில் ஆடல்கள் என்ற முறையில் கோமாளி ஆட்டம் என்பதைத் தைமாதத் திருவிழாவுக்கு ஆடுவார்கள் என்பது முன் இயலில் கூறப்பட்டுள்ளது. (ஒ.பா. இ.எண்6.5.5). இவர்களிடம் காணப்படும் பழக்கவழக்கங்களும்(ஒ.பா.இ.எண் 3), சடங்கு முறைகளும் (ஒ.பா.இ.எண் 5) முன்இயலில் கூறப்பட்டுள்ளன.

7.1.2 முதுவர்களிடம் காணப்படும் பாடல்கள், கதைகள், நம்பிக்கைகள் போன்றவற்றையும், நாட்டுப்புற இயலின் வகைகளின் சிறுகூறுகளாகக் கருதப்படும்

---

1. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம், பக்.6—7

மருத்துவம், செய்வினை செய்தல் போன்றவற்றையும் கூறுவதே இவ்வியலின் நோக்கமாக உள்ளது.

### 7.1.2.1 பாடல்கள்

முதுவர் இனத்தவரிடையே ஆண், பெண் இருபாலரும் பாடல்கள் பாடுகின்றார்கள். அவர்கள் பாடிய பாடல் கள் பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டுப் படி யெடுக்கப்பட்டுப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன (ஒ.பா.பி.எண் 3). கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பினும், அப்பாடல் களின் மூலம்இவ்வினத்தாரைப் பற்றிய செய்திகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளமுடிகிறது. கிடைத் துள்ள பாடல்களைத்

தாலாட்டுப் பாட்டு,
சடங்குப் பாட்டு,
ஆசைப் பாட்டு,
தோழமைப் பையன் பாட்டு,
உடன்போக்குப் பாட்டு,
தலைவன் தலைவி பாட்டு

என்று வகைப்படுத்திக் கூறமுடிகிறது.

### 7.1.2.1.1 தாலாட்டுப் பாட்டு

தாய் தன் குழந்தையைத் தூங்க வைக்கப் பாடும் தாலாட்டுப் பாடலில் ஓசை நயம் உள்ளது. பாடலின் முதல் வரியில் முதல் எழுத்தும், இரண்டாம் வரியில் முதல் எழுத்தும் ஒன்றிவரும் வகையில் மோனை அமைப்புடன் தாலாட்டுப் பாடல் அமைந்துள்ளது. (ஒ.பா.பி.எண் 3.1). தாய்மாமன், தன் குழந்தைக்குக் ''கொலுசு செஞ்சு போடுவாரு, மால பண்ணிப் போடு வாரு'' என்று பாடும் தாய், மாமனுடைய தொழிலை யும் குறிப்பிடுகிறாள். பாடலின் வரிகளிலே அவள் குறிப்பிடும் ஊரின் பெயர்கள் பூர்வீக ஊரினையும், அவர்கள் வசிக்கும் பகுதியினையும் குறிப்பதாக உள்ளன.

### 7.1.2.1.2 சடங்குப் பாட்டு

பெண்கள் பூப்பெய்தினால் அவர்களை ஒரு தனிக் குடிலில் வைப்பார்கள் என்பது முன் இயலில் கூறப் பட்டுள்ளது(ஒ.பா.இ.எண் 5.5.1) தனியாகக் குடிலில் இருக்கும் போது, மற்ற பெண்கள் இணைந்து பாட்டுப் பாடுகிறார்கள். தனிக்குடிலில் இருந்து வீட்டுக்கு அழைத்து வரும்போது பெண்கள் இணைந்து பாட்டுப் பாடுகிறார்கள். சடங்குப் பாட்டு உண்டு என்பதை இரண்டு வரிப்பாடல் மூலம்தான் அறியமுடிகிறது (ஒ.பா.பி.எண் 3.2).

### 7.1.2.1.3 ஆசைப் பாட்டு

ஆசைப் பாட்டு என்று இவர்கள் குறிப்பிடும் பாடல் காதல் பாட்டுப் போல் உள்ளது. ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பினால் இணைந்து வாழும் வாழ்க்கையுடையவர்கள். இணைந்து வாழ்வதற்கு முன்னால், ஒருவரைப் பற்றி ஒருவர் ஆசையாகப் பாடிக்கொள்கிறார்கள். ஆண்கள் ஆசைப்பாட்டு, பெண்கள் ஆசைப் பாட்டு என்று தனித்தனியாகப் பாடல்கள் உள்ளன. ஆண் காதலியைப் பற்றிப் பாடுகிறான். தன் காதலியை உயர்வாக வருணித்துக் கொண்டு, தன்னைத் தாழ்வாகப் பாடுகிறான். காதலி தன் காதலனைப் பாடும்போது, காதலனை 'மன்னவர்' என்று உயர்வாகப் பாடுகிறாள். இவ்வாறு ஒருவருக் கொருவர் பாடும் பாடலை ஆசைப் பாட்டு (ஒ.பா.பி. எண் 3.3.1) என்கிறார்கள். இப்பாடல் கல்யாணத் திற்கு முன்பு பாடும் பாடலாக உள்ளது. போட்டிப் பாடலாகக் கொண்டும் இருபாலரும் பாடுகிறார்கள்.

### 7.1.2.1.4 தோழமைப் பையன் பாட்டு

காதலன், காதலி இருவரும் சேர்ந்து திருமண வாழ்க்கை நடத்துவதற்கு முன்னால், ஒரு தனிக் குடிலில் காதலனுடனும், அவனுடைய தோழனுடனும் தங்கியிருக்கவேண்டும். முடிவாகப் பெண்ணைத் தேர்ந் தெடுத்துக் கொள்வது என்பது இரண்டு நாட்களுக்கு

இச்குடிலில் தங்கி இருக்கும்போதுதான் என்பதைத் தகவலாளியின்[2] மூலம் அறியமுடிந்தது. அவ்வாறு தங்கியிருக்கும் போது தோழன் பாட்டும் பாடுகிறான். தன் நண்பனை மிகவும் உயர்வாகப் பாடுகிறான். பாடல் வரியைக் கொண்டு நோக்கும் போது, ஒரு பெண்ணுக்குப் பல ஆண்கள் போட்டியிடுவார்கள் என்பதை அறிய முடிகிறது. பல ஆண்கள் போட்டி யிடுகிறார்கள்; அவர்களில் சிறந்தவன் அவள் காதலன் என்று தோழன் எடுத்துக் கூறுகிறான் (ஒ.பா.பி. எண் 5).

## 7.1.2.1.5. உடன்போக்கு

பெண்ணுக்கும், ஆணுக்கும் விருப்பம் இருந்து, திருமணத்துக்குப் பெற்றோர்கள் அனுமதிக்கவில்லை என்றால் அவ்விடத்தை விட்டு இருவரும் ஓடி விடு கிறார்கள். தலைவனுடன் தலைவி உடன் போக்குப் போவதற்குத் தோழனும் தோழியும் உதவுகிறார்கள். விரும்பிய ஆணை, பெண்கள் பதினெட்டு வயது ஆன பின் பெற்றோர் அனுமதியின்றித் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற சட்டம் உள்ளது. திருமணத்தைத் தடுப்பதற்குப் பெற்றோர்களுக்கும் உரிமை கிடை யாது. முதுவர் இனத்தவரிடமும் இம்முறையைக் காணமுடிகிறது. வயது வரையறையில்லை. பெண்கள் வயசுக்கு வந்தவுடன், பெற்றோர்கள் அனுமதியில்லை யென்றால் ஓடி வருகிறார்கள். சேர்த்துக் கொண்டு வாழ்க்கை நடத்த குறிப்பிட்ட பருவம் வந்தவுடன், பெற்றோர்கள் அனுமதியின்றி,

> ‘வாழும் பிறாயம் வந்தது
> வாடி பொண்ணே ஓடிப்போவோம்’

என்கிறான் (ஒ.பா.பி.எண் 3.3.6.1). ஓடிப்போகும் பழக்கம் இவர்களிடம் உண்டு என்பதை அறிந்து கொள்ள இப்பாடல் வரிகள் சான்றுகளாக உள்ளன.

---

2. இராசேந்திரன், வயது 19. மேல்முட்டம்.

இப்பாடலில் சங்க இலக்கியப் பாடாலான

''. . . . . . . . . . . . . .
. . . . . . . . . ... ... ...
வண்டு இமிர் சுடர்நுதற் குறுமகள்
கொண்டனர் செல்வர் தங்குன்றுகெழு
நாட்டே''[3]

(ஐங்குறுநூறு—254).

என்ற பாடலில் உள்ள தலைவனுடன் தலைவி சென்றுள்ளதாக உள்ள கூறுகளை, முதுவர் பாடலில் காணமுடிகிறது.

''கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன் இரங்கலும்''[4]
(தொ.பொ.அ. 17)

தொல்காப்பியர் சொல்லும் விதியினையும் காண முடிகிறது.

தோழனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதை,

''பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப''[5]

(தொ. பொ. க. 12)

என்று தொல்காப்பியர் குறிப்பிடும் பாங்கனின் முக்கியத்துவத்தையும் இவர்களிடம் காணமுடிகிறது.

### 7.1.2.1.6 தலைவன் தலைவி பாடல்கள்

7.1.2.1.6.1 காதலியைக் காணாமல் காதலன்

---

3. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்கஇலக்கியம் தொகுதி ப- 376,
4. தொல்காப்பியம் பொருளதிகாரம், ப. 16.
5. மேலது. ப, 182,

வருந்துகிறான்; தன்னோடு பேசவேண்டாம்; தான் காணுமாறு நடந்தால் போதும் என்கிறான். தலைவி வெளியில் நடந்து போனால், தலைவனுக்குத் தலைவியைக் காணும் வாய்ப்பு ஏற்படும் என்பதைப் பாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது (ஒ.பா.பி.எண் 3.3.7.1). தலைவி இற்செறிக்கப்பட்டிருந்தால், தலைவியின் நிலையைத் தோழி, தலைவனுக்கு எடுத்துரைக்கும் நிலையைச் சங்க இலக்கியப் பாடல்களில் காண முடிகிறது. அதுபோல் காதலியைக் காணாத காதலன் மறைமுகமாகக் காதலியை நினைத்துப் பாடுகிறான். காதலன் காதலியின் மீது மிகவும் அன்புடையவனாக இருக்கிறான். காதலி தனிவழியாகப் போனால், அவளுக்கு ஆபத்து ஏற்படும் என்பதை அறிந்த தலைவன் தன் காதலியை நோக்கித் தனி வழியாகப் போனால், பத்திரமாகச் செல்லும்படி கூறுகிறான். பாடலில் இடம்பெறும் வரியின் மூலம் தன் காதலியின் நலனில் மிகுந்த அக்கறையுடையவன் காதலன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது(ஒ.பா.பி.எண்3.3.7.2). காதலியைக் காணாமல் காதலன் பாடுவது போல், காதலனைக் காணாத காதலியும் காதலனை நினைத்துப் பாடுகிறாள். ''போதையோரம்(போதைப் புல் பாதை)போற மச்சான்,பூமணம் கொள்ளலயோ'' என்று பாடுகிறாள் (ஒ.பா.பி.எண்3.3.8). இவ்வாறு காதலன், காதலி இருவரும் ஒருவரை ஒருவர் பாடிக் கொள்ளும் பழக்கத்தினை இப்பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

7.1.2.1.6.2 தாய் தந்தையற்ற அனாதைப் பெண்ணை விரும்புபவன் அப்பெண்ணை நினைத்துப் பாடுகிறான். இப்பாடல் மூலம் அனாதைப் பெண்ணையும் விரும்பிச் சேர்த்துக் கொள்ளும் முறை காணப் படுகிறது என்பதை அறியமுடிகிறது (ஒ.பா.பி.எண்3.3.7.3).

7.1.2.1.6.3 மேற்கூறிய பாடல்களின் வரிகளை நோக்கும் போது சங்கப் பாடல்களில் காணப்படும், திருமணத்துக்கு முன் தலைவன் தலைவி சந்திப்பு, தாய் தந்தையர் சம்மதம் இல்லையென்றால் தலைவனுடன் தலைவி உடன்போக்குச் செல்லுதல், தலை

வியைக் காணாமல் தலைவன் வருந்துவது, தலைவனைக் காணாமல் தலைவி வருந்துவது போன்ற கூறுகளை இங்குக்காணமுடிகிறது. தமிழர் அகவாழ்வுடன் இவர்களின் காதல் வாழ்வு முறைகள் ஒத்துப் போவனவாய் இன்றளவும் அமைந்துள்ளமை அறிந்து வியக்கத்தக்கதாகும்.

## 7.1.2.2 கதைகள்

கதைகள் அவர்கள் மொழியில் பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டுப் பின் இணைப்பில் தரப்பட்டுள்ளன (ஒ.பா.பி.எண்4). சிறு குழந்தைகளுக்கு கூறும் இரண்டு கதைகளை மட்டும் தகவலாளியின்[6] மூலம், அறியமுடிந்தது.'எறும்பின் கதை'(ஒ.பா.பி.எண்4.1) என்பதை எறும்பு ஏன் புற்றில் இருந்து வெளிவருகிறது என்பதற்குக் காரணம் கற்பிப்பதாக உள்ளது. 'கொட்டத் தேங்காய்' (ஒ.பா.பி.எண்4.2) என்ற இரண்டாவது கதை மாற்றாந்தாயின் கொடுமையைச் சித்தரிப்பதாக உள்ளது. இவ்விரண்டு கதைகளும் சிறுவர்களுக்குச் சொல்லப்படும் கதை என்பதால் பொருள் சிறப்பு மிகுதியாக இல்லை. இவை தமிழில் மொழி பெயர்த்துப் பின்னிணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன (ஒ.பா.பி.எண் 4).

## 7.1.2.3 மருத்துவம்

7.1.2.3.1 நாட்டுப்புறம் என்று முதுவர் குறிப்பிடும் நாட்டுப்புற மக்களிடையே விஞ்ஞான முறையிலான மருத்துவம் வளர்ச்சியுற்றாலும்,பழமையான நாட்டுப் புற வைத்தியமும் நின்று நிலவுகிறது. முதுவர் பழங்குடிகளிடம் நாட்டுப்புற வைத்தியமுறைதான் அனைத்து நோய்களுக்கும், வைத்தியமாக உள்ளது. எந்த நோய் வந்தாலும், இம்மக்கள் அரசாங்க மருத்துவமனைக்கோ அல்லது மருத்துவரிடமோ செல்வதில்லை. நோய் வந்தால்,இறைவனிடம்வேண்டிக்கொள்கிறார்கள் அல்லது மலைகளில்கிடைக்கும் இலைகள்,வேர்கள்போன்ற

---

6. பரமேஸ்வரி, வயது 25, மேல்முட்டம்,

மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரித்து நோயைக் குணப்படுத்துகிறார்கள்.

### 7.1.2.3.2 அம்மை

குடியில் வாழும் மக்களில் யாருக்காவது அம்மைநோய் வந்தால் தனியாக விட்டுவிட்டு ஓடிவிடும் பழக்கம் முன்பு இம்மக்களிடையே இருந்தது. அம்மை நோய் வந்தவர்கள் தனியாகவே குடிலில் இருந்து உயிரிழக்க வேண்டும். நாட்டு மக்களும் அம்மை நோய் தொற்று வியாதி என்பதால், அந்நோய் வந்தவர்களை வீட்டை விட்டு வெளியில் செல்லாமல், அவர்களைத் தனியாக வைத்திருந்து வைத்தியம் செய்கிறார்கள்.

அம்மை நோயை இம்மக்கள் பெரிய நோயாகக் கருதியிருக்கிறார்கள். இப்பொழுது அம்மைநோய் வந்தால், விட்டுவிட்டு ஓடுவதில்லை. அந்நோய் வந்தவரைத் தனியாக ஒரு குடிலில் வைத்து அவர்களுக்கு நோய் நீங்குவதற்கு, ஒரு பாத்திரத்தில் மஞ்சள் நீர், அதில் வேப்பங்குலை, நாலணாக்காசு, பூ முதலியவைகளைப் போட்டு நோய் வந்தவருடைய குடும்பத்தார் மட்டும் இறைவனை வேண்டிக்கொள்கிறார்கள். மூன்று அல்லது நான்கைந்து நாட்களில் இந்நோய் குணமாக வில்லையென்றாலும், குடியில் நிறைய மக்களுக்கு அம்மை நோய் வந்தாலும், குடியில் உள்ள குடிகள் முழுவதும் வீடு மெழுகிச் சுத்தம் செய்து, கோயிலுக்குச் சென்று வழிபட்டு நோய் நீங்க வேண்டிக்கொள்கிறார்கள். நோய் வந்தவர்களுடைய குடிலுக்குள் மற்றவர்கள் செல்வதில்லை. நோய் வந்தவர்களைப் பார்க்கத்தான் வேண்டும்; எப்படி உள்ளது என்று கேட்கக் கூடாது. நோய் வந்தவர்களுக்கு உணவாகக் காலையில் வேப்பஞ்சாறும், மற்ற நேரங்களில் இளநீரும் கொடுக்கிறார்கள்.

### 7.1.2.3.3 காய்ச்சல், வயிற்றுவலி

காய்ச்சல், வயிற்றுவலி போன்ற நோய் வந்தால் எவ்வித மருந்தும் தயாரித்துக் கொடுப்பதில்லை. நோய்

வந்தவர்களை நேரில் வைத்துக்கொண்டு, தண்ணீரை மந்திரித்து நோய் வந்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள். மந்திரித்த நீரைச் சாப்பிட்டால் நோய் நீங்கிவிடும். மந்திரம் தெரிந்தவர்கள் யார் வேண்டுமானாலும் மந்திரித்துக் கொடுக்கலாம். மந்திரித்த தண்ணீர் தான் காய்ச்சல், வயிற்றுவலி போன்ற நோய்களுக்கு மருந்தாக உள்ளது.

### 7.1.2..3.4 தலைவலி

தலைவலி வந்தால், போதைப் புல்லின் தூர் எடுத்து, கல்லில் அரைத்து, அந்தச் சாறைத் தலைவலிக்கு மருந்தாகப் போடுகிறார்கள். போதைப் புல்லின் தூரை அரைத்துத் தலையில் தேய்த்தால் தலைவலி நீங்கிவிடும்.

### 7.1.2.3.5. பாம்பு, பூச்சிக்கடி

பாம்பு மற்றும் பூச்சிகள் கடிக்கு அவ்விசத்தை முடியடிக்கும் மருந்து உண்டு. காட்டுத் தழைகளின் சாற்றை விசக்கடிக்கு மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள்.

### 7.1.2.3.6 எலும்புமுறிவு

கை, கால் எலும்பு முறிந்தால் அதற்கும் வைத்தியம் செய்து கொள்கிறார்கள். முறிந்த இடத்தைச் சேர்த்து வைத்துப் பச்சை இலையை மருந்தாக வைத்து, மேலே வெள்ளைத் துணியால் கட்டுகிறார்கள். இப்படியே கட்டினால் முறிந்த இடம் சேர்ந்துவிடும்.

இவ்வாறு இவர்கள் ஒவ்வொரு நோய்க்கும் மருந்துகளைத் தயாரித்துக் கொள்கிறார்கள். மருத்துவரிடம் செல்வதில்லை. மருந்துக்குப் பயன்படுத்தும் மருந்து மரங்களை நேரில் காட்டினார்கள். பெயர் தெரியாது என்று கூறிவிட்டார்கள். மற்றவர்களுக்குச் சொன்னால் இவர்கள் செய்யும் வைத்தியம் பலிக்காது என்ற நம்பிக்கை இருப்பதால், மூலிகைகளின் பெயர்களைக் கூறவில்லை.

### 7.1.2.4 நம்பிக்கைகள்

மனிதன் நாகரிகமடைந்து விட்டாலும், பழமையின் மீது நம்பிக்கை உடையவனாகத்தான் இருக்கிறான். வீட்டைவிட்டு வெளியில் செல்லும் போது நல்ல நேரம் பார்த்துப் புறப்படுகிறான். வெளியில் வந்த வுடன் சகுனம் பார்க்கிறான். இப்படி முதுவர் பழங் குடியினரிடமும் சில மூடநம்பிக்கைகள் நின்று நிலவு கின்றன.

*7.1.2.4.1* வீட்டைவிட்டு வெளியில் செல்லும் போது பூனை இடமிருந்து வலம் போனால் கெட்டது நடக்கும். பெண்தலைமுடி விரித்து இருந்தால் அது வும் தீதுதான். இவ்வாறு குடிலைவிட்டுச் செல்லும் போது இவர்களும் சகுனம் பார்க்கிறார்கள். இரவில் குடியைவிட்டு வெளியே போகக்கூடாது: போனால் கூடவே பிசாசு வரும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. மேலும் இரவில் சத்தம் போட்டுப் பேசக்கூடாது போன்ற நம்பிக்கையும் நிலவுகிறது. ஊர்களுக்கு வந்து சோதிடரிடம் சோதிடம் பார்ப்பது இன்று இவர் களிடையே வளர்ந்துள்ளது. சோதிடம் பார்ப்பதிலும் நம்பிக்கை உள்ளது.

### 7.1.2.4.2 செய்வினை

செய்வினை என்பது நாட்டுப்புறக்கூறுகளில் முக்கிய மான ஒன்றாக உள்ளது. இரு குடும்பத்தாரிடையே பகையேற்பட்டாலும், விரோதிகள் என்று யாராவது இருந்தாலும் அவர்கள் குடும்பம் சீர் கெடுவதற்குச் செய்வினை செய்து வைக்கிறார்கள். செய்வினை வைக்கப்பட்ட குடும்பத்தார், செய்வினை வைக்கப் பட்டதை அறிந்து அதை எடுத்துவிடுகிறார்கள். இம் முறை பெரும்பாலான மக்களிடையே பின்பற்றப்படு கிறது. மக்களுக்கு வைக்கப்படும் செய்வினைமுறை முதுவர்களிடையேயும் உண்டு. நாட்டு மக்களும் செய்வினை வைப்பதற்கு, இவர்களிடம் செல்வார் கள். மனிதனுக்கு வைக்கப்படும் செய்வினையை இவர்களிடமிருந்து அறிய முடியவில்லையென்றாலும்

மிருகங்களுக்குச் செய்வினையின் மூலம் 'வாய் கட்டுதல்' என்ற முறையை அறிந்து கொள்ள முடிந்தது.

### 7.1.2.4.3 மிருகங்களை வாய்கட்டுதல்

சிங்கம், புலி போன்ற மிருகங்கள் மனிதனைச் சாப்பிட்டால், செய்வினையின் மூலம் அம்மிருகங்களை உயிரிழக்கும்படிச் செய்கிறார்கள். மனிதனைச் சாப்பிட்ட சிங்கம் புலி போன்றவை மனிதனைச் சாப்பிட்ட எட்டு நாட்களுக்குள். அம்மிருகம் உணவு சாப்பிட முடியாதபடி வாயைக் கட்டி விடுகிறார்கள். மந்திரம் சொல்லிச் செய்வினை செய்து, மிருகம் உணவெடுக்க முடியாதபடி வாயைக் கட்டி விடுகிறார்கள். இரை எடுக்க முடியாமல் வாய் கட்டப்பட்ட மிருகங்கள் கத்திக்கொண்டே இறந்துவிடும். வாய் கட்டப்பட்ட மிருகத்தினை மீட்க நினைத்தால், மறுபடியும் செய்வினை செய்து, மந்திரம் சொல்லி மீட்கிறார்கள்.

செய்வினை செய்யும் பழக்கமும் உண்டு. செய்வினை மருந்துகளையும் கடையில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டுதான் தயாரிக்கிறார்கள். மற்றவர்கள் யாராவது செய்வினை செய்தால், அதை எடுக்கவும் இவர்களுக்குத் தெரியும்.

### 7.1.2.4.4, பேய் ஓட்டுதல்.

பேய் ஓட்டுவதற்குச் 'சாம்பிராணிப் பிரம்பு' என்ற ஒன்றைப் பயன்படுத்துகிறார்கள். 'ஒரே தூருடைய சாம்பிராணிப் பிரம்பு'[7] என்று கூறுகிறார்கள். சாம்பிராணிப் பிரம்பினைக் கோயிலில் வைத்திருக்கிறார்கள். பேய் பிடித்தவர்களின் முன் சாம்பிராணிப் பிரம்பை வைத்து, மந்திரம் சொல்லி சாம்பிராணிப் புகை போட்டு, பேய் பிடித்தவர்களுக்குச் சாம்பல் பூசினால் பேய் ஓடிவிடும். ஆண்பேய் பிடித்துள்ளதா. பெண்பேய் பிடித்துள்ளதா என்பதைக் கண்டுபிடித்து

---

7, நாராயணசாமி, வயது 42, மேல்முட்டம்.

அதற்குத் தகுந்தவாறு மந்திரம் சொல்லிச் சாம்பல் பூசி, பேய் ஓட்டுகிறார்கள். வெளியிடங்களிலிருந்து பேய் பிடித்தவர்களை இவர்களது குடிக்கு அழைத்து வந்தால், அவர்களுக்கும் பேய் ஓட்டுகிறார்கள், வேறு இடங்களுக்குச் சென்று பேய் ஓட்டமாட்டார்கள். இவர்கள் பேய் ஓட்டுவதற்கு முக்கியமாக இச்சாம் பிராணிப் பிரம்பைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

### 7.1.2.5. நாள் காலம் கணித்தல்.

நிலவைக் கொண்டு நாட்களைக் கணிக்கிறார்கள். முதல்பிறை மாதத்தின் முதல் நாள் என்றும் பௌர்ணமி வரும்நாளை பதினைந்தாவது நாள் என்றும் அமாவாசை வரும் நாளை முப்பதாவது நாள் என்றும் ஒரு மாதத்தின் நாட்களை கணக்கிடுகிறார் கள். ஓர் ஆண்டு முடிந்துவிட்டது என்பதை இரண்டு காடு வெட்டினால் ஓர் ஆண்டு என்றும்,குழந்தை பிறப் பதையும், சித்திரை மாதத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆண்டு என்றும் கணக்கிட்டார்கள் என் பதைத் தகவலாளியின்[8] மூலம் அறியமுடிந்தது.

### 7.2. முடிவுரை

நாட்டுப்புற இயல்களின் கூறுகளான பாடல்களில் இவர்களிடம் கிடைத்துள்ள சில பாடல்களில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பாடல்களை நோக்கும் போது சங்க இலக்கியக் கூறுகள் காணப்படுகின்றன. பாடல் அடிகள் அவர்களுடைய திருமண முறையைச் சித்தரிப்பதாக உள்ளன.

சிறுவர்களை உறங்க வைப்பதற்குத் தாலாட்டுப் பாடி உறங்க வைப்பதோடு, கதை கூறும் முறையும் காணப் படுகின்றது.கதைகள் காரணம் கற்பிக்கும் கதைகளாக உள்ளன.

பல வழிகளில் நாட்டு மக்களைப் பின்பற்றி வாழும் இவ்வினத்தினர் மருத்துவத் துறையிலும், பிறர் உதவியை நாடாமல் தாங்களாகவே தங்களுக்கு வரும் நோய்களைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

---

8. சிவந்தப்பன்: வயது. 41, கீழ்முட்டம்,

மூடநம்பிக்கைகள் இவர்களிடையேயும் காணப்படுகின்றன. மனிதர்களுக்குச் செய்வினை செய்யும் பழக்கம் இன்றும் இவர்களிடம் உண்டு. தங்களுக்கு மிருகங்கள் எவ்வித இன்னல்களும் அளிக்காது என்று கூறியது முன்னைய இயலில் கூறப்பட்டுள்ளது (ஒ. பா. இ. எண் 4. 6. 2.). மிருகங்களுக்கு வாய்கட்டும் திறமை இவர்களிடம் இருப்பதால், மிருகங்கள் இவர்களது செய்வினைகளுக்குப் பயந்து தீங்கிழைக்காமல் இருக்கின்றனவோ என்று ஊகிக்க முடிகிறது.

இயற்கையாக நாட்களை, காலத்தைக் கணிக்கும் முறை மாறி நாட்காட்டி, கடிகாரம் முதலியவைகளை கொண்டு நாட்களையும் காலத்தையும் அறிந்துகொள்கிறார்கள்.



பூசாரி (கோயில் வாயிலில்)



கோயில்



கோயில் (புறத்தோற்றம்)



நிலத்தைப் பண்படுத்துதல்



பரண்



உறும்பிசியும்(உறுமிக் கட்டையும்)
ஆட்டுத்தோலும்



பாய், கூடை, முறம்



கொயலு (குழல்)



ஆண்



பெண்



குழல்கள்



முதுவாப் பெண்கள் (உடை)

# துணைநூற்பட்டியல்

## தமிழ் நூல்கள்


இராமநாதன், ஆறு, ''நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்'', மணிவாசகர் நூலகம், மதுரை, 1982.

இலட்சுமி, எஸ். (மொ.பெ.ஆ.) ''இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை'', தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1965.

கணபதி ஐயர், ச.கு. ''விழாவும் பூசையும்'', நேஷனல் புத்தக டிரஸ்ட், வெளியிட்டது, புதுடெல்லி, 1967.

கைலாசபதி, க., ''பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்'', மக்கள் வெளியீடு, சென்னை, 1978.

சண்முகசுந்தரம், சு., ''நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம்'', இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, 1975.

சாமிநாதையர் (ப.ஆ.), ''சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்'' டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 1955, ஆறாம் பதிப்பு.

சிட்டி (மொ.பெ.ஆ), ''எல்வின் கண்ட பழங்குடி மக்கள்'', யுனைட்டெட்

பிரிண்டர்ஸ், சென்னை, 1967.

சீனிவாசவர்மா, கோ., ''நரிக்குறவப் பழங்குடி மக்கள்'', அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1978.

செங்கோ, ''வனாந்தரப் பூக்கள்'', வெட்டக்காட்டு இருளப் பள்ளர் என்ற கோவை இருளரைப் பற்றிய ஒரு சமூகவியல் அறிமுகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1979.

சோமசுந்தரனார். பொ. வே. (உ.ஆ,), ''மணிமேகலை'', கழக வெளியீடு, சென்னை, 1975.

பெரியாழ்வார், ஆர்., ''இருளர் வாழ்வியல்'', இந்திய மொழிகளின் மைய நிறுவனம், மைசூர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1976.

நடராஜன், எஸ்., ''தமிழர் பண்டிகைகளும் பண்பாடும்'' பிரதிபா பிரசுரம், சென்னை, 1976.

நமசிவாயம், சே., ''தமிழர் உணவு'', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

நெஸ்தூ ரிஹ், மி. (மொ.பெ.ஆ.), ''மனித இனங்கள்'', முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1974.

மங்களமுருகேசன், ந.க., ''இந்தியச் சமுதாய வரலாறு'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

வேங்கடசாமி, மயிலை சீனி., ''பழங்காலத் தமிழர் வாணிகம்'', நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., ''சங்க இலக்கியம்'' முதல் பகுதி, பாரி நிலையம், சென்னை.

''சங்க இலக்கியம்'', இரண்டாம் பகுதி, பாரி நிலையம், சென்னை.

''தொல்காப்பியம்–பொருளதிகாரம்'', இளம்பூரணம், கழகவெளியீடு, திருநெல்வேலி, 1969, இரண்டாம் பதிப்பு.

''திருக்குறள்'', பரிமேலழகருரை, கழக வெளியீடு, சென்னை, 1976.

## ஆங்கில நூல்கள்

Bahadur, K.P., 'Caste, Tribes and Culture of India', Vol V, Uttar pradesh, Ess Ess Publications, New Delhi, 1978.

Hutton, J.H., 'The Angami Nagas' Ox ford Uuiversity press, London, 1969.

Thani Nayagam, S., 'Tamil Culture and Civilization', Asia Publishing House, Bombay, 1970.

அகராதி

'Tamil Lexicon', Vol. VI Part I.

கட்டுரைகள்

கந்தையாபிள்ளை, ந.சி., முதுவர், தென்னிந்திய குலங்களும் குடிகளும், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1958, பக். 106–107.

சக்திவேல், சு., முதுவர், பழங்குடிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1973, பக். 29–33.

சோமலெ, வாழும் மக்கள், மதுரை மாவட்டம், கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம், 1980, பக். 87–88.

Articles

Arokianathan, S., 'The Sociolinguistic frontiers of Kinship Terminology in Dravidian' (Tamil). Tamil University, Thanjavur, 1983, PP. 1–15.

Edgar Thurston, Muduvar, Castes and Tribes of Southern India, Vol. V, Cosmo publications, India, Delhi, Reprinted 1975, PP. 86–102.

Karuppiyan, V., 'Workshop on Kinship Marriage and Family', Tamil University, Thanjavur 1983, PP. 1–10.

# பின்னிணைப்பு

## 1. தகவலாளிகளின் அகரவரிசைப் பெயர்ப்பட்டியல்

| | பெயர் | வயது | ஊர் |
|---|---|---|---|
| 1. | அழகம்மா | 45 | மேல்முட்டம் |
| 2. | அழகிரிசாமி நாடார் | 40 | குரங்கணி |
| 3. | இராமசாமி | 32 | மேல்முட்டம் |
| 4. | இராசேந்திரன் | 19 | மேல்முட்டம் |
| 5. | கமலா | 27 | மேல்முட்டம் |
| 6. | கிருட்டிணன் | 38 | மேல்முட்டம் |
| 7. | குப்பம்மா | 45 | மேல்முட்டம் |
| 8. | சிவந்தப்பன் | 41 | கீழ் முட்டம் |
| 9. | சுப்பையன் | 60 | மேல்முட்டம் |
| 10. | செல்லமுத்து | 53 | மேல்முட்டம் |
| 11. | தேவனமுதுவன் | 60 | மேல்முட்டம் |
| 12. | பரமேஸ்வரி | 25 | மேல்முட்டம் |
| 13. | நாராயணசாமி | 42 | மேல்முட்டம் |
| 14. | மல்லிங்கர் | 48 | மேல்முட்டம் |
| 15. | செயராஜ் | 25 | மேல்முட்டம் |

# 2. பாட்டுகள்

## 2.1 தாலாட்டுப்பாட்டு

கோம்பையில கூடாரம் என்னய்யா
கொத்தமல்லி யாபாரம்
கொத்தமல்லி வித்தவுடன் என்னய்யா
உம் மாமன் கொலுசு பண்ணிப் போடுவாரு
மருதையிலே கூடாரம் என்னய்யா
மாம்பழ வியாபாரம்
மாம்பழம் வித்தவுடன் என்னய்யா
உம் மாமன் மால பண்ணிப் போடுவாரு
ராரிரோ ராரிரோ ராரிரோ
என் கண்ணே ராரிரோ.

## 2.2 சடங்குப் பாட்டு

அந்தி வெள்ளி சந்தி வெள்ளி
ஆகாச விழுந்த வெள்ளி

## 2.3 ஆசைப்பாட்டு

*2.3.1 ஆண்:*

பாக்குப் போட்டவளே
பாதரசம் பூண்டவளே
கூப்பிட்டாலும் கேளலையோ
கொண்ணப்பூ வாயாலே

பெண்:

கூப்பிட்ட சத்தமெல்லாம்
குயிலு சத்தம் மயிலுசத்தம்
மன்னவர் சத்தமென்றால்
நான் வந்திருப்பேன் தனிவழியே

*2.3.2 ஆண்:*

கூந்தல் மூரிபிள்ளை
குடுவிதுப்போ நடுமுதிரி ஒ
காந்த மூரிபிள்ளை சக்காந்தம் பாடாதி

பெண்: கூந்தல் மூரா குடுவிதுப்போ நடுமுதிரா
காந்தமுரா சக்காந்தம் பாடாதி

2.3.3. ஆண்:

மஞ்சமினுக்கி பிள்ளை ஓ பிள்ளை
மயிரெல்லாம் பூமினுக்கி
கொண்டை மினுக்கி பிள்ளை
கொண்டு போவேன் கிண்டி தேசம்

பெண்:

பட்ட மரத்தடியே ஏ மச்சான்
பாம்பிருக்கும் தேளிருக்கும்
வட்ட வாணி கொண்டையிலே
சந்தான பூவிருக்கும்

ஆண்:

ஏ சாந்து சார் குழலி ஏ பிள்ளை
சேர்ந்துனிக்கு சேகுழலி
சேர்குழலி போட்டதின்னு
சேதி ஒன்று கேட்டதின்றுருக்கு

195488

2.3.4

ஏ பிள்ளை நீ கடுந்தின்ன காத்தவளே
வாசன்னப்பூ சாதிக்கு அப்புறந்தான்
பம்பைப் பருவமச்சு வந்து பார்வை
நாளெல்லாம் உம்மேலே
வரவர உறவு முறையைத் தாண்டி
உருகிக்கேயிருக்கிறோம்.

## 2.3.5 தோழமைப் பையன் பாட்டு

வானத்தப் பார்த்து வளர்ந்தது ஒரு திருகுமுடி
திருகுமுடி ஓரத்தல சுத்துறான் திருட்டுப் பையன்
காளையங்காள கண்ணாடி மயில் காளே
போட்டியில் சுத்துது பார் நல்ல காளே.

## 2.3.6 உடன்போக்கு பாட்டு

2.3.6.1

Y567
N92

கூடுவது குடுமித்தல
பழகினது பம்மத்தல

வாழும் பிராயம் வந்தது
வாடி பொண்ணே ஓடிப் போவாம்.

2.3.6.2

. . . . .... .... ..... ....
. . . . . . . . .... ....
கைநிறையக் கட்டிருந்தேன்
வித்திராக்கள்ளி உன்னைக் கங்கம் கடத்திடுவேன்

## 2.3.7 தலைவன் பாட்டு

2.3.7.1

[1]அணலி கொல கொலக்கும்
அருங்காட்டுத் தேனடையும்
அருவிபோல அணலி குஞ்சே
வந்து போய் நட.

2.3.7.2

பான தலையிலே வச்சு
பட்டண பாதவழி போறவளே
பான நொறுங்கினாலும் உன்
பால்காம்பு சூதானமடி

2.3.7.3

பூசணிப்பூ
பூத்ததெல்லாம் இளம்பூ
நாதியத்த பூவுக்கு—நான்
ஆசப்பட்டேன்.

## 2.3.8 தலைவி பாட்டு

கல்லடி நண்டே
கேணியோரம் பூந்தோப்பே
போதையோரம் போறமச்சான்
பூ மணம் கொள்ளலயோ

---

1 அணலி -அணில்

## 2 3. 9 ஒப்பாரிப் பாட்டு

கல்லால தூணுக்கு என் சாமி—நான்
கலக்கமில்லேன்னு இருந்தேன் இன்னைக்கி
கல்லால தூணுமே— என் சாமி
கலங்கி விழுந்ததென்ன
இரும்பால் தூணுக்கு என் சாமி—நான்
இம்சு இல்லேன்னு இருந்தேன் இன்னைக்கி
இரும்பாலே தூணுமே—என் சாமி
இத்து விழுந்ததென்ன
செம்பால தூணுக்கு என் சாமி—நான்
சேதமில்லேன்னு இருந்தேன் இன்னைக்கி
செம்பால தூணுமே—என் சாமி
செதறி விழுந்ததென்ன
நான் தாலி கழட்டினோ— என் சாமி
தலவேசம் கொலஞ்சனோ
கையில் பூமால— என் சாமி
கருக்கொலஞ்சு போனதடி
கையில நெல்லிப்பழம் —என் சாமி
உருக்கொலஞ்சு போனதடி
கையில கருமாடு —என் சாமி
கனங்குறஞ்சு போனதடி
நெத்தியிலே பூச்சரம்—என் சாமி
நெறம் கொலஞ்சு போனதடி
மாரியிலோ மஞ்சதுண்டு —என் சாமி
மடிமெத்த நோகுதடி.

# 3. கதைகள்

## 3.1 உள்ளி இறும்பிக்கதை

ஒரு ஊருல கட்டெறும்பும், சித்தெறும்பும் இருந்துச்சாம். எப்போதும் கட்டெறும்பே வேலைசெஞ்சு, சித்தெறும்புக்கும் சேர்த்து சமச்சு போட்டுச்சு. ஒரு நாளு, கட்டெறும்பு சித்தெறும்புக்கிட்ட ஏன் இப்படி ஒரு வேலையும் செய்யாம சோம்பேறியா இருக்க, ஏதாச்சும் வேல செஞ்சு சம்பாரிச்சுக்கிட்டு வாண்ணு திட்டிருச்சு. அதனாலே கோவிச்சுக்கிட்டு போன சித்தெறும்பு ரொம்ப நேரம் கழிச்சு வீட்டுக்குத் திரும்பி வந்துச்சு. திரும்பி வந்த சித்தெறும்பு, வீட்டுல இருந்து சோற எடுத்து சாப்பிட்டுச்சு. சோத்தோட கட்டெறும் பின் கால் வந்துச்சு. ஐயோ சோறு ஆக்கும் போது, கட்டெறும்பு உள்ளுக்குள்ள விழுந்து செத்துப்போச்சு போலிருக்குனு தெரிஞ்சுக்கிட்ட சித்தெறும்பு அழுது கிட்டே போயி ஒரு பொந்துக்குள்ள போயிருச்சு. பொந்துக்குள்ள போனதால், அன்னையிலருந்து சித்தெறும்பு பொந்துலிருந்துதான் வருது.

## 3.2 கொட்டத் தேங்காய்க் கதை

ஒரு ஊர்ல புருஷன், பொண்டாட்டி, ஒரே பிள்ள மூணு பேரும் இருந்து வந்தாங்க. கேப்பக்காடு வெட்ட புருஷன் சாமிய வேண்டிக்கிட்டான். நல்லா விளஞ்சா பொங்க வைச்சு, பொண்டாட்டிய வெட்டிப்பலி கொடுக்கிறேன்னு வேண்டிக்கிட்டான். காடு நல்லா விளஞ்சுச்சு. பொங்கல் வைக்க, காட்டுக்குப் பொண்டாட்டியை கூட்டிக்கிட்டுப் போனான். பொண்டாட்டி பொங்கல் அடுப்பக் குனிஞ்சு ஊதும் போது, வெட்டிட்டான். வீட்டுக்கு வந்தவொடன, அந்தப்பிள்ள ஒவ்வொரு நாளா அம்மா எங்க, அம்மா எங்கண்ணு கேட்டுச்சு. அம்மா காட்டுக்கு விறகு எடுக்க போச்சு திரும்பியே வர்றலண்ணு சொல்லிட்டான்.

---

உள்ளி—கட்டெறும்பு
இறும்பி—சித்தெறும்பு

பெரிய பிள்ள ஆனப்புறம் அவங்க அம்மா செத்துப் போயிடுச்சுண்ணு தெரிஞ்சு போச்சு. அவங்க அப்பா பக்கத்து வீட்டுப் பொம்பளய சேத்துக்கிட்டாரு. அந்தப் பொம்பள இந்தப் பிள்ளைக்குச் சோறு போடாம,நெறைய வேல வாங்கிகொடுமப்படுத்திச்சு. இந்தப் பிள்ளைக்குக் காராமணிப்பசு பால் கொடுத்துச்சு. அதப் பார்த்த அவங்க அம்மா எனக்கு உடம்பு சரியில்ல, வைத்தியர் காராமணிப்பசு இரத்தத்தப் பூசச் சொன்னாருன்னு சொல்லி அந்த பசுவைக் கொன்னுருச்சி.

அதக்கப்புறம் காட்டில கோவைப்பழத்தைச் சாப்பிட்டுச்சு அந்தப்பிள்ள. அந்த மரத்தையும் வெட்டிப் பிடிச்சு அந்தப்பொம்பள.

மறுபடியும் பொங்க வைக்க கோயிலுக்குப் போகும் போது இந்தப்பிள்ளய விட்டுட்டுப் போயிட்டாங்க. கோயிலுக்கு விட்டுட்டுப் போகும் போது ஒரு கொட்டத்தேங்கா வாங்கித்தரச் சொல்லிச்சு. அவங்க அப்பா வாங்கிக் கொடுத்துட்டுப்போச்சு,அந்தப்பிள்ள அந்தத் தேங்காயத் தூக்கிட்டு வெளிய போகும்போது எல்லாரும் சாமி வருது, சாமிவருதுன்னு சொல்லி அந்தப் புள்ளயக்கும்பிட்டாங்க.

கொஞ்ச நாளுகழிச்சி, அந்த ஊர் ராசாவுக்குப் பொண்ணு பார்த்தாங்க. அப்ப, ராசா மோதிரம் யாருக்கைக்குச் சேருமோ அந்தப் பொண்ணத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னாரு. ராசா மோதிரத்த அந்த ஊர்ல எல்லாப் பொம்பளைக்கும் போட்டுப் பார்த்தாங்க.அந்த மோதிரம் இந்தப்பிள்ள கைக்குச் சரியாக இருந்துச்சு. ராசா இந்தப்புள்ளயவே கல்யாணம் செஞ்சுக்கிட்டாரு. அந்தப்பிள்ள ராசாவோட சேந்து சந்தோசமா இருந்துச்சு.

# 4. வழக்குச் சொற்கள்

## 4.1. உறவுப்பெயர்கள்

| தமிழ் | முதுவாப்பாசை |
|---|---|
| அம்மா | அம்ம |
| அப்பா | அப்பலு |
| பாட்டி | முத்தி |
| பாட்டன் | முத்தன் |
| அத்தை | மாமி |
| மாமன் | மாமன் |
| பெரியம்மா | மோத்தம்மா |
| பெரியப்பா | மோத்தப்பன் |
| சின்னம்மா | குஞ்சம்மாள் |
| சித்தப்பா | நெடிலப்பன் |
| மகள் | பிள்ள |
| பெண்பிள்ளை | பொம்பள குஞ்சு |
| ஆண்பிள்ளை | ஆம்பள குஞ்சு |
| பெரியபிள்ளை | விட்டத்தாய் |
| மூத்த சகோதரி | வெலியக்கா |
| இரண்டாவது சகோதரி | நெடுலக்கா |
| கடைசிப்பையன் | கட்டியப்பன் |
| அத்தையின் மகள் | குட்டலு |
| அத்தையின் மகன் | சன்னாரு |

### 4. 2. குடியின்பெயர்கள்

செம்பத்துழுவுக்குடி
கண்டத்துக்குடி
பச்சைப்புல்குடி
டாங்கிக்குடி
தம்புரான் குடி
குரங்காட்டிக்குடி
செங்குலத்துக்குடி
பொட்டாங்காடு குடி
குண்டலக்குடி
கம்பெனிக்குடி
நாவல் பாறைக்குடி
அரளிப்பாறைக்குடி
மஞ்சக்குளிக்குடி

### 4.3. மலைகளின் பெயர்கள்

மந்திரிகெல்லு
துவலயாறு
ஆட்டில மல
நெத்திப்பட்டன்
மண்ணுமுடி
தேமிரவற
உப்பளவற
கேழையாடு வற

**பாறைகளின் பெயர்கள்**

அடகுப்பாற
சோத்துப் பாற
தண்ணிப்பாற
கடலப்பாற

## 4.4 அணிகலன்கள்

| தமிழ் | முதுவாப்பாசை |
|---|---|
| தோடு | — தட்டு, கொப்பு, காதுமணி, குனுக்கு |
| வெள்ளிக்கம்பி | — முருகு |
| பாசி | — கெல்லா |
| மாட்டல் | — கொண்டக் கொத்து |
| மூக்குத்தி | — பேசரி |
| திருமணச்சீப்பு | —மூங்கில் புகாரி |
| மிஞ்சி | — முஞ்சி |

## 4.5 இசைக் கருவி

உறுமிக்கட்டை— உறும்பிசி
குழல் — கொபலு

## 4.6 விலங்குகள்

பன்றி — பென்றி
மான் — மானே
கேழையாடு — குந்துகாழை
சருகுமான் — குயிரான்
முயல் — முசல
கோழி — கோயி
பெட்டகோழி — பெடசகோயி
சாவல் — சாவல கோயி
குரங்கு — எதுவான்
அணில் — அணலி

## 4.7 உணவுப் பெயர்கள்

சோறு — சோறு

| | | |
|---|---|---|
| குழம்பு | — | சாறு |
| களி | — | குரங்காட்டி |
| கேப்பை | — | கோர |
| சோளம் | — | சோழுக |
| தண்டங்கீரை | — | தொப்பி அடகு |
| கடுகுக்கீரை | — | கெடகு அடகை |
| மிளகுத்தக்காளிக் கீரை | — | ஈரப்படக |
| சேம்பங் கிழங்கு | — | சாளக்கேங்கு |
| சக்கரை வள்ளிக் கிழங்கு | — | சீனிக்கேங்கு |
| முள்ளு வள்ளிக் கிழங்கு | — | நுவரகேங்கு |
| தேன் | — | சிறுதேன் |
| | | கொம்புத்தேன் |

## 4.8 வீட்டுபயோகப் பொருள்களின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| கூடை | — | குட்டா |
| முறம் | — | வட்டி |
| உலக்கை | — | முடுதி |
| அகப்பை | — | சட்டம் |
| நாற்காலி | — | குறிஞ்சி |
| துடைப்பம் | — | தூவு |
| சிலேடு | — | சேக் ஊசி |
| உரல் | — | உரலு |
| தட்டு | — | வட்டக |
| சட்டி | — | செம்பு |

## 4.9 பொழுது

| | | |
|---|---|---|
| காலை | — | விவாட்டி |
| பகல் | — | பகல |
| சாயங்காலம் | — | அந்திக்கு |
| இரவு | — | இராவே |
| நடுஇராத்திரி | — | நடுஜாமம் |

## 4.10 பிறசொற்கள்

| | | |
|---|---|---|
| முக்காடு | — | வண்டு |
| தாலாட்டு | — | தோராட்டு |
| ஊர் | — | குடி |
| மலை | — | புல்லுத்தண்டு |

| | | |
|---|---|---|
| கல்லு | — | கெல்லு |
| சோலை | — | கானம் |
| நிலவு | — | நிலாவு |
| முழுநிலவு | — | வட்டாரம் |
| திண்ணவீடு | — | தீட்டுவீடு |
| சாவடி | — | சத்திரம் |
| அடுப்பு | — | எடுப்பு |
| வாழைமரம் | — | வாயமரம் |
| நட | — | நடவேன் |
| ஓடு | — | ஓடிப்பேன் |
| உட்கார் | — | இருவேன் |
| வாங்க | — | வேயி |
| சொல்லுவோம் | — | விளிப்போம் |
| நில்லுங்க | — | நின்வேன் |
| ஆடல் | — | ஆடுததல் |
| பாடல் | — | பாடுததல் |
| திருமணம் | — | பொண்ணு கட்டுத |
| கண்ணிவைத்தல் | — | தொடவைக்கத்தான் |
| பயப்படாதே | — | பேடிக்காதே |
| ஆசாரி | — | வன்னித்தட்டன். |

மீனாட்சி
புத்தக நிலையம்